Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 28 ■ சுடர்: 28 ■ கதிர்: 285 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆவணி 22,சனி 07.09.2013



தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்

X 5

எல்லையில் ஊடுருவல் இல்லைஇந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் விளக்கம் 09

ஆதாரங்கள் இருக்கின்றன அமெரிக்காவுக்கு ஒத்தூதுகின்றது பிரிட்டன் 11

அசத்தியது சிம்பாப்வே போராடுகிறது பாகிஸ்தான் 27


# பிரபாகரன் மாவீரன்தான் மஹிந்தவுக்கும் தெரியும்

## வல்வெட்டித்துறையில் விக்னேஸ்வரன் உரை

யாழ்ப்பாணம்,செப். 7

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு மாவீரனே. இதை நான் மட்டும் சொல்லவில்லை.

இந்த நாட்டின் ஜனாதிபதியான மஹிந்த ராஜபக்ஷ கூட பிரபாகரன் மாவீரன் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார்- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளரும் முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன்.



வல்வெட்டித்துறையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

வல்வெட்டித்துறை விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பிறந்த மண். அந்த மண்ணில் நின்றுகொண்டு நான் சொல்கிறேன், பிரபாகரன்பயங்கரவாதி அல்ல. அவர் ஒரு மாவீரன். இதனை நான் மட்டும் கூறவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட பிரபாகரன் ஒரு வீரன் என்பதனை ஏற்றுக்கொண்டுள்ளார். ஏனெனில் பிரபாகரன் இருந்த போது, 13+ என்றும் அதற்கும் மேலாகவும் தானாகவே சில அதிகாரங்களை வழங்க ஜனா திபதி முன்வந்திருந்தார். ஆனால் பிரபாகரன் இல்லாதபோது 13 மைனஸ் என்றும், பின் னர் 13 என்ற திருத்தமே இல்லை என்றும் கூறத் தொடங்கி விட்டார். பிரபாகரனை மாவீரனாக ஏற்றுக் கொண்ட தால் தான் ஜனாதி பதி மஹிந்த தமிழர்களின் பிரச்சினைக்கு சில விட்டுக் கொடுப்புகளுக்கு முன்வந் திருந்தார். ஆனால் இப்போது அதற்கு அவர் தயாரில்லை. பிரபாகரன் பயங்கரவாதி அல்ல. அவர் தமிழ் இனத்தின் விடுதலைக்காக போராடிய ஒரு வீரன்.



அண்மையில் சிங்கள ஊடகம் ஒன்று என்னை நேர் காணல் செய்தது. அப்போது "பிரபாகரன் ஒரு பயங் கரவாதி

25

### புலிகளை விசாரிக்க புதிய நீதிமன்றம்

கொழும்பு, செப். 7

தமிழீழ விடுதலைப் புலிகளின் சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்குகளை மட்டும் விசாரிப்பதற்கு புதிதாக மேல் நீதிமன்றம் ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

அனுராதபுரத்திலேயே இந்த நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. பிரதமநீதியரசர் மொஹான் பீரிஸ் இதனைத் திறந்து வைத்தார். (த-400)

### மஹிந்தவைச் சந்திக்கார் சிங்

புதுடில்லி,செப் 07

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்க நியூ யோர்க் செல்லும் இந்தியப் பிரதமர் மன் மோகன்சிங், பல நாடுகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ள போதிலும் அவர் ஜனாதிபதி மஹிந்தவைச் சந்திக்கும் திட்டம் இல்லை என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. பொதுச்சபையின் பொது விவாதம் எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகிறது.

அதில் பங்கேற்பதற்காக அமெரிக்கா செல்லவுள்ள மன்மோகன்சிங், வோஷிங்டனில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை எதிர்வரும் 27ஆம் திகதி சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார்.

இதன் பின்னர் நியூயோர்க் செல்லும் அவர், பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கெடுப்பதுடன் பக்க நிகழ்வாக, பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளார்.

பாகிஸ்தானின் புதிய பிரதமர் நவாஸ் ஷெரீப்பை அவர் சந்தித்துப் பேசவுள்ளார். மேலும் சில நாடுகளின் தலைவர்களை நியூ யோர்க்கில் மன்மோகன்சிங் சந்திக்கத் திட்டமிட்டுள்ள போதிலும், அதில் ஜனாதிபதி மஹிந்தவின் பெயர் இல்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் முடிந்த பின்னரே, ஐ.நா பொதுச்சபைக் கூட்டம் நடக்கவுள்ளதால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து, பொதுநலவாய மாநாட்டுக்கு வருமாறு நேரில் அழைப்பு விடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (த)

## இலங்கையின் எந்தப் பகுதியும் தமிழர்களின் தாயக பூமியல்ல

### கூட்டமைப்புக்குத் தேரர் சவால்

கொழும்பு, செப். 7

"வடக்கு, கிழக்கு மட்டுமல்ல, இலங்கையின் எந்தவொரு பகுதியும் தமிழர்களின் தாயக பூமியல்ல. இதற்கான சான்றுகளை நான் இரண்டு புத்தகங்களில் முன்வைத் துள்ளேன். முடிந்தால் வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகம்தான் என்பதை நிரூபிப்பதற்கு ஒரு காரணியையாவது முன்வைக் கட்டும் பார்ப்போம்."

இவ்வாறு தமிழ்த்-தேசியக் கூட்டமைப்புக்குச் சவால் விடுத்துள்ளார் பிரபல தொல்பொருள் ஆராய்ச்சியாளரும் ஆளும் தரப்பு எம்.பியுமான கலாநிதி எல்லாவல மேதானந்த தேரர்.

புலிகளின் கொள்கை

25

## நவியின் கூற்று முற்றிலும் சரியானது

### ஆமோதிக்கிறார் ரணில்

கொழும்பு, செப். 7

"இலங்கையின் சுதந்திரம் பற்றி நான் எதுவுமே பேச மாட்டேன். இங்கு எதேச்சாதிகார ஆட்சிதான் இடம்பெறு கிறது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளையும், ஐ.நா. செயலாளர் நாயகம் பான்கீ- மூனும்பகிரங்கமாகவே கூறிவிட்டனர்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற கட்சியின் 67ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்வின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் கட்சித் தலைவர் ரணில் விக்கிர மசிங்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வு ஐ.தே.கவின் தேசிய இளைஞர் முன்னணியால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

25

## கூட்டமைப்பின் பரப்புரைகளை முடக்கும் புலனாய்வாளர்கள்

### செல்வம் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, செப். 7

வன்னியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைகளை முடக்கும் நோக்கத்துடன் இராணுவப் புலனாய்வாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் தேர்தல் செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுப் பிரிவுக்கு கூட்டமைப்பு எழுத்து மூலம் அறிவித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவப் புலனாய்வாளர்களின் இந்த நடவடிக்கை தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்றுத் தெரிவித்ததாவது:-

"மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் தமிழ் மக்களின் வீடுகளுக்கு சிவில் உடையில் செல்லும் இராணுவப் புலனாய்வாளர்கள், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாணசபைக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் எவரும் பங்கேற்கக் கூடாது" என்று அச்சுறுத்தி வருகின்றனர்.

அதேவேளை, ஆளும்தரப்பின் (ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி) தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் மக்கள்

25

## ஐ.நா அலுவலகம் முன்னால் தீக்குளித்து ஈழத்தமிழர் சாவு

ஜெனிவா,செப் 07

ஐ.நா. சபை அலுவலகத்தின் முன்னால் தீக்குளித்த ஈழத் தமிழர் ஒருவர் சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் சிசன் நகரில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான செந்தில் குமரன் இரத்தினசிங்கம் (வயது -35) என்ற ஈழத் தமிழரே தீக்குளித்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 1.10 மணியளவில் இவர் ஐ.நா சபை அலுவலகம் முன்பாகத் தீக்குளித்துள்ளார்.

படுகாயமடைந்த நிலையில் சுவிஸ் பொலிஸாரால் மீட்கப்பட்ட அவர், உடனடியாக ஜெனிவா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக

25

## இறந்தே பிறந்த குழந்தை குறித்து விசாரணை ஆரம்பம்

### மருத்துவர்களின் கவனவீனத்தால் நடந்த தவறா?

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தை இறந்து பிறந்தது குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளதால் அது குறித்து விசாரிக்குமாறு குழந்தையின் பெற்றோர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர்.

வைத்தியர்களின் கவனவீனத்தால் குழந்தை இறந்ததா என்ற கோணத்தில் விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸார் இந்த விடயத்தை நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். எதிர்வரும் 12 ஆம் திகதி இந்த மனு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

குழந்தை பிறப்பதற்கு முன்னர் அதன் நிலை குறித்து வைத்தியசாலையில் சொல்லப்பட்ட விடயங்களும் குழந்தை இறந்து பிறந்தபின்னர் சொல்லப்பட்ட விடயங்களும் முன்னுக்குப் பின் முரணாக இருக்கின்றன என்று தமது முறைப்பாட்டில் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

யாழ். நகரைச் சேர்ந்த கர்ப்பவதி ஒருவர் பிரசவத்துக்காக 25 ஆம் திகதி அன்று யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார். 'அன்றையதினம் அவரைப் பரிசோதித்த மருத்துவர் சிறிதரன் 27 ஆம் திகதி

25

## நாவற்குழியில் சிங்களவருக்கு காணிகளை வழங்க முயற்சி

யாழ்ப்பாணம்.செப்.7

நாவற்குழியில் அத்துமீறிக் குடியேறியுள்ள சிங்களக் குடும்பங்களுக்குக் காணிகளைப் பகிர்ந்தளிக்கும் முயற்சிகள் திரைமறைவில் நடைபெறுகின்றன.

இதற்காகத் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கொழும்பு அலுவலக உத்தியோகத்தர்களும், கொழும்புநில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்களும் இங்கு வந்து நில அளவைப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

போர்முடிந்தபின்னர் கடந்த 2010 ஆம் ஆண்டு சிங்களக் குடும்பங்கள் சில யாழ்ப்பாணத்தில் குடியேறும் நோக்குடன் வந்தன அந்தக் குடும்பங்கள் யாழ். ரயில் நிலையத்தில் தங்கியிருந்தன.

இதன் பின்னர் நாவற்குழியில் உள்ள தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் இவர்கள் அத்துமீறிக் குடியேறினர். இதனைத் தொடர்ந்து 125 தமிழ்க் குடும்பங்களும் அங்கு அத்துமீறிக் குடியமர்ந்தன.

இந்த நிலையில் அங்கு அத்துமீறிக் குடியமர்ந்துள்ள சிங்கள மக்கள் நிரந்தர வீடுகளை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டனர். ஆயினும் அவர்களுக்கு அந்தக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு உறுதிகள் வழங்கப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கும் தெரியாமல் கொழும் பிலிருந்து வந்துள்ள நில


25

## துன்னாலை வடக்கில் 35 பவுண் கொள்ளை

வடமராட்சி. செப் .07
துன்னாலை வடக்கிலுள்ள வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் கோடரி முனையில் வீட்டு உரிமையாளரை அச்சுறுத்தி சுமார் 35பவுண் நகைகளையும், மூன்று பெறுமதிமிக்க கைத்தொலைபேசிகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர் .
இச்சம்பவம் துன்னாலை வடக்கிலுள்ள கேதீஸ்வரசர்மா என்பவரது வீட்டில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12மணிக்கு இடம்பெற்றுள்ளது.
மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் குறித்த வீட்டுக்கு அருகில் உள்ள வீதி விளக்குகளை அணைத்து பின்னர் வீட்டுக்குள் புகுந்துள்ளனர் அங்கு வீட்டு உரிமையாளரின் தலையில் கோடரியை வைத்து அச்சுறுத்தி வீட்டிலுள்ளவர்கள் அனைவரையும் அறையொன்றில் வைத்துப் பூட்டிவிட்டு அங்கிருந்த சுமார்35 பவுண் தங்க ஆபரணங்களையும் பெறுமதி வாய்ந்த மூன்று கைத்தொலைபேசிகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்
இது தெடர்பாக பருத்தித்துறை நெல்லியடிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது அங்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.
இச் சம்பவம் தொடர்பாக இது வரை எவரும் கைதுசெய்யப் படவில்லை. (த- 8- 400)

# இளைஞர் படை திரட்டி புதிய யுகம் படைப்போம்

### எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அறைகூவல்



கொழும்பு, செப். 7
"ராஜபக்ஷ அரசின் கொலைக் கலாசாரத்துக்கு இளைஞர் சக்தியூடாக முற்றுப்புள்ளி வைத்து புதிய யுகத்தை - புதிய இலங்கையை உருவாக்குவோம். அதற்காக இளைஞர் படையுடன் களத்தில் இறங்குவோம்; வேலை செய்வோம்; வெற்றிபெறுவோம்"
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் 67ஆவது ஆண்டு நிறைவு வைபவத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
நவீனமயம், சுதந்திரம், அறிவு, வேலைவாய்ப்பு இவை நான்கும்தான் ஐ.தே.கவின் புது யுகத்தின் இலட் சணங்கள்.
இவற்றை நிலைநிறுத்த அடுத்த வருடம் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் தேர்தலைப் பெற்று எமது ஆட்சியை நிலைநிறுத்துவோம் என்றும் தெரிவித்தார்.
கட்சித் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்வில் ஐ.தே.கவின் உபதலைவர் ஜோஸப் மைக்கல் பெரேரா, எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க உள்ளிட்ட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பங்கேற்றதுடன், மாகாணசபை, பிரதேசசபை உறுப்பினர்களும் கட்சி ஆதரவாளர்களும் பங்கேற்றனர்.
இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றுகையில்,
"67 வெற்றி அருகில்" ஐ.தே.கவின் தேசிய இளைஞர் முன்னணியின் ஏற்பாட்டில் கட்சியின் 67ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறோம்.
ராஜபக்ஷ அரசின் ஆட்சியில் கடந்த 2 வருடங்களில் 4 இளைஞர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் என்ன தவறு செய்தார்கள்? ஐ.தே.கவுக்கு வந்தால் மட்டுமே இளைஞர் கொலைக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.
ஐ.தே.க. என்பது புது யுகத்தின் ஆரம்பம். எமது கட்சித் தலைவர்களினூடாகத்தான் ஐ.நா.. பொதுநலவாயம் ஆகிய உலக அமைப்புகளில் இலங்கைக்கு அங்கத்துவம் கிடைத்தது. திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டு தொழில் நுட்பமும், அறிவும் வளர்க்கப்பட்டது.
எனக்கு இப்போது 60 வயது தாண்டிவிட்டது. இருப்பினும், நான் எதற்கும் அஞ்சவில்லை. எனதருகில் நல்ல சக்திமிக்க இளைஞர்கள் இருக்கிறார்கள். இவர்களின் ஆதரவுடன் 2014 இல் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தும் தேர்தலைப் பெற்று ஆட்சி அமைப்போம். ராஜபக்ஷ மயமாகியுள்ள நாட்டை நவீனமயமாக்குவோம் - என்றார் ரணில். (த-சி)

## கிளிநொச்சிக்கு சொகுசு ரயில் வந்தார் அமைச்சர் வெல்கம



கிளிநொச்சி.செப்.7
கிளிநொச்சி வரையான ரயில்சேவை எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது. இது குறித்து ஆராய்வதற்காக போக்குவரத்து அமைச்சர் வெல்கம நேற்று கிளிநொச்சிக்கு சொகுசு ரயிலில் வருகைதந்தார்
ஓமந்தையில் இருந்து கிளிநொச்சிக்கு சொகுசு ரயிலில் வந்த அமைச்சருடன் ரயில்வே திணைக்கள பொதுமுகாமையாளர் ஆரியரெட்ண உட்பட ரயில்வே அதிகாரிகளும் வந்தனர்.
கிளிநொச்சிவரையான ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது ஆரம்பித்துள்ளன. கிளிநொச்சி ரயில் நிலைய நடைபாதையை அமைக்கும் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன.
இந்த நிலையில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம மற்றும் ரயில்வே அதிகாரிகள் நேற்று சொகுசு ரயிலில் வந்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.
எதிர்வரும் 14ஆம் திகதி கிளிநொச்சிக்கு வரும் ஜனாதிபதி ரயில் சேவையை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## 270 கண்காணிப்பாளர் வடக்கில் பணி புரிவர்

யாழ்ப்பாணம்,செப். 7
வடக்கு மாகாண சபைத் தேர்தல் தினத்தன்று ஐந்து மாவட்டங்களிலும் 250 நிலையக் கண்காணிப்பாளர்களும் 20 நடமாடும் கண்காணிப்பாளர்களும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையத்தினால் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று அதன் மாகாண இணைப்பாளர் ச.மணிமாறன் தெரிவித்தார்.
வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் பணிகளில் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் மத்திய நிலையமும் ஈடுபட்டுள்ளது.
தேர்தல் தினத்தன்று வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ள தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் 250 நிலையக் கண்காணிப்பாளர்களையும், நடமாடும் கண்காணிப்பாளர்களையும் கடமையில் ஈடுபடுத்தவுள்ளது. (த-5)

## படையினரின் தபால் வாக்களிப்பிலும் தேர்தல் அதிகாரிகள் கடமையில்

யாழ்ப்பாணம்,செப். 7
இராணுவ முகாம்களில் இடம்பெறும் தபால் மூல வாக்களிப்பின் போதும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கடமையிலிருப்பர் என்று வடமாகாணப் பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சி.அச்சுதன் தெரிவித்தார்.
வடக்கு , வடமேல், மத்திய மாகாணங்களில் இடம்பெறும் மாகாண சபைத் தேர்தல்களுக்கான தபால் மூல வாக்களிப்பு நாளை மறுதினம் திங்கள்கிழமையும் மறுநாள் செவ்வாய்க் கிழமையும் இடம்பெறவுள்ளது.
தபால் மூல வாக்களிப்புக்குரிய ஏற்பாடுகள் யாவும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் தபால் மூல வாக்களிப்புக்கான தேர்தல் நடவடிக்கைகளுக்காக வெளிமாவட்ட அதிகாரிகளும் வருகை தந்துள்ளனர் என்றார்.
"தபால் மூல வாக்களிப்பு இடம்பெறவுள்ள நிலையங்களுக்குத் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் செல்லவுள்ளனர். அத்துடன் அதிகள்வான தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ள நிலையங்களில் தேர்தல் அதிகாரிகள் வாக்களிப்பு முடியும் வரை தொடர்ந்தும் கடமையில் இருப்பர்.
தபால் மூல வாக்களிப்பு நிலையங்களாகவுள்ள இராணுவ முகாம்களிலும் தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கடமையில் ஈடுபடுவர் என்றார் அச்சுதன். (த-5)

## சிறுவர் நாடக விழா

யாழ்ப்பாணம்,செப். 7
இந்த ஆண்டுக்கான அரச சிறுவர் நாடக விழா கடந்த முதலாம் திகதி தொடக்கம் கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்று வருகின்றது.
ஐம்பத்தேழு வரையிலான தமிழ், சிங்கள, ஆங்கில நாடகங்கள் நாட்டின் நாலாபாகங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டு நாடக விழாவில் மேடையேற்றப்பட்டு வருகின்றன.
இந்த நாடக விழா தொடர்ந்தும் நாளாந்தம் பிற்பகல் 5 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.
நாளை ஞாயிற்றுக்கிழமை பின்வரும் நாடகங்கள் மேடையேற்றப்படும்.
-பொத் வலின் செல்லமக்
- குறும்புக்கார முயல்
- வீ மேக் இற் பெற்றர் ஆகிய நாடகங்களும் இன்று ஏழாம் திகதி சனிக்கிழமை சிங்களத்தின் முயற்சி மற்றும் பாசம, த ஸ்ரோறி ஒவ் ஸ்கௌள அன்ட் சிமயிலர் ஆகிய நாடகங்களும் -நடைபெறும். (அ)

## ஆடு, மாடு தருவதாக அழைத்து ஏமாற்றப்பட்டனர் மக்கள்

முல்லைத்தீவு,செப். 7
ஆடு. மாடு மற்றும் கோழிகள் என்பன தருவதாகக் கூறி அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் வெறும் கையுடன் திருப்பி அனுப்பப்பட்டனர். எனினும் இதனை முற்றாக மறுத்துள்ள பிரதேச செயலர், 'திவிநெகும' தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டமே அது என்றார்.
ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாங்குளம், கற்சிலைமடு மற்றும் தண்டுவன்பகுதி மக்களே நேற்றுமுன்தினம் இவ்வாறு ஏமாற்றப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.
அண்மையில் புதிதாக சமுர்த்தி நியமனம் பெற்றவர்கள், இப்பகுதிகளிலுள்ள மக்களிடம் சென்றுகோழிகள்,ஆடு, மாடுகள் என்பன பாடசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளன எனக் கூறி விண்ணப்பப் படிவம் ஒன்றில் கையொப்பமும் வாங்கிச் சென்றுள்ளனர்.இவர்களின் செயலை நம்பித் தூர இடங்களிலிருந்து கைக் குழந்தைகளுடன் பெண்கள் உட் படப் பலர் தத்தமது பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கூடினர்.ஆயினும் அவர்களுக்கு எந்தப் பொருள்களும் வழங்கப்பட வில்லை.
மாறாக அங்கு பொதுக் கூட்டம் மட்டுமே நடைபெற்றது. இதில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் தி.சுரேஸ்குமார், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர், சுகந்த புஞ்சி நிலமேஉட்படபலரும் கலந்துகொண்டனர்.
இந்தக் கூட்டம் நிறைவடையக் காலதாமதம் ஆகியதால் தூர இடங்களில் இருந்து வந்தவர்கள் அவ்வீதி வழியாகச் சென்ற ஹன்ரர், டிப்பர், உழவு இயந்திரம் என்பனவற்றின் மூலம் பெரும் அசௌகரியங்களுடன் வீடு சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக ஒட்டு சுட்டான் பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, 'திவிநெகும' திட்டத்தின் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.
அரச அதிபரின் அறிவுறுத்த லுக்கு அமைவாக ஒழுங்குசெய் யப் பட்ட இக்கலந்துரையாட லில் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே உட்பட அமைச்சின் உயரதிகாரிகளின் பலரும் கலந்து கொண்டு திவிநெகும திட்டம் தொடர்பில் தெளிவு படுத்தினர் - என்றார். (த-4-400)

## ஆளிக்கு ஆள்கள் கடத்தல்: கடற்படை அதிகாரி கைது

கொழும்பு,செப். 07
ஆஸ்ரேலியாவுக்குப் படகில் அகதிகளை அனுப்பிய குற்றச்சாட்டின் பேரில், இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் உள்ளிட்ட ஐவர் நேற்று மாத்தறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
ஆஸ்ரேலிய சமஸ்டி பொலிஸின். மூத்த ஆலோசகர் கிறிஸ்ரோபர் வூட் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்தே, மாத்தறை பொலிஸார் இவர்களைக் கைது செய்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட இலங்கைக் கடற்படை அதிகாரி லெப். கொமாண்டர் பதவி வகிப்பவர் என்றும் திருகோணமலை கடற்படைத் தளத்தில் பணியாற்றுபவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
கடற்படை அதிகாரியை விசாரணைக்காக அழைத்த மாத்தறை பொலிஸார் அவரைக் கைது செய்துள்ளனர்.
ஆஸ்ரேலியாவுக்கு அகதிகளை அனுப்புவதில் தொடர்புடைய 3 இலங்கைக் கடற்படையினர் உள்ளிட்ட 22 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.
திருகோணமலை கடற்படைத் தளத்தில் பணியாற்றும் அதிகாரி கைது செய்யப்பட்டதை கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய உறுதிப்படுத்தியுள்ளார். (த)

# ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு அடையாள அட்டைகள் வரவில்லை

### தேர்தல் திணைக்கள அட்டையையும் வழங்க மறுப்பு

யாழ்ப்பாணம்,செப். 7
வடக்கில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையூடாக தேசிய அடையாள அட்டை பெற விண்ணப்பித்தவர்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு இது வரை அவை கிடைக்கப்பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
அத்துடன் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்ததைக் காரணம் காட்டி கிராம சேவையாளர்களும் தேர்தல் திணைக்கள அடையாள அட்டையை மக்களுக்கு வழங்க மறுத்து வருகின்றனர் என்று குற்றம் சாட்டப்படுகிறது.
இதனால் எதிர்வரும் 21 ஆம் திகதி நடக்கும் வடமாகாண சபைத் தேர்தலில் ஒரு லட்சம் பேருக்கு மேற்பட்டோர் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.
வடக்கில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் தேசிய அடையாள அட்டை இல்லாமல் உள்ளமை தொடர்பில் தேர்தல் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இவ்வாறானதொரு நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் மக்களுக்கு தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் நடமாடும் சேவைகள் தொடர்ச்சியாகப் பிரதேச செயலகங்கள் ஊடாக நடத்தப்பட்டன.
இதன் போது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பித்திருந்தனர். இவ்வாறு விண்ணப்பித்து ஒரு மாத காலம் கடந்தும் இன்னமும் அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை.
வாக்களிப்பின் போது அடையாள அட்டைகள் கட்டாயம் ஆயினும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த மக்களின் கணிசமானோருக்கு அந்த அடையாள அட்டை கிடைக்கவில்லை. இதனால் தேர்தல் திணைக்களத்தின் தற்காலிக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க அவர்கள் முயற்சித்துள்ளனர்.
தேர்தலுக்கு முன்னர் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனத் தெரிவித்து தேர்தல் திணைக்கள அடையாள அட்டையை வழங்கக் கிராம சேவையாளர்கள் மறுக்கின்றனர் என்று கூறப்படுகிறது.
தேர்தல் திணைக்கள அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் இறுதி நாள் எதிர்வரும் 10 ஆம் திகதி என்பதால் மக்கள் திரிசங்கு நிலையில் உள்ளனர். (த-5)

# பிறரை அடித்து காயப்படுத்திய குற்றம்; 14 பேர் கைது

யாழ்ப்பாணம்,செப்.7
பிறருக்கு அடித்துக் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கடந்த வாரம் 43 பேரைக் கைது செய்துள்ளதாக யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.
நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;-
சந்தேகத்தின் பேரில் 26 பேரும், மதுபோதையில் வாக னம் செலுத்திய குற்றச்சாட்டில் 8 பேரும், விபத்து ஏற்படுத் திய குற்றச்சாட்டில் 3 பேரும், சட்ட விரோதமாக மது விற் பனை செய்த குற்றச்சாட்டில் 13பேரும், சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் ஒருவரும், விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 3 பேரும், பொது இடத் தில் மது அருந்திய குற்றச் சாட்டில் 3 பேரும், பொதுமக் களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் 3 பேரும், சட்ட விரோதமாக மரம் ஏற்றிய ஒருவரும், மோசடி செய்த குற்றச் சாட்டில் ஒருவரும், அத்துமீறி வீடு புகுந்த குற்றச்சாட்டில் ஒரு வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்- என்றார். (வ-4-86)

# கடையில் பொருள்கள் கொள்வனவு செய்தவரின் கைபேசி திருட்டு


யாழ்ப்பாணம், செப்.7
கடையில் பொருள்கள் வாங்கியவர் கடையிலுள்ள மேசையில் வாங்கிய பொருள்களு டன் தனது கைத்தொலை பேசியை வைத்துவிட்டு பணத்தைச் செலுத்தியவுடன் திரும்பிப் பார்த்தபோது அவரது கைத் தொலைபேசி திருடப்பட்டதை அறிந்து அதிர்ச்சிய டைந்தார்.
இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரே கடையில் பொருள்களை வாங்கி கடையின் முன் பாக உள்ள மேசையில் வைத்து விட்டு பொருள்கள் கொள்வனவுக்கான பணத்தை செலுத்திய பின்னர் திரும்பிப் பார்த்த வேளை பொருள்களுடன் வைத்திருந்த கைத்தொலைபேசி திருடப்பட்டுள்ளதை அவதானித்தார்.
குறித்த இடத்தில் நின்றிருந்தவர்களிடம் அது குறித்து விசாரித்தபோதும் பயன் கிடைக்கவில்லை. பெறுமதிமிக்க அந்தக் கைபேசி கிடைக்கவில்லை.
இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-4)

## உல்லாசப் பயணிகள் தங்கும் ஹோட்டல்களில்

# நுகர்வோருக்கான பனை சார் உற்பத்திப் பொருள் காட்சிக்கூடம்

## பனை அபிவிருத்திச் சபை ஏற்பாட்டில்

யாழ்ப்பாணம்.செப்.7
யாழ்ப்பாணத்தில் உல்லாசப் பயணிகள் பெருமளவில் தங்கும் ஹோட்டல்களில் நுகர்வோர்களுக்கான பனை சார் உற்பத்திப் பொருள்களின் காட்சிக் கூடத்தை அமைக்க பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.
இதன் முதற் கட்டமாக யாழ். நகர் சுபாஸ் ஹோட்டகளிலும் அண்மையில் விசேட காட்சிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.
ஏனைய ஹோட்டல்களுக்கும் இந்த வருட இறுதிக்குள் விசேட காட்சிக் கூடம் அமைக்கப்படும்.
குறிப்பாக வெளிநாடு மற்றும் வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவோர் உணவு மற்றும் தங்குமிடத் தேவை களுக்கு பிரபலமான உல்லாச ஹோட்டல் களையே நாடுகின்றனர்.
அத்தகைய ஹோட்டல்களில் காட்சிக் கூடங்களில் நிறுவுதல் பனை சார் உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை வாய்ப்புப் பெற்றுக்கொள்ள முடியும்.
நுகர்வோர் இலகுவாக பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு ஏதுவாக தங்குமிடங்களில் விசேட காட்சிக்கூடங்களைஅமைக்கலாம் எனத் தீர்மானிக்கப் பட்டது நுகர்வோரின் தேவைக்கு ஏற்ப பனை சார் உற்பத்திப் பொருள்களை இந்தக் காட்சிக் கூடங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.
யாழ்ப்பாணத்தில் உள்ள பிர



பல உல்லாசப் பயணிகள் பெருமளவில் தங்கும் ஹோட்டல்களில் பனை சார் உற் பத்திப் பொருள்களுக்கான காட்சிக் கூடங்கள் அமைக்கவுள்ளன. (வ-14)

# கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், செப்.7
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி ஆசிரிய, மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை சனிக் கிழமை மு.ப.9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
பாடக் குறிப்பு, பின்னோக்குக் குறிப்பேடு, தினப்பதிவேடு, செயல் நிலை ஆய்வு தொடர்பான குறிப்பேடு என்பவற்றுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரிப் பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (வ-400)

# தேர்தலில் வாக்களிப்பது குறித்து அறிவூட்டல் அடுத்த வாரம்

## வட மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப்.7
மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பு முறை தொடர்பிலான அறிவூட்டல் நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களத்தால் அடுத்த வாரத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதாக வட மாகாண பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் சி.அச்சுதன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது;-
ஒவ்வொரு தேர்தல்களின் போது அந்தத் தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பு முறைமை வித்தியாசமானது. மேலும் வட மாகாண சபைக்கு 24 வருடங்களின் பின்னர் முதன் முறையாக தேர்தல் இடம்பெறுகின்றது.
இதனால் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பான அறிவூட்டல் கருத்தரங்குகள், ஊடகங்கள் வாயிலான விளம்பரங்கள் என்பவற்றினூடாக் விழிப்புணர்வை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம் என்றார்.
இதேவேளை அரசியல் கட்சிகள் பலவும் மக்கள் வாக்களிப்பு முறைமை தொடர்பில் தெளிவுபடுத்த தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி வந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

# விதிமுறைகளை மீறியகட்சி ஆதரவாளருக்கு நீதிமன்றால் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப்.7
தீவகத்தில் தேர்தல் விதி முறைகளை மீறி தேர்தல் சுவ ரொட்டிகளை ஒட்டிய கட்சி ஒன்றின் ஆதரவாளர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.
அவரைக் கடுமையாக எச்சரிக்கை செய்து ஊர்காவற்றுறை நீதிவான் விடுதலை செய்தார் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.
குறித்த ஒரு கட்சியின் ஆதரவாளரே தேர்தல் விதிமுறைகளை மீறி சுவரொட்டிகளை ஒட்டினார் என்று பொலிஸார் வழக்குப்பதிவு செய்து மன்றில் முற்படுத்தியிருந்தனர். நீதிவான் முன்னிலையில் சந்தேக நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து எச்சரிக்கை செய்து விடுதலை செய்யப்பட்டார். (வ-4)

## நல்லூர் ஆலயத் திருவிழா காலத்தில்

# 3 வீடுகளில் திருடர் கைவரிசை

## செய்தியாளர் சந்திப்பில் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.7
நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவை சாதகமாகப் பயன்படுத்தி மூன்று வீடுகளுக்குள் புகுந்த திருடர்களால் சுமார் 20 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டும், திருடப்பட்டும் உள்ளன என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜெப்றி தெரிவித்தார்.
நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்.சீனியர் ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் கடந்த முதலாம் திகதி நுழைந்த கொள்ளையர்கள் அங்கிருந்த வயோதிபத் தம்பதிகள் இருவரையும் கட்டிப்போட்டி வாயையும் துணியால் கட்டிவிட்டு வீட்டில் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தி 6 லட்சத்து 40ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். அங்குள்ள ஏனையவர்கள் கோயிலுக்குச் சென்றிருந்த நிலையிலேயே இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.
கோயிலுக்குச் சென்றவர்கள் வீடு திரும்பிய பின்னரே வீட்டில் கட்டப்பட்ட நிலையிலிருந்த வயோதிப உறவுகளை அவிழ்த்துவிட்டனர்.
சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.
யாழ்.பிறவுண் வீதியில் கடந்த 4ஆம் திகதி இரவு வீடு ஒன்றினுள் நுழைந்த திருடர்கள் 6 லட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைக ளைத் திருடிச் சென்றுள்ளனர்.
யாழ்.கந்தர்மடத்தில் உள்ள வீடு ஒன்றினுள் கடந்த 4ஆம் திகதி பகல் நுழைந்த திருடர்கள் 6 லட்சத்து 27 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர். வீட்டுக்காரர்கள் கோயிலுக்குச் சென்றிருந்தபோதே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.
சுன்னாகத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் அணிந்திருந்த 2 பவுண் நிறையுடைய சங்கிலியை மோட்டார் சைக்கிளில் சென்றவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.
மானிப்பாயில் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிள் திருடப்பட்டுள்ளது. சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.
நீர்வேலி தெற்கில் வீட்டிலிருந்தவர்கள் கோயிலுக்குச் சென்றிருந்த வேளை அவர்களின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் 23 ஆயிரத்து 500 ரூபா பெறு மதியான பொருள்களைத் திருடிச் சென் றுள் ளனர். பெரியளவிலான திருட்டுக்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்பட வில்லை-என்றார். (வ-4-86)

# கள்ளுத் தவறணையில் அட்டகாசம் புரிந்த கும்பல்

யாழ்ப்பாணம்,செப்.7
கள்ளுத் தவறணை ஒன்றுக்குள் சென்ற கும்பல் ஒன்று அங்கு கள் நிரப்பி வைக்கப்பட்டிருந்த 345 போத்தல்களையும் அடித்து உடைத்து 25 ஆயிரத்து 650 ரூபா நட்டம் ஏற்படுத்தியுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் அச்சுவேலியில் கடந்த முதலாம் திகதி இரவு இடம்பெற்றது.
சம்பவம் இடம்பெற்ற போது கள்ளுத்தவறணையில் அதன் உரிமையாளர்கள் எவரும் அங்கு இருக்கவில்லை. சில தினங்களின்பின் உரிமையாளர் சென்றிருந்தபோதே சம்பவம் குறித்து அவருக்கு விடப்பட்டிருக்கவில்லை தெரியவந்தது.
கள்ளு அடைக்கப்பட்ட போத்தல் எதுவும் மீதமாக அனைத்தும் நொருக்கப்பட்டு கள்ளும் வீணாக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-4-86)



**Physics**
A/L - 2014 புலங்கள்
ஆரம்பம்:08.09.2013 ஞாயிறு 2-4pm
இடம்:NEW SCIENCE CENTER
JAFFNA TOWN
திரு.ம.ஸ்பெல்மன் (BSc) 0776116724

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# விக்கிரகத்தை உடைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

## யோகேஸ்வரன் எம்.பி.வேண்டுகோள்

மட்டக்களப்பு.செப்.7

தம்புள்ள பிரதேசத்திலுள்ள பத்திரகாளி அம்மன் ஆலயத் தின் விக்கிரகத்தை உடைத்த வர்களை சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப் பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தம்புள்ள பிரதேசத்திலுள்ள பத்திரகாளி அம்மன் ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட் டமை குறித்து ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள மனுவிலேயே இவ்வாறு கோரியுள்ளார்.



இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தம்புள்ள பகுதியில் கடந்த பல வருடங்களாக இருந்து வந்த தம்புள்ள பத்திரகாளி அம்மன் ஆலய மூல விக்கிரகம் ஒரு சில தினங்களுக்கு முன் உடைக்கப்பட்டு வீசப்பட்டதுடன், உடமைகளும் சூறையாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் நாட்டில் வாழும் இந்து மக்களை வேதனைப்படுத்தியுள்ளது.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் இந்து, பௌத்தம், இஸ்லா மியம், கிறிஸ்தவ மதங்கள் மிக நீண்டகால வரலாறு கொண்டவை.

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் இந்துக்களுக்கு அந்த நாடுகள் கிறிஸ்த வத்தை பெரும்பான் மையைக் கொண்டிருந்தாலும் அந்த நாட்டில் குடியமரும் மக்களின் மதவழிபாட்டுக்கு அனுமதி வழங்குகின்றன.

இந்துக்களைப் பொறுத்தவரை அவர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். இதனை பௌத்த புனித நூலான மகாவம்சம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த மக்களின் வழிபாட்டு தலங்களை இடிப்பதும், விக் கிரங்களை உடைப்பதும் அவர்களை அவர்களது வாழிடங்களில் இருந்து விரட்டி அடிப்பதும், ஒரு ஜனநாயக நாட்டுக்கு பொருத்தமானதாக அமையாது; இதை யாரும் ஏற்றுக் கொள்ளவும் மாட்டார்கள்.

எனவே தம்புள்ள பத்திரகாளி அம்மன் ஆலய விக்கிரகத்தை உடைத்தவர்களைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

இந்த ஆலயத்தை புனர மைத்து அங்கு வாழும் இந்து மக்களுக்கு வழிபாட்டு உரி மையை பெற்றுக் கொடுக்க வேண்டும். எனவே அங்கு வாழும் தமிழ் மக்களை பாதுகாக்க இந்த நாட்டின்

## மரண அறிவித்தல்

### திருமதி யேசுதாசன் வினிபிறட் (வினி)



குருநகரைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யேசுதாசன் வினிபிறட் (வினி) கடந்த 02.09.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யேசுதாசனின் (இளைப்பாறிய ஆசிரியர், அஞ்சலதிபர், எழுது வினைஞர் P.W.D) அன்பு மனைவியும் ஐறீன், கௌரி, காலஞ்சென்ற அன்ரன் மற்றும் பீலிஸ்குமார், சில்வெஸ்டர் (சேகர்) ஆகியோரின் அன்புத் தாயும் அன்றுயோசப், காலஞ்சென்ற சுதர்மசீலன் மற்றும் மதி, கர்த்தறின், சுனித்தா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பேரூட் மற்றும் யூட் லக்ஸ்மன், வெஸ்லி, கிரிசாந்தி, சோகான், சுஜீவா, சுலக்ஸன், ரம்மியா, சோதியா, சோளன், ஸ்ரீபன், அன்ரன், றேபேக்கா, எட்ரியானா, மத்தியூஸ், சூசன்னா, சாமுவேல், ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜெசி, ஜோடான், சாமுவேல், கிறிஸ்ரோபர், ஜோவேல், ஜோசுவா, ஈத்தன், ஜோனத்தன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான கிறிஸ்பின், அல்வினஸ், நோபட், கிறிஸ்ரி, லில்லி, ஜெமையின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்ராசா மேரிதயாபரத்தின் (பூமணி) மைத்துனியும் டெய்சீ, லூட்ஸ், புஸ்பம் (அமல்) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் இருந்து இன்று (07.09.2013) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

20, சென்.ஜேம்ஸ் கிழக்கு வீதி,
குருநகர்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தையல்நாயகி செல்வத்துரை

உரும்பிராய் அரச வீதியைச் சேர்ந்த திருமதி தையல்நாயகி செல்வத்துரை நேற்று (06.09.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பையா செல்வத்துரையின் அருமை மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2013) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரச வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (சி11920-23-14-16)

தகவல்:
தம்பையா செல்வத்துரை
(கணவர்)

### பொன்னம்பலம் அருளானந்தராஜா



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் 22/2, விதானையார் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் அருளானந்தராஜா நேற்று 06.09.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்- கண்மணியின் புதல்வரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் தனலக்சுமி (லண்டன்), கனகாம்பிகை (சுவிஸ்), யோகேஸ்வரி (சுண்டுக்குளி), ஜெயலக்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இந்திராஜா (கந்தர்மடம்), இந்திராணி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2013) சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுண்டுக்குளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

22/2, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

தகவல்: சுதர்மன்
(மருமகன்)0777153571

நாளை
தகவல் தொழினுட்ப கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை
Mega
ஸ்கொலர்ஷிப்
8.09.2013 ஞாயிறு
யாழ்ப்பாணம் 021 2225677
நெல்லியடி 021 2262399
சாவகச்சேரி 021 2270267
கிளிநொச்சி 021 2283625
வவுனியா 024 2226050
Win 75%
CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
யாழ். நகர், சாவகச்சேரி, நெல்லியடி, கிளிநொச்சி மற்றும் வவுனியா பயிற்சி மையங்களில் இலவச அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

**வீடு வாடகைக்கு**
மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 5 அறைகள் இரண்டு குளியலறைகளுடன் வீடு வாடகைக்கு உண்டு. அத்துடன் வீட்டுத் தளபாட பொருள்கள், குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், குளிரூட்டி (A/C), மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
(2747-23-14-16) 0774766740

**லொறி விற்பனைக்கு**
Ashok Leyand Cargo Tipper, 1 Owner
16.2 tons, LK xxxx 16 0000km
விற்பனைக்குண்டு. (C/11909) (7.6.3)
தொடர்பு: 077 153 0982

**காணி விற்பனைக்கு**
தெல்லிப்பழை புகையிரத நிலையத்துக்கு முன்பாக அரசினர் வைத்திய சாலைக்கு 200 மீற்றர் தூரத்தில் 2 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
0776146501- 021 490 0836

**விற்பனைக்கு**
8, 10, 12 அடி வீட்டுத் தூண் அரியும் இரும்பு அச்சு, வேலித்தூண் அரியும் இரும்பு அச்சு, பூக் கல் அரியும் இரும்பு அச்சு, மரம் அரியும் றோதவால் பட்டடை எஞ்சினுடன் விற்பனைக்குண்டு. (31536) (23-14-16)
தொடர்பு:0777168040

**வீடு வாடகைக்கு**
324/11, மானிப்பாய் வீதியில்
(ஐந்து சந்திக்கு அருகில்)
3 அறைகளுடன் சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு உண்டு. (31532-23-14-16)
தொடர்பு-0776645266

**வீடு வாடகைக்குண்டு**
பலாலி வீதி, கோண்டாவில் டிப்போக்கும் உரும்பிராய் பெற்றோல் சந்திக்குமிடையில் இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு.
(31539-23-14-16)
தொடர்புகளுக்கு: 0776146253

**தவறிவிட்டது**
இணுவில் தெற்கு, இணுவில் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா என்பவரது தேசிய அடையாள அட்டை (942062699V) நல்லூர் திருவிழாவிற்குச் சென்று வரும்போது கே.கே.எஸ். வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அண்ணா பாம் இணுவில் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். 021 7200 900

**விற்பனைக்கு**
நல்ல இன பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு 0775127800 - 021 4922950

## மணி விழா நாயகனை மனதார வாழ்த்துகின்றோம்

### சின்னத்துரை சோதிலிங்கம்

(பிரதி அதிபர்-யா/ வாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)




மணிவிழாக் காணும் நல் ஆசான் சோதிலிங்கம் தன்னலம் கருதாது கல்விப் பயிர் வளர்த்தோன் மாணவரின் கல்வித்தரம் உயர கலங்கரை விளக்காகி கல்விச் சுடரேற்றி நல் நெறியும் போதித்து பல்கலை செல்வதற்கும் நல்வழிகாட்டியாய் இருந்து மாணவர்கள் பலர் இன்று நல்நிலையில் வாழ்வதற்கு அத்திபாரம் இட்டுத் தந்த பெருந்தகையோன் இனிவரும் காலங்களிலும் நன்றே புரிந்து குடும்பத்தினருடன் இனிதே நீடு வாழ சிவகாமி அம்பாளின் பேரருள் வேண்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

(31529-23-14-16)

07.09.2013
இணுவில்

வாழ்த்துவோர்
ஆசானின் வழிகாட்டலில் உயர்ந்த இணுவைப்பூர் மாணவர்கள்

## முதலாம் ஆண்டு நீங்கா நினைவினிலே

அன்னை மடியில்
15.03.1939



இறைவன் அடியில்
17.09.2012

அமரர்
### வேலுப்பிள்ளை குழந்தைவேலு
(செட்டியார்)

திதி : துதியை 07.09.2013 சனிக்கிழமை

ஆண்டொன்று போனதுவே பப்பா...
ஆனாலும் உம் நினைவு ஆறாது பப்பா...
அழுதழுது கண்கள் உலர்ந்தனவே பப்பா...
அவனிக்கு மீண்டும் வரமாட்டீரோ பப்பா...
ஆண்டவன் படைப்பதில் அழிப்பும் நியதி...
ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம் பப்பா...
ஆண்டவனாய் எமக்கிருந்தீர் பப்பா...
ஆரத்தொழுது அழுது அஞ்சலிக்கின்றோம் பப்பா...

(C/11914) (7.6.3)

கண்டி வீதி,
மீசாலை மேற்கு, மீசாலை.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

# வரலாற்றுத் தவறுகளை நாம் மீண்டும் மீண்டும் செய்யக்கூடாது

## கூட்டமைப்பின் மன்னார் வேட்பாளர் அஸ்மின் ஐயூப்

நேர்காணல் :
தி.அமுதன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடமாகாணத்தில் போட்டியிடும் ஒரே ஒரு முஸ்லிம் சகோதர வேட்பாளர் அஸ்மின் ஐயூப். இவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து 1990 ஆம் ஆண்டு முஸ்லிம் மக்கள் வெளியேற்றத்தின்போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியிருந்தார். அது வரையிலான ஆரம்பக் கல்வியை யாழ். மத்திய கல்லூரியிலும், அதன் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் இடப்பெயர்வின் பின்னர் கொழும்பு இந்துக் கல்லூரியிலும் கற்றார். அரபு கலாபீடத்தில் பட்டப்படிப்பை முடித்துள்ள அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் சிறப்புப் பட்டமும் பெற்றுள்ளார்.

1994 ஆம் ஆண்டு வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான மாணவர் அமைப்பில் இணைந்தார். 2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரைக்கும் ஆபிரிக்காவின் சிசெல் நாட்டில் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் பணியாற்றியுள்ளார்.

வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியமர்வை முன்னெடுக்கும் முகமாக யாழ். - கிளிநொச்சி முஸ்லிம் அமைப்பு நிறுவப்பட்டு அதன் ஸ்தாபகர்களுள் ஒருவராகச் செயற்பட்டுள்ளார்.

விழுமிய அரசியலை நோக்கமாக கொண்ட நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுசைத் தொடர்ந்து வடக்கில் மன்னார் மாவட் டத்தில் அஸ்மின் ஐயூப் போட்டியிடு கின்றார். அவருடனான நேர்காணல் இங்கே பிரசுரமாகிறது.

*கே:கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் முடிவில் முஸ்லிம் - தமிழ் உறவு சீர் செய்யப்படுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தும் முஸ்லிம் தலைமைகளால் அது தவறவிடப் பட்டது. இவ்வாறானதொரு நிலையில் வடக்கு மாகாணத்தில் இந்த உறவை எவ்வாறு சீர் செய்யப் போகின்றீர்கள் ?*

ப: தமிழ் - முஸ்லிம் உறவு புதிதாக தொடங்கப்பட வேண்டிய ஒன்றல்ல. இரண்டு இனங்களும் தனித்தனியான தேசிய இனம். இருப்பினும் இரு சமூகங்களும் பொதுவான பிரச்சினைகளை எதிர்நோக்கிய, ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்த இனம். இந்த உறவைச் சீர்குலைக்க இரு தரப்பிலும் பல கட்டங்களில் ஒரு சில நிகழ்வுகள் நடந்துள்ளன.

இந்த உறவைச் சீர்குலைக்க மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகளை அந்தக் கால கட்டங்களில் இரு தரப்புகளுமே சீர்செய்யவில்லை. கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களால் தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் சரி, வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் சரி இவற்றையெல்லாம் சீர்செய்யக் கிடைத்த வாய்ப்புக் கிழக்கு மாகாண சபை தேர்தல் முடிவு. அரசுக்கு எதிராகவே முஸ்லிம் காங்கிரஸ் பிரசாரம் செய்தது கிழக்கு முஸ்லிம் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டும் என்பதை முஸ்லிம் மக்கள் விரும்பினார்கள். ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பையும் நிராகரித்து ஒட்டுமொத்த வியாபாரமாக மஹிந்தவுக்கு முட்டுக் கொடுத்தார் ஹக்கீம். இத்தனைக்குப் பிறகும் அவர் அதனை நியாயப்படுத்துகின்றார். வார்த்தை ஜாலங்களால் முஸ்லிம் சமூகத்தை பிழையாக வழி நடத்துகின்றார்.



இதனால்தான் வடக்கில் மாற்றத்தை ஏற்படுத்தி அதன் தாக்கம் கிழக்கில் எதிரொலிக்கும் போதுதான் இவ்வாறான பிழையான நிலைப்பாடுகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை மீட்க முடியும். இதற்கான ஒரு சந்தர்ப்பமாகவே வடமாகாண சபைத் தேர்தலில் நல்லாட்சிக்கான மக்கள் இயக்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கைகோர்த்துள்ளது.

இந்த இணைவை கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்கள் வரவேற்றுள்ளனர். எனவே இது ஒரு நல்ல சமிக்ஞை. எதிர்வரும் காலங்களில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் - தமிழ் மக்களுடன் முஸ்லிம் சமூகம் இணைந்து செயற்படுவதற்கு இந்த இணைவு வழிகோலும்.

*கே:முஸ்லிம் வேட்பாளர்கள் பலர் அரச தரப்பில் இணைந்து போட்டியிடுகின்றனர். இல்லாவிட்டால் அரசுக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிடுகின்றனர். அரசை எதிர்க்கின்ற அணியில் நீங்கள் மாத்திரம் தான் முஸ்லிம் வேட்பாளராக களமிறங்கியுள்ளீர்கள். இவ்வாறனதொரு நிலையில் முஸ்லிம் சமூகம் உங்களை ஆதரிக்குமா ?*

ப:உடனடி மாற்றம் சாத்தியமில்லை. இருப்பினும்தமிழ்மக்களுடன் இணைந்து வாழ்வதற்கு முஸ்லிம் மக்களில் பெரும்பாலனவர்கள் விரும்புகின்றனர்.

1994 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடக்கு முஸ்லிம்களை மையப்படுத்தி வேலைத் திட்டத்தை முன்னெடுத்தது. 1990 ஆம் ஆண்டு முஸ்லிம் மக்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டு அவர்கள் அல்லற்பட்டுக் கொண்டிருந்த போது கைகொடுக்காத முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலை மையப்படுத்தி செயற்பட்டு வெற்றியைப் பெற்றுக் கொண்டது. அதிலும் எங்களது வாக்குகளைப்பயன்படுத்தி புத்தளத்தைச் சேர்ந்தவரே நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார்.

1994 ஆம் ஆண்டிலிருந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் பின்னர் வந்த ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸும் எங்கள் மக்களின் அடிப்படைபிரச்சினை களைப் புறந்தள்ளி, சலுகை அரசியல் மாயைக்குள் அமிழ்த்தி வைத்திருக்கின்றனர். தேர்தல் காலங்களில் அச்சுறுத்தல் விடுக்கின்றனர். உங்களுக்கான வேலைவாய்ப்புகளைத் தரமாட்டோம் என்றும், உங்களுக்குக் கிடைக்கும் வீட்டுத் திட்டத்தை நிறுத்தி விடுவோம் என்றும் மிரட்டி முஸ்லிம் சமூகத்தை தம்பக்கம் வைத்துள்ளனர். இவர்களின் இந்த மிரட்டல் மாயைகளிலிருந்து முஸ்லிம் சமூகத்தை உரிமை அரசியலுக்கு அழைத்து வர வேண்டும் மன்னார் மாவட்டத்தில் எங்களுக்கு கணிசமான முஸ்லிம் மக்களின் வாக்குகள் கிடைக்கும். எங்களின் முயற்சிகள் ஊடாகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சி ஊடாகவும் இது விரைவில் சாத்தியமாகும்.

*கே:கடந்த காலத்தில் மாத்திரமல்லாமல் தற்போதும் தமது இருப்புக்காக முஸ்லிம் சமூகத்தை வடக்கில் குடியேற்ற ஒரு சில அமைச்சர்கள் முயற்சிக்கின்றனர். இது தமிழ் மக்களிடையே எதிர்ப்பை தோற்றுவிக்கின்றது. இவ்வாறான தமிழ் - முஸ்லிம் உறவைச் சீர்குலைக்கும் முயற்சிகளை நீங்கள் எவ்வாறு கையாளப் போகின்றீர்கள் ?*

ப:இந்தக் குடியேற்ற விடயங்களுக்கு மூல காரணம் காணிப் பிரச்சினை. காணிப் பிரச்சினை தொடர்பில் தெளிவான நிலைப்பாட்டில் நாங்கள் இருக்கின்றோம். 1980 களின் பின்னர் முஸ்லிம் மக்களுக்கு அரச காணிகள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளன. தமிழ் மக்களுக்கும் அதே போன்றதொரு நிலைதான் இருந்தது. முஸ்லிம்களுக்கு குடியேற்றத் தேவை இருக்கின்றது. இதற்கு அரச காணிகள் பயன்படுத்தப்பட வேண்டும். சட்ட ரீதியான ஒழுங்குகளுக்கு அமைவாக காணிகள் பங்கிடப்படல் வேண்டும். முஸ்லிம் மக்களுக்கு காணிகள் தேவை என்பதை மறுக்க முடியாது. அவர்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டியவர்கள் தான். இதற்காகச் சட்டரீதியற்ற முறை யிலோ அல்லது விசேட ஏற்பாடுகள் ஊடாகவோ எதனையும் செய்யக் கூடாது. தமிழ் மக்களுக்கு

(08 ஆம் பக்கம் பார்க்க)


வடமாகாண சபைத் தேர்தல் - 2013
கற்கக் கசடற
Learn Excellently
பிரபல எழுத்தாளரும் வெளியீட்டாளரும்
ஆசிரியரும் உலகத் தமிழ்
மொழி பெயர்ப்புக்கருவியின் ஆலோசகரும்
யாழ்மாவட்ட வேட்பாளர்
A.M.K. தில்லைமோகன்
X 4 Omos
ஜனநாயக ஐக்கிய முன்னணி
போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம்



தேசியத்துக்கென்று துணிந்து
தமிழ்த் தேசியத்துக்காக குரல் கொடுக்க
11 X
பாலா
X





வடக்கு மாகாணசபைத் தேர்தல் - 2013
மாணிக்கசோதி
அபிமன்னசிங்கம்
14
(மல்லாகம்ரவி)
சுயேச்சைக் குழு - 6



வடமாகாண சபைத் தேர்தல் 2013
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
யாழ் மாவட்ட வேட்பாளர்
பா.சஜீபன் (ஆசிரியர்)
(அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயம்,
தலைவர் யாழ் மாவட்ட இளைஞர் அணி.)
X 17
ஆசிரியரின் ஒரு வாக்கு
இன்னொரு ஆசிரியருக்காகவும்
இருக்கட்டும்
- ஆசிரிய நண்பர்கள்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த
தமிழர் தாயகத்தில் சுயாட்சி தமிழ் அரசை நிறுவுவோம்!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
எம்.கே.சிவாஜிலிங்கம்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
9 X
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி




| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |


வடமாகாண சபைத் தேர்தல் 2013
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்
யாழ் மாவட்டம் (இலங்கை தமிழரசுக் கட்சி)
சீ.வீ.கே. சிவஞானம்
துணைப் பொதுச் செயலாளர்
(இலங்கைத் தமிழரசுக் கட்சி)
ஓய்வு நிலை மாநகர ஆணையாளர்
பட்டயச் செயலாளர்
X 8
உங்களுக்குத் தெரிந்தவர்
உங்களைத் தெரிந்தவர்
உங்களோடு வாழ்பவர்
சலுகைக்கு முடிவும்
உரிமைக்கு விடிவும்!!!



# இந்துக்களது பிரச்சினைக்கு தீர்வுகாண கரம்கொடுங்கள்

## ஐ.தே.க.வேட்பாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 7

யாழ்ப்பாணத்தில் வாழும் இந்து மக்கள், உரிமையோடும் பலத்தோடும் வாழ அதற்காகக் குரல் கொடுக்கும் 'நாம் இந்துக்கள்' அமைப்பினருக்கு ஆதரவு வழங்க வேண்டும். இவ்வாறு கேட்டுள்ளனர் ஐ.தே.க. கட்சியில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள்.

இது குறித்து நாம் இந்துக்கள் அமைப்பு சார்பாக அதன் செயலாளர் எஸ்.துஷ்யந்தன் தெரிவித்ததாவது;

ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக வட மாகாண சபைத் தேர்தலில் யோ.துஷ்யந்தன், கா.தனிஸ்குமார், இ.நாகேந்திரராசா ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

குடாநாட்டில் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட இந்துத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இந்துக்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும்.

சமய ரீதியாக இந்துத் தமிழர்கள் எதிர்நோக்கும் சவால்களையும், பிரச்சினைகளையும் களைந்து இந்துத் தமிழர்களை ஐக்கியப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

குடாநாட்டில் 4 லட்சத்துக்கும் மேற்பட்ட இந்துத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இந்துக்களின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும்.

கட்சியின் சின்னம் என்பதைவிட எங்களது எண்ணமே முக்கியமானது. நாம் எந்த அரசியல் கட்சிகளுக்கும் எதிரானவர்கள் அல்ல. 'அன்பே சிவம்' எனப் போதிக்கும் இந்து மதத்தின் அகிம்சை வழியே எமது வழி- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# இனத்துக்காக உயிர் நீத்த உத்தமர்களின் தியாகத்தைப் போற்ற டக்ளஸை ஆதரிக்கட்டாம்



வடமராட்சி,செப்.7

இனத்துக்காகப் போராடிய எமது இளைஞர், யுவதிகளின் தியாகங்கள் வீண் போகக் கூடாது. இந்த இழப்புக்களை அர்த்தமுள்ளதாக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேட்பாளர்களுக்கு வாக்களியுங்கள்.

இவ்வாறு கோரியுள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யாழ்.மாவட்ட வேட்பாளர் ஸ்ரீ ரங்கேஸ்வரன்.

பருத்தித்துறை தம்பசிட்டியில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் குற்றவாளி என்று எல்லோராலும் அடையாளப்படுத்தப்பட்ட சரத் பொன்சேகாவுக்கு கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரியதில் இருந்து அவர்களது நிலைப்பாட்டை மக்கள் புரிந்து கொள்வார்கள். வாக்குக்களை அபகரிக்கவே கூட்டமைப்பு இப்போது தேர்தல் பரப்புரை செய்கிறது. இவற்றையெல்லாம் மக்கள் நன்கு உணர்வார்கள்.

எனவே வடக்குத் தேர்தலில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வாக்களித்து அவரது கரங்களைப் பலப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ-8)












தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கிய தேர்தல் பரப்புரையில் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஈடுபட்டுள்ளார். நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அவர் உரையாற்றினார். (ஐ-6)

## சுடப்பட்ட ஆதரவாளருக்கு மீண்டும் அச்சுறுத்தல்

சாவகச்சேரி.செப்.7

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் சர்வானந்தாவின் ஆதரவாளர் நேற்று முன்தினம் இரவு வைத்தியசாலையில் வைத்து இனந்தெரியாத நபரினால் அச்சுறுத்தப்பட்டார் என்று பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

அண்மையில் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் கனகசிங்கம் நந்தகுமார் படுகாயமடைந்தார்.

அவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவ ரைச் சுட்டார் என்ற சந்தேகத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணியின் மற்றொரு வேட்பா ளரான அங்கஜனின் தந்தை இராமநாதன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு வைத்தியசாலையின் பின் பகுதியால் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் வைத்தியசாலை விடுதிக்குள் சென்று அவரை அச்சுறுத்தினார் என்றும், கூக்குரலிடவே அந்த நபர் தப்பி ஓடிவிட்டார் என்றும் சாவகச்சேரி பொலிஸாரிடம் முறையிடப் பட்டுள்ளது.

அச்சு றுத்தலுக்குள்ளானவரிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர். (ஐ-400-9)

# இது உரிமையை வெல்லும் களம்

## கூட்டமைப்புக்கு வாக்களித்து அதை நிரூபிப்போம் என்கிறார் மனோகணேசன்

யாழ்ப்பாணம், செப். 7

வடக்கு தேர்தலில் ஆட்சி அமைப்பதைவிட உரிமையை வென்றெடுக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிடுகிறது.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக கூட்டமும் கிளிநொச்சி நகருக்கான பிரசாரக் கூட்டமும் நேற்று முன் தினம் கிளிநொச்சியில் நடைபெற்றன.

இதில் கலந்து கொண்ட ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் சிறப்புரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடமாகாண சபைத் தேர்தலில் உங்கள் வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கி வடக்குத் தேர்தலில் வெற்றியை நிலை நாட்ட வேண்டும்.

வடக்குத் தேர்தல் வெற்றியென்பது வடக்குக்கு மட்டுமான வெற்றியல்ல. இந்த வெற்றியானது மலையகத்தில் வாழக்கூடிய, கிழக்கில் வாழக்கூடிய தென்னிலங்கையில் வாழக் கூடிய, வடக்குக்கு வெளியே வாழக் கூடிய உலகம் முழுவதுக்குமான தமிழர்களின் வெற்றியாக அமையும்.

இதன் மூலம் தான் நாம் எமது உரிமை களை நிலைநிறுத்த முடியும்.

இங்கு நடைபெறவுள்ள தேர்தல் தமிழர்களின் ஆட்சிப் பொறுப்புக்குரிய தேர்தலாக அமைந்துள்ளது.

இலங்கை இனவாத அரசு வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களைக் காட்டி அதனைத் தடுத்து வந்தது. தற்போது சர்வதேச அழுத்தங்களின் காரணமாக இந்தத் தேர்தலை நடத்துகிறது.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்று தனது திறமையை நிலைநாட்ட வேண்டும். இதுவே நாம் இழந்த உரிமையைபெற்றுக்கொள்ள அடித்தளமாக அமையும்.

இது ஆட்சியமைத்துக் கொள்ள போட்டியிடும் தேர்தல்அல்ல. உரிமையை நிலைநிறுத்தும் தேர்தல் -என்றார். (ஐ-6)













# வரலாற்றுத் தவறுகளை....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்ற காணித் தேவைகளும், முஸ்லிம் மக்களுக்கு இருக்கின்ற காணித் தேவைகளும் நிறைவு செய்யப்பட வேண்டும்.

இருப்பினும் முஸ்லிம்களுக்கு காணி தேவை என்ற கோஷத்தின் பின்னால் சிங்களக் குடியேற்றங்கள், இராணுவக் குடியிருப்புகளுக்கு காணி வழங்கல், தனிப்பட்ட நபர்களுக்காகக் காணி அபகரித்தல் போன்ற செயற்பாடுகளுக்கு சில அமைச்சர்கள் துணை போகின்றனர். அதையும் நாங்கள் எதிர்க்கின்றோம்.

உதாரணமாக மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்திற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனை அங்குள்ள முஸ்லிம் சமூகமும் தமிழ் சமூகமும் இணைந்து எதிர்த்துப் போராட வேண்டும்.

மேலும் காணிப்பிரச்சினை தொடர்பில் எங்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் தெளிவான இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

இதனை நாங்கள் ஒழுங்காக நடைமுறைப்படுத்துவோம்.

*கே:மாகாணசபைக்கு இருக்கின்ற அதிகாரங்களையே பறிக்கின்ற அரசுக்கு முஸ் லிம் சமூகம் உடந்தையாக உள்ளதே. அதாவது கிழக்கு மாகாணத்தில் 'திவிநெகும' சட்ட வரைவுக்கு அங்குள்ள முஸ்லிம் சமூகத்தினர் ஆதரவு வழங்கியுள்ளனரே ?*

ப:முஸ்லிம் மக்களை அரசியல் ரீதியாக அறிவூட்டப்பட வேண்டும். அவர்கள் முஸ்லிம் என்ற அடையாளத்தின் அடிப்படையில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றார்கள். முஸ்லிம்களுக்கு உணர்வுப்பூர்வமான அரசியல் என்பதற்கு அப்பால் அறிவுபூர்வமான அரசிய லுக்குள் உள்வாங்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான உடன்பாடுகள் கிழக்கு மாகாணத்தில் சிறப்பான வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்தச் சாதகமான சமிக்ஞைகள் முஸ்லிம் சமூகத்தை அவர்களது உரிமைப் போரட்ட அரசியலுக்கு அழைத்து வரும். அதனை விட தற்போது தென்னிலங்கையில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களும் வேகமாக முஸ்லிம்களை உரிமை அரசியலுக்கு திருப்பும்.

> முஸ்லிம் சமூகத்திடம் இருப்பது வியாபார அரசியல். தமிழ் சமூகத்திடம் விழுமிய அரசியல் இருக்கின்றது.

*கே:தென்னிலங்கையில் முஸ்லிம் சமூகம் தொடர்ச்சியாக அடக்குமுறைக்குள் உள்ளாக்கப்பட்டுள் போதும் முஸ்லிம் அரசியல்தலைமைகள் அதற்காக ஏன் குரல் கொடுக்கவில்லை ?*

ப:முஸ்லிம் சமூகத்திடம் இருப்பது வியாபார அரசியல். தமிழ் சமூகத்திடம் விழுமிய அரசியல் இருக்கின்றது. உரிமைக்கு முன்பாக சோரம் போகாத அரசியலை தமிழ் சமூகத்திடம் நாங்கள் காண்கின்றோம். ஆனால் அதே நேரம் தமிழ் சமூகத்திடம் டக்ளஸ் போன்ற வியாபார அரசியல்வாதிகளும் இருக்கின்றனர்.

வியாபார ரீதியாக அரசியல் செய்யும் முஸ்லிம் தலைமைகள் தமது நலனை முன்னிலைப் படுத்துவார்களே தவிர. முஸ்லிம் சமூகத்தின் நலனை முக்கியத்துவப்படுத்த மாட்டார்கள். எனவே தமிழ் சமூகத்துடன் இணைந்துதான் நாங்கள் எங்கள் உரிமை அரசியலை முன்னெடுக்க வேண்டியிருக்கின்றது.

*கே:நீங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்து போட்டியிடுவதை வடக்கு முஸ்லிம் சமூகம் எவ்வாறு நோக்குகின்றது?*

ப: ஒரு சாரார் என்னைத் துரோகியாகப் பார்க்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகளாகவே முஸ்லிம் மக்களில் பெரும்பான்மையானோர் பார்க்கின்றனர். இதனை வைத்து அரசுதரப்புடன் உள்ளவர்களின் உணர்சியூட்டிய அரசியல் கருத்துகளால் என்னைத் துரோகியாகப் பார்க்கின்றனர். ஆனால் முஸ்லிம் புத்திஜீவிகள் தமிழ் - முஸ்லிம் உறவுக்கான நல்ல சந்தர்ப்பமாக பார்க்கின்றனர். தமிழ் - முஸ்லிம் உறவு புதிதாக கட்டியெழுப்பட வேண்டியதில்லையாயினும் சீர் குலைந்த உறவை சீர்படுத்தும் சந்தர்ப மாக இதனை நோக்கு கின்றனர். இருப்பினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதயசுத்தியுடன் நடந்து கொள்ளுமா என்ற சந்தேகமும் முஸ் லிம் சமூகம் மத்தியில் இல்லாமல் இல்லை.

இதனைத் தாண்டி கூட்டமைப்பின் அணுகுமுறைகளிலேயே தமிழ் - முஸ்லிம் உறவு மற்றும் எனது வெற்றி தங்கியிருக்கின்றது என்றார்.

# அபிவிருத்தி மாயையைக் காட்டி அரசு சர்வதேசத்திடம் இருந்து தப்பமுடியாது

## கூட்டமைப்பு வேட்பாளர் சர்வேஸ்வரன்



> சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு முகங் கொடுக்கும் இன்றைய இலங்கை அரசு அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டி அவற்றிலிருந்து தப்பிக்க முயற்சிக்கின்றது.

சமவுரிமை கேட்டுப் போராடியதற்காக இலங்கை அரசு எம்மீது தொடர்ந்து அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டு எம்மினத்தின் இருப்பையே கேள்விக்குறியாக்கி வருகின்றது.

இதனால் சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு முகங் கொடுக்கும் இன்றைய இலங்கை அரசு அபிவிருத்தி என்ற மாயையைக் காட்டி அவற்றிலிருந்து தப்பிக்க முயற்சிக்கின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபைத்தேர்தல்வேட்பாளர் சர்வேஸ்வரன்.

கடந்த சனிக்கிழமை வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

வடக்கு- கிழக்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை நிறுவி, எம்மினத்தை அதற்குள் கரைத்துவிடும் நோக்கில் இன ஒழிப்பு அடிப்படையிலான அரசின் அபிவிருத்தித் திட்டங்களை உலகம் புரிந்துகொண்டுள்ளது.

அதனால்தான் சர்வதேச சமூகம் அபிவிருத்தியைப் பற்றிய அரசின் புலம்பல்களைக் கண்டுகொள்ள வில்லை.

மாறாக, தமிழனத்துக்குநியாயமான நீடித் திருக்கத்தக்க அரசியல் அதிகாரத்தை வலியுறுத்தி வருகின்றது. இதற்குத் தமிழ் மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எதிர்வரும் வடக்குமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் அனைவரும்ஒருமித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதின் ஊடாக நாம் அதனை நோக்கி அடியெடுத்து வைக்க முடியும்.

தமிழர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிப்பதன் மூலம் பறிக்கப்பட்ட உரிமையை மீண்டும் நிலைநாட்டுவதில் உறுதியாக உள்ளனர் என்பதைக் சர்வதேசத்துக்கு தெளிவாக வலியுறுத்த முடியும்- என்றார். (ஐ)


















# இருப்பதையும் பறித்துக் கொடுக்கும் பச்சோந்திகளை விரட்டி அடிப்போம்

## கூட்டமைப்பு வேட்பாளர் சுப்பிரமணியம் கொதிப்பு

வலி.தென்மேற்கு, செப்.7

எமது வாழ்விடம், வாழ்வுரிமை, சுதந்திரம்என்பனவற்றைப் பறித்து, இருப்பை அழித்து அடிமைப் படுத்தப் பேரினவாத சக்திகள் முனைப்புடன் செயற்படுகின்றன. அவர்களுக்கு இங்குள்ள பச் சோந்திகள் சிலரும் துணை போகின்றனர். நாம் பட்ட துன்பங் களையும் எம்மவரின் தியாகங் களையும் நாம் அனுபவித்த வலி களையும் மூடி மறைக்க முற்படும் இனத்துரோகிகளை இனங் கண்டு ஒதுக்கி வைப்போம்.



இவ்வாறு தெரிவித்தார் வட மாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர் வி.சுப்பிரமணியம்.

"ஆசை வார்த்தை காட்டி அபிவி ருத்தி என்ற மாய வலைக்குள் மக்களை வீழ்த்தி வட மாகா ணத்தில் ஆட்சியுரிமையை பறித் துக் கொள்ள ஆர்வம் காட்டும் வஞ்சகர்களை இனங்கண்டு கொள்ளுங்கள். எமது உரி மைப் போராட்டத்தின் நெடுந் தூரப் பயணத்தில் ஒன்றுபட்டு உரிமைக்காகக் குரல் கொடுக் கும் த.தே.கூட்டமைப்பைப் பலப்படுத்த எல்லோரும் தமி ழரசுக் கட்சியின் வீட்டுச் சின் னத்துக்கு வாக்களிக்க வேண் டும்"-என்றார். (ஐ-115)

# வியாபாரக் கொள்ளையர்களிடம் வடக்கை ஒப்படைக்கலாமா?

## சிந்தியுங்கள் மக்களே! என்கிறார் கஜதீபன்

யாழ்ப்பாணம், செப்.7

இரும்பைக் களவெடுத்து வியாபாரம் செய்பவர்களும், மணலைக் கொள்ளையடித்து வியாபாரம் செய்பவர்களும் எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்க வந்தவர்களும் தமிழர்களின் அரசியல் தலைவர்களாக முடியுமா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வட மாகாண சபை வேட்பாளரும் தமிழரசுக் கட்சி இளைஞர் அணித் தலைவருமாகிய பா.கஜதீபன்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் சுன்னாகம் மத்திய பஸ் நிலையத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது;

வட மாகாண சபைத் தேர்தலில் நாங்கள் மட்டுமே தமிழ்க் கட்சியாகப் போட்டியிடுகின்றோம். ஏனையவை எல்லாம் பெரும்பான்மைக் கட்சிகள்.

எங்கள் மக்களின் வாகனங்களை இரும்பாக்கி தென் பகுதிக்கு ஏற்றுமதி வியாபாரம் செய்பவர்களும், மணலைக் கொள்ளையடித்து வியாபாரம் செய்பவர்களும், தென்னிலங்கையிலிருந்து எரி பொருள் நிரப்பு நிலையம் திறக்க இங்கு வந்தவர் களும் தமிழர்களின் அரசியல் தலைவர்களாகிவிட முடியாது.

ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்புக்காக காக்க வைக்கப்பட்டு ஏமாற் றப்பட்டனர். இது இப்போது கோயில் வீதிக்கு மாறியிருக்கிறது. எம் மக்கள் இந்த ஏமாற்றுக்காரர்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டு நடைபெறவுள்ள தேர்தலில் சரியானவர் களைத் தேர்வு செய்ய வேண்டும்-என்றார். (ஐ-5)







# தன்மானத் தமிழர்கள் என்பதை அரசுக்கு எடுத்துத்துரைப்போம்

## அறைகூவல் விடுக்கின்றார் விந்தன்

நாம் அனைவரும் தன்மானத் தமிழர்கள் என்பதை வடக்கு மாகாண சபைத் தேர்தலின் மூலம் அரசுக்கு உணர்த்த வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளரும் யாழ் மாநகர சபை உறுப்பினருமான கே.என்.விந்தன் கனகரத் தினம்.

வேலணை துறையூரில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் மக்கள் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதாகவும் அவர்களிடம் வேறெந்த அபிலாஷையும் இல்லை என்றும் வெளியுலகத்திற்குக் காட்டுவதற்கு அரசு கடுமையாகச் சூழ்ச்சிகளை மேற்கொள் கின்றது.

தமிழ் மக்களை சலுகைகாட்டி, மயக்கி தமிழர்களின் அபிலாசைகளை விலைபேசி தனக்கு வாக்களிக்க வைப்பதற்கு அரசு முயற்சித்து வருகிறது.

விலைபேசப்பட்ட சிலரை வைத்து அரசு வெளியுலகிற்கு தமிழ் மக்கள் அரசின் பின்னால் நிற்கின்றனர் என்று காட்ட முற்படுகிறது.

அதன் காரணமாகவே வடக்குத் தேர்தலில் கோடி ரூபாக்களை அரசு உருள விட்டுள் ளது.

இந்தநிலையில்தமிழ் மக்கள்விழிப்படைந்து கொள்வதுடன் தன் மானம் உள்ள தமி ழர்கள் நாம் என் பதை நிரூபித்தும் காட்டவேண்டும் - என்றார். (ஐ)













# கூடங்குளத்தில் விரைவில் மின் உற்பத்தி ஆரம்பம்

## இணை அமைச்சர் நாராயணசாமி

சென்னை, செப்.7
கூடங்குளம் அணுமின் நிலையத்தின் முதலாவது அணு உலையில் விரைவில் மின் உற்பத்தி தொடங்கும் என்று இந்திய மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார்.
டெல்லியில் அணுசக்தி குறித்த கருத்தரங்கில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய போதே நாராயணசாமி இவ்வாறு தெரிவித்தார்.
"முதலாவது அணு உலையில் சோதனை ஓட்டம் முடிந்துவிட்டது. இன்னும் 15 முதல் 20 நாள்களுக்குள் படிப்படியாக மின் உற்பத்தி தொடங்கப்படும். 2ஆவது உலையில் 95 சதவீத பணிகள் முடிந்துவிட்டன. அதில் அடுத்த ஆண்டு மார்ச் அல்லது ஏப்ரலில் மின் உற்பத்தி தொடங்கப்படும்" என்று தெரிவித்தார். (ற)

# எல்லையில் ஊடுருவல் இல்லை

## இந்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் விளக்கம்



புதுடில்லி, செப்.6
இந்தியாவின் எந்த ஒரு பகுதியிலும் சீனா ஊடுருவி ஆக்ரமிக்கும்என்றபேச்சுக்கேஇடமில்லை, அந்த வகையில் எல்லைப் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது என்று தெரிவித்துள்ளார் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி.
இந்திய மக்களவையில் நேற்று இந்தியாவின் லடாக் எல்லைப் பகுதியில் சீன ராணுவத்தினர் ஊடுருவியுள்ளனர் என்று வெளியான தகவல் குறித்து விளக்கமளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:
"இந்தியாவின் எந்த ஒரு பகுதியிலும் ஊடுருவுதலோ, ஆக்ரமித்தலோ நடைபெறாத வண்ணம் தேசிய பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்துள்ளது.
தேசிய பாதுகாப்பு ஆலோசனை சபையின் தலைவர் ஷியாம் சரண் கடந்த ஓகஸ்ட் 2 ஆம் திகதி மற்றும் 9ஆம் திகதிகளில் எல்லையோரப் பகுதிகளை நேரில் ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளார். அந்த அறிக்கையில் சீன படைகள் இந்திய எல்லைக்குள் ஊடுருவி இருப்பதாகவோ ஆக்ரமித்துள்ளதாகவோ அவர் அங்கும் தெரிவிக்கவில்லை. ஆனால் எல்லைப் பகுதிகளில் விமானம் மூலம் கண்காணிப்பு பணியை செய்ய அவர் அறிவுறுத்தியிருந்தார்" என்று தெரிவித்தார்.
எனினும் அந்தோனியின் விளக்கத்தால் திருப்தி அடையாத மக்களவை உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். அதனால் மக்களவை ஒத்தி வைக்கப்பட்டது.(ற)

# நடிகை சிந்து மேனன் தற்கொலை முயற்சி



சென்னை, செப்.7
தமிழ் திரைப்பட நடிகை சிந்து மேனன்தற்கொலைக்குமுயன்று ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
சமுத்திரம்,கடல்பூக்கள், ஈரம் உட்பட தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்தவர் நடிகை சிந்து மேனன். அவர் 2010 ஆம் ஆண்டு டொமினிக் பிரபு என்பவரை திருமணம் செய்து கொண்டார்.
இந்நிலையில் அவர் நேற்று தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார். அதையடுத்து உடனடியாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.
தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சிந்து மேனன் தொடர்ந்தும் ஆபத்தான நிலையில் இருக்கின்றார் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். (ற)

# சிரியா மீதான தாக்குதலுக்கு ஐ.நா. அங்கீகாரம் தேவை

## வலியுறுத்துகின்றார் இந்தியப் பிரதமர்

மொஸ்கோ, செப்.7
சிரியா மீது எடுக்கப்படும் எந்த நடவடிக்கையும் ஐ.நா. சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே அமைய வேண்டும். ஐ.நா. அங்கீகாரமின்றி சிரியா மீது ஒருதலைப் பட்சமாக இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுவதை இந்தியா எதிர்க்கும் என்று தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்.
ஜி-20 மாநாட்டில் கலந்துகொள்ள ரஷ்யா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அங்கு வைத்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது:
"சிரியா மட்டுமல்ல. உலகின் எந்தப் பகுதியிலும் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதை இந்தியா கண்டிக்கிறது. சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வாய்ப்புகள் இருந்தாலும் அங்கு என்ன நடைபெற்றது என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். சிரியாவில் ஆட்சி மாற்றத்தை நோக்கமாகக் கொண்ட எந்த ஆயுத ரீதியிலான நடவடிக்கையையும் இந்தியா விரும்பவில்லை. ஏனெனில் அது சர்வதேச சட்டங்களை மீறுவதாக அமையும். சிரியா மீது நடவடிக்கை எடுக்கப்பட்டே ஆக வேண்டும் என்றால் அதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை அங்கீகாரம் அளிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.(ற)

# தே.மு.தி.க. பொதுச் செயலர் தி.மு.கவில் இணைந்தார்

சென்னை, செப்.7
தே.மு.தி.க. முன்னாள் துணைப் பொதுச் செயலாளர் ஆஸ்டின், ஆதரவாளர்களுடன் நேற்றுக் காலைதி.மு.கவில் இணைந்துள்ளார்.
கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஆஸ்டின், 2006 ஆம் ஆண்டு தே.மு.தி.கவில் சேர்ந்தார்.
இந்நிலையில் கடந்த சில மாதங்களாக தே.மு.தி.க. தொடர்பான எந்தகூட்டங்களிலும்கலந்துகொள்ளாமல் இருந்த அவர், நேற்றுத் தி.மு.கவில்தனது ஆதரவாளர்களுடன் இணைந்து கொண்டார்.(ற)


# மணிவிழாக் காணும் நாயகனை வாழ்த்துகிறோம்

### கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி
### தலைசிறந்த ஆசிரியர்

திரு.சி.சோதிலிங்கம் ஆசிரியர் நீண்ட காலம் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் சேவையாற்றியவர். யா/மல்லாகம் மகாவித்தியாலயம், யா/இணுவில் இந்துக் கல்லூரி, யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் என்பவற்றில் தனக்கென முத்திரைபதித்தவர். தான் பிறந்த இணுவிலையும், தனது பெற்றோரையும் மறவாத பண்புள்ளம் கொண்டவர். இதற்கு சான்றாக சேவையாற்றிய பாடசாலைகளின் அலுவலகங்களின் பெயர் பொறித்த உருக்கு அலுமாரிகளைக் காணலாம்.

இவரின் சேவைக்காலத்தில் தலைசிறந்த ஆசிரியராகவும் பாடசாலையின் அதிபருக்கு நிர்வாக உதவியாகவும் இருந்து வந்துள்ளார். இது தவிர இவரின் சேவைக் காலத்தில் பாடசாலைப் பூந்தோட்டம் அமைத்து பராமரித்து வந்ததுடன் பாடசாலையை அழகுபடுத்துவதிலும் ஈடுபட்டுவந்துள்ளார். இறைபக்தியும் சேவையும் இவருடன் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து இருந்தது. ஓய்வுக்காலம் சிறப்புடன் அமைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**க.சண்முககுலகுமாரன்,**
M.Ed, BA, Dip in Edu, Sc.Trd., S.L.P.S
கோட்டக்கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பளை.

### யாழ் வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தில் சீரும் சிறப்பும் மிக்க வாழ்வு நிலவியதற்கு அடிப்படைக்காரணமாய் அமைந்தது கல்வியின் வளர்ச்சி ஆகும். இக் கல்வி வளர்ச்சிப் பணியில் பல ஆண்டுகள் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெறும் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய திரு. சி. சோதிலிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டி வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

பிரதி அதிபர் அவர்கள் தனது சிறந்த ஆளுமையால் சென்ற ஆண்டு மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினால் உயர் விருது பெற்று சேவையால் பெருமை பெற்ற சான்றோன். அல்லும் பகலும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் மீள் எழுச்சிக்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றியவர். அகவை அறுபதில் மணிவிழாக் கண்டு ஓய்வு பெறும் அதிபரின் சேவையை வாழ்துவதில் ஆனந்தமடைகின்றேன். மணிவிழா சிறப்புடன் நடந்தேற இணுவை காரைக்கால் அம்மனை பிரார்த்திக்கிறேன்.

"வாழி! வாழி! வாழி நீ பல்லாண்டு!"

**குரும்பசிட்டி**
**தெல்லிப்பளை.**

**துரைச்சாமி கலியுகவரதன்**
சமாதான நீதவான்
யா.வ.ம.ம.வி.பா.அ.சங்க செயலாளர்

## திரு.சின்னத்துரை சோதிலிங்கம்

(பிரதி அதிபர், SLTS-I, B.A, P.G.D.E)



### சேவை விபரம்

| | |
|---|---|
| தி/சம்பூர் மகாவித்தியாலயம் | 15.02.1982 - 14.09.1986 |
| தி/மெதடிஸ்த பெண்கள் பாடசாலை | 15.09.1986 - 14.05.1987 |
| தி/இந்துக் கல்லூரி | 15.05.1987 - 14.06.1990 |
| யா/மல்லாகம் மகாவித்தியாலயம் | 15.06.1990 - 31.12.2002 |
| யா/இணுவில் இந்துக் கல்லூரி | 01.01.2003 - 02.06.2009 |
| யா/வயாவிளான் ம.ம.வி | 03.06.2009 - 07.09.2013 |

31 வருட ஆசிரிய சேவையை செவ்வனே செய்து இன்றுடன் ஓய்வுபெறும் எமது ஆசிரியரை சீரும் சிறப்புமாக நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்,**
**யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.**

### யா / வயாவிளான் மத்திய மகாவித்தியாலய முதல்வரின் வாழ்த்துச் செய்தி

ஆசிரியராக கல்விப் புலத்தினுள் தடம்பதித்து, பிரதி அதிபராக பதவி உயர்வு பெற்று சேவைக்கென்றே தன்னை பூரணமாக அர்ப்பணித்துக் கொண்டவர் திரு.சி.சோதிலிங்கம் அவர்கள்.

யா/வயாவிளான் மத்தியமகா வித்தியாலயம் கடந்த காலங்களில் ஏராளமான வடுக்களைச் சுமந்து நின்றதனை யாம் அறிவோம். நீண்ட கால வடுக்களை குறுகிய இரண்டு வருட காலத்தினுள் கவினுறு நிலைக்கு மாற்றியமைத்தமை பிரதி அதிபரின் சேவை அர்ப்பணிப்புக்கு சான்றாகும்.

இன்று சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் பிரதி அதிபர் திரு.சி.சோதிலிங்கம் அவர்கள் பல்லாண்டு காலம் நித்திய சுகத்துடன் வாழ எல்லாம் வல்ல இணுவையூர் பரராஜசேகரபிள்ளையாரை வேண்டி நிற்கின்றேன்.

வயாவிளான் அன்னையை அவை முன்னிறுத்திய சான்றோனை நன்றியுடன் வாழ்த்துகின்றேன்.

**திரு.வே.த.ஜயந்தன்,**
அதிபர்
யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்.

(31552)(10,6)

### பழைய மாணவர் சங்க செயலாளரின் பாராட்டு

புகழ்பூத்த எமது பாடசாலையில் பிரதி அதிபர்கத் தன்னலமற்ற சேவை செய்து 2013.09.07 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.சி.சோதிலிங்கம் அவர்கள் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்கும், அவர்களிடையே நல்லொழுக்கம், பெரியோரைக் கனம் பண்ணுதல், விடாமுயற்சி தன்னம்பிக்கை ஆகிய நற்பண்புகள் வளர வித்திட்டும், அதிபர் முதல் சக ஆசிரியர்களுடனும் நன்றாகப் பழகியும் உள்ளார்.

இப்பெருந்தகை ஓய்வுபெற்றுச் சென்றாலும், இப் பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணோட்டமாக இருப்பாரென்ற நம்பிக்கை எமக்குண்டு.

பிரதி அதிபர் சீரும்சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ இறைவனை வேண்டி, எமது உளம் கனிந்த நன்றியையும், வாழ்த்துக்களையும் செயலாளர் என்ற வகையில் பழைய மாணவர்களின் சார்பில் தெரிவிக்கின்றேன்.

**திரு.செ.செல்வரத்தினம் (J.P)**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்.

# ஆதாரங்கள் இருக்கின்றன

## அமெரிக்காவுக்கு ஒத்தூதுகின்றது பிரிட்டன்

லண்டன், செப்.7

சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டமைக்கான புதிய ஆதாரங்கள் உள்ளன என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

சிரியாவின் டமாஸ்கஸ் நகருக்கு அண்மித்த பகுதியில் இரசாய ஆயுதங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அங்கிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில் பரிசோதனை நடத்தப்பட்டது. எம்மிடம் புதிய ஆதாரங்கள் சிக்கியுள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

"சிரிய விவகாரத்தில் நான் ஒருபட்சமாக நடந்துகொள்ளவில்லை. சிரியாவின் டமாஸ்கஸ் அருகில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதியில் எடுக்கப்பட்ட துணிகள் மற்றும் மண்ணில் சரின் விஷவாயு இருப்பதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்து இருக்கின்றனர்.

சிரியாவில் அமைதி திரும்பவும், அங்குள்ள பிரச்சினைகளுக்கு பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கும் நாங்கள் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றோம்" என்று தெரிவித்தார் டேவிட் கமரூன்.

டேவிட் கமரூன் ஜி-20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தற்போது ரஷ்யா சென்றுள்ளார். அங்கு செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)



அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் சிரியா மீதான இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்ற போதும், ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகள் சிரிய இராணுவ நடவடிக்கைக்கு எதிரான நிலைப்பாட்டில் கடுமையாக இருக்கின்றன. ரஷ்யா சிரியாவுக்கு ஆயுத உதவிகளை வழங்கத் தயாராக உள்ளது என்று அறிவித்துள்ள நிலையில் சிரியா மீது தாக்கு தல் நடத்தும் பட்சத்தில் அமெரிக்கா விபரீத விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஈரானும் கடுத்தொனியில் எச்சரித்துள்ளது.



சிறை பிடிக்கப்பட்ட இராணுவத்தினரை சிரியக் கிளர்ச்சியாளர்கள் தலையில் சுட்டுக் கொல்வது போன்ற காட்சிகள் அடங்கிய காணொலி ஒன்று தற்போது வெளியாகியுள்ளது. அதில் அனைத்து வீரர்களும் உடைகள் அகற்றப்பட்ட நிலையில் கைகளைக் கட்டி, தரையில் கீழே தள்ளி விடப்படுகின்றனர்.

பின்னர் அவர்களுக்குப் பின்னால் நின்று கொள்ளும் சிரியக் கிளர்ச்சியாளர்கள் , துப்பாக்கிகளால் அவர்களின் தலைகளில் சுட்டுத் தள்ளுகின்றனர். கடந்த ஏப்ரல் மாதம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. அந்தக் காணொலிக் காட்சி பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

# தாய்மொழி மறந்த சீனர்



பீஜிங், செப்.7

சீனாவில் தாய் மொழி யான மாண்டரின் மொழியை சுமார் 30 சதவீத மக்கள் மறந்துள்ளனர் என்று அந் நாட்டின் கல்வித்துறை கவலை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து கல்வித்துறை மேற்கொண்ட ஆய்வுகளி லேயே இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது.

"மாண்டரின் மொழியை 30 சதவீதமான மக்கள் மறந்து விட்டனர். அவர்கள் அம்மொழியை பேசுவதில்லை. 1998ஆம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டும் செப்ரெம்பர் மாதத்தின் மூன்றாவது வாரம் மாண்டரின் மொழியை ஊக் குவிக்கும் நடைமுறை கடைப் பிடிக்கப் படுகின்றது. எனினும் மாண்டரின் மொழியை மேம்படுத்துவதற்கு அதிகளவில் முதலீடு தேவைப்படுகிறது" என்று அந்த அமைச்சு தெரி வித்துள்ளது.

# ரூ.2,850 கோடி செலவில் குண்டு துளைக்காத சுவர்

## பாக்.பிரதமர் வீட்டுப் பாதுகாப்புக்கு

இஸ்லாமாபாத், செப்.7

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப்பின் வீட்டைச் சுற்றிலும் பாதுகாப்புக்காக 2,850 கோடி ரூபா செலவில் குண்டு துளைக்காத சுவர் ஒன்று கட்டப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது.

அண்மையில் பாகிஸ்தான் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் நவாஸ் செரீப். அவர் தற்போது ராய்விண்டில் உள்ள தனது பண்ணை வீட்டில் வசித்து வருகின்றார். அவருக்கு தலிபான் அமைப்பினரிடம் இருந்து அச்சுறுத்தல் உள்ளதை அடுத்தே வீட்டைச் சுற்றிலும் குண்டு துளைக்காத சுவரைக் கட்டும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

"பிரதமரின் இல்லமே பிரதமர் அலுவலகமாகவும் செயற்படுகின்றது. அவருக்கு தலிபான்கள் மற்றும் தீவிரவாதிகளிடம் இருந்து உயிர் அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அதையடுத்தே இந்தச் சுவர் எழுப்பும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சியின் செய்தி தொடர்பாளர் ஆசிம்கான் நியாஷி. (ற)

பெருந்தொகைச் செலவில் பிரதமரின் பாதுகாப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் பாகிஸ் தான் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. அதனைச் சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்திடம் 6.7 பில்லியன் டொலரை கடனாக இந்த்வாரம் பெறவிருகின்றது.

# எகிப்தில் குண்டுவெடிப்பு அமைச்சர் அருந்தப்பு

கெய்ரோ, செப்.7

எகிப்தில் நடத்தப்பட்ட கார் குண்டுத் தாக்குதலில் அந்நாட்டின் உள்துறை அமைச்சர் மொஹமத் இப்ராகிம் நூலிழையில் உயிர்தப்பியுள்ளார்.

தலைநகர் கெய்ரோவில் உள்ள அவரது வீட்டின் அருகே நேற்றுக்காலை இந்தக் குண்டு வெடிப்பு நடந்துள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 21பேர் காயமடைந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. குண்டு வெடிப்பில் அருகிலிருந்த கட்டடங்கள் பலவும் இடிந்து சேதமடைந்தன.

குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ள கெய்ரோ பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பற்றி இதுவரை தகவல்கள் கிடைக்கவில்லை என்று தெரிவித்துள்ளனர். (ற)

## உளவு நடவடிக்கை தொடர்பாக அமெரிக்காவிடம் விளக்கம்

### மெக்ஸிக்கோ ஜனாதிபதி

சான்பிரான்ஸிக்கோ, செப்.7

தனது தகவல் பரிமாற்றங்களை அமெரிக்கா உளவு பார்த்தது என்று வெளியாகியுள்ள தகவல்களை அடுத்து, அதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதியுடன் விவாதிக்கப்படவுள்ளது என்று மெக்ஸிக்கோ ஜனாதிபதி என்ரிக் பெனா நீய்ட்டோ தெரிவித்துள்ளார்.

ஜி-20 மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ரஷ்யா சென்றுள்ள நீய்ட்டோ அங்கு நடைபெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு மையம், மெக்ஸிகோ மற்றும் பிரேசில் நாட்டு ஜனாதிபதிகளின் மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளை உளவு பார்த்தது என்று அந்த அமைப்பின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடென் வெளியிட்ட தகவல்களை அடுத்தே இந்தப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது.(ற)



லண்டனில் நேற்றுமுன்தினம் கடும் பனிமூட்டம் காரணமாக தொடர் வாகன விபத்து சிக்கி இடம்பெற்றுள்ளது. விபத்தில் 200க்கும் அதிகமானவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன், நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. ஒன்றுடன் ஒன்று மோதிக் குவிந்துள்ள வாகனங்களை மீட்பதில் மீட்புக்குழுவினர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். (ற)

## ஆஸி. தேர்தல்: தொழிலாளர் கட்சிக்கு பின்னடைவு

மெல்பேர்ன், செப்.7

ஆஸ்திரேலியாவில் இன்று நடைபெற இருக்கும் தேர்தலில் ஆறு ஆண்டு கால தொழிலாளர் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வரும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

லிபரல் கட்சியைச் சேர்ந்த டோனி ஏபட், நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் அவையில் பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்று பிரதமராகப் பதவியேற்பார் என்றும் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

தற்போது பிரதமராக இருப்பவரும் லேபர் கட்சித் தலைவருமான கெவின் ரட்டுக்கு பின்னடைவு ஏற்படும் என்றும் அந்தக்கருத்துக்கணிப்புமேலும் கூறுகின்றது. (ற)

# இந்திய பெண் எழுத்தாளர் ஆப்கனில் சுட்டுக் கொலை

காபூல், செப்.7

ஆப்கனில் வசித்து வந்த இந்தியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் சுஷ்மிதா பானர்ஜி தலிபான்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் நேற்று உயிரிழந்தார்.

கல்கத்தாவைச் சேர்ந்தவர் 49 வயதுடைய சுஷ்மிதா பானர்ஜி. இவர் ஆப்கனைச் சேர்ந்த வர்த்தகர் ஜோன்பாஸ் கானை 1989ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். அதன்பின் சுஷ்மிதா ஆப்கானிஸ்தானில் உள்ள பக்டியா மாகாணத்தின் கரானா நகரில் வசித்து வந்தார். இந்து பெண் என்பதால் அவர் பர்தா எதையும் அணியாமல் நடமாடி வந்தார். இதனால் தலிபான்கள் அவரை அடிக்கடி அச்சுறுத்தி வந்தனர்.

தலிபான்களின் உத்தரவை இவர் மதிக்காததால் ஒழுக்கம் தவறிய பெண்ணாக இவரைச் சித்தரிக்க முயன்றனர். ஒரு கட்டத்தில் அவரை நாட்டை விட்டுத் துரத்த முயன்றனர். இதற்காக ஒரு முறை இவரைச் சிறை பிடித்துக் கொடுமைப் படுத்தி உள்ளனர். இதையெல்லாம் சுஷ்மிதா கட்டுரையாக எழுதினார்.



அவருடைய அனுபவங்கள், 2003ஆம் ஆண்டு 'எஸ்கேப் பிரம் தலிபான்' என்ற இந்திப் படமாகத் தயாரிக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் அவரது வீட்டுக்குள் புகுந்த தலிபான் அமைப்பினர் சுஷ்மிதாவின் கணவரைக் கட்டிப் போட்டுவிட்டு, சுஷ்மிதாவை வெளியே இழுத்து வந்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து ஆப்கன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# 100 தொன் மீன்கள் சீனாவில் சாவு



சீனாவின் ஹூபெய் மாகாணத்தின் பியுஹே ஆற்றில் அமோனிய கழிவுகள் கலந்ததையடுத்து அந்த ஆற்றில் இருந்த மீன்கள் அனைத்தும் உயிரிழந்துள்ளன. அதனால் அந்தப் பகுதி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். உடனடியாக அப்பகுதிக்கு வந்த சுற்றுச்சூழல் துறை அதிகாரிகள் உயிரிழந்த 100 தொன் மீன்களை சேகரித்துள்ளனர். கொட்டப்பட்டிருந்த அந்த இறந்த மீன்கள் பனித் திட்டுகள் போன்று காட்சியளிக்கின்றன. மீன்களின் இறப்புக்கு ஹூபெய் மாகாண த்தின் ஓர் இர சாயன தொழிற்சாலை மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பொரு ளாதாரத்தில் முன்னேறி வரும் சீனா இதுபோன்ற சுற்றுச்சூழல் மாசு அடையும் பிரச்சினையை சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ற)

# சமய சந்நிதிகளில்



அல்லாரை தெற்கு மீசாலை ஐயனார் ஆலயத்தின் பொங்கல் திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகும். அன்றைய தினம் இரவு பொங்கல் இடம்பெற்று, மறுநாள் காலை பூசையுடன் நிறைவுபெறும். (ந)

★ ★ ★

நாவற்குழி தூய அற்புத மாதா ஆலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கான ஆயத்த வழி பாடுகள் புதன் கிழமை மாலை 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் இடம்பெறும்.

இன்று சனிக் கிழமை காலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு திருநாட் திருப்பலியும் நடைபெறும். (ந-51)

★ ★ ★

கொழும்புத்துறை, செப்.7

ஆனைக்கோட்டை அடைக்கல மாதா ஆலய வருடாந்த திருவிழாவின் நவநாள் வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ந-135)

★ ★ ★

கொழும்புத்துறை.செப். 7

யாழ்.அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா நவநாள் ஆராதனைகளுடன் நடைபெற்று வருகின்றது. இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் மாலை திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (ந-135)

★ ★ ★

யாழ்ப்பாணம், செப்.7

அஞ்ஞனந்தாழ்வு கஸ்தூரியார் வீதி ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு திருநாள் கூட்டுத் திருப்பலியுடன் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.(ந)

★ ★ ★

வரணி, செப்.7

வரணி வடக்கு கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆவணி சதுர்த்தியை ஒட்டிய விஷேச அபிஷேகம் இடம்பெறும் இரவு விநாயகர் பெருமான் வீதி உலா வருவார்.(ந-122)

★ ★ ★

சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி பூசைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும். விசேட அபிஷேகங்களுடன் சுவாமி வீதி உலாவும் இடம்பெறும். கலாநிதி சிவஸ்ரீ கு.து. ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் ஆவணிச்சதுர்த்திப் பூசைகள் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ந)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.7

ஜி.சீ.ஈ உயர்தரம் மற்றும் கல்வியைத் திட்டமிடுவது தொடர்பான இலவச கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும், பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி நெல்லை முருகன் திருமண மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.(ந-14)

## செயலமர்வு

தென்மராட்சி, செப்.7

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் உடற்கல்வி பாட ஆசிரியர்களுக் கான செயலமர்வு இன்று சனிக் கிழமை காலை 8 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சுகிருஷ்ண குமார் அறிவித்துள்ளார்.(ந-9)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14.01.1953

மறைவு
09.08.2013



### சுப்பிரமணியம் ஆனந்தராஜா

09.08.2013 அன்று அமரத்துவம் அடைந்த K.K.S. ஐப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஆனந்தராஜா அவர்களின் பிரிவால் துயருற்றிருந்த எமக்கு அனைத்து வழிகளிலும் ஆறுதல் வழங்கியவர்களுக்கும், இறுதிநிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் தெனியம்பை அந்தியேட்டி மடத்தில் நடக்கவிருக்கும் கிரியைகளிலும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.

மனைவி,
பிள்ளைகள்- ஜெயந்தி, ரகு, அபி,
சகோதர சகோதரிகள்-
சிவராஜா, வண்ணம், சாந்தி.

(C/11910)(10,6,3)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
15.01.1949



உதிர்வு
18.09.2012

### வைரமுத்து இராசசிங்கம்

ஓராண்டு என்ன, நூறாண்டு சென்றாலும்
உங்கள் கள்ளமில்லா சிரிப்பும் எங்கள் மீது
கொண்ட நேசமும் மறக்க முடியுமா?
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இறைவனுடன்
ஒன்றித்து விட்ட எமது அன்புத் தெய்வத்தின்
நினைவில் வாடும்

செல்லப்பிள்ளையார் கோயிலடி,
சந்திரபுரம், மட்டுவில்.

மனைவி மற்றும்
உறவினர்கள்.

(31516)(40,6,3)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்மகிழ
03.01.1973

மனம் நெகிழ
07.09.2011

திருமதி
### கெங்காதேவி (சித்திரா) கிருபாகரன்

பாசத்துடன் எம்மை அரவணைத்துக் காத்தவளே
எம்மைப் பரிதவிக்கவிட்டுப் பறந்தது ஏன் அம்மா
என்றும் உம் நினைவுடன் வாழும்.

மல்லாகம்.

கிருபாகரன் (கணவர்)
யசினா (மகள்)

---

## மரண அறிவித்தல்

### மோகன் இரத்தினசபாபதி



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் லாந்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட மோகன் இரத்தினசபாபதி 05.09.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவிப்பிள்ளை- ஞானரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்சினியின் (சுவிஸ்) அன்புக் கணவரும், ரெபேக்கா, பரமேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும், இராஜேஸ்வரி (சுவிஸ்),கனகசபாபதி (சுவிஸ்), சிவகுமாரன் (உரிமையாளர்-Ambal Service Station மருதனார்மடம்), இரத்தினேஸ்வரி (சுவிஸ்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் மற்றும் பரமானந்தராசா (சுவிஸ்), ஜெகதீஸ்வரி, ஆனந்தராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆனந்தன் (சுவிஸ்), சூரியகலா (சுவிஸ்), பாமினி, பாலசுப்பி ரமணியம் (சுவிஸ்), உதயவேணி (சுவிஸ்), ஸ்ரீசண்முகராஜா (கனடா), நிறஞ்சலா (கனடா), இராஜேஸ்வரி (ஜேர்மனி) ரஞ்சி தமலர் (கனடா), தயாநிதி, சாந்தினி (கொழும்பு), கதிர்காமநாதன் (கனடா), சிவநேசன், காலஞ்சென்ற மகேசன் மற்றும் தர்சிகா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், சோதிலிங்கம் (ஜேர்மனி), பாலசுந்தரம் (கனடா), ஜெயகுமார், காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும் சிவகௌரி (கனடா), தர்மிலா ஆகியோரின் சகலனும், சுபேன், சுபிதா (சுவிஸ்), பானுகா, பானுஜன் (சுவிஸ்), சுபேக்கா, நிரோசன், நிலக்சன், நிதர்சன், விதுசன் ஆகியோரின் மாமனாரும், கௌசிகா, கீர்த்திகா, அபிநயா (சுவிஸ்), சோபிதா (லண்டன்), சுகன்ஜா, சுஷந்திகா, சுதர்மிகா, சுவேதிகா, பிருத்திகா, அருணி, அஸ்விகா, ஆர்வின் (சுவிஸ்), அர்ச்சுவினியா, கபேஷா (கனடா) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இணுவில் கிழக்கு,
அங்களப்பாய்.

(31522)(3.6.11)

தகவல்:
குடும்பத்தினர்.
077 787 2322

---

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற அலுவலக ஊழியர் - யாழ் மாநகர சபை)



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது புதுவீதி, அத்தியடியில் வசித்து வந்தவருமாகிய சுப்பிரமணியம் சண்முகநாதன் 05.09.2013 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான குமார்-இராசமணி தம்பதியரின் அருமை மருமகனும், பத்மாவதியின் பாசமிகு கணவரும், முகுந்தன் (ஆசிரியர், தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கலை), காலஞ்சென்ற குகானந்தன் மற்றும் ஜசிந்தன் (பாதுகாப்பு உத்தியோ கத்தர், தம்பசிட்டி அ.த.க பாடசாலை), சயந்தன் (ரெக்னீசியன், நஷனல் எலக்ரோனிக் சென்ரர்), துஷ்யந்தன் (காவலாளி, யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கம்சானந்தி (விரிவுரையாளர், ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி), உமாலினி (அலுவலக உதவியாளர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), புகழினி (மானிப்பாய்), காலஞ்சென்றவர்களான சந்திரப்பிரபா, ரமேஷ் மற்றும் முரளிதரன் (லண்டன்), கோபி (கனடா), நந்தா (கனடா), தாரணி (கனடா), கணேஷா (நோர்வே), பிரதாயினி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூராஜ், வர்மிஷா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (சட்டத்தரணி, புத்தூர் கிழக்கு) தெய்வநாயகி, செல்வநாயகி, பத்மநாயகி மற்றும் ரங்கநாயகி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, வைத்திலிங்கம், தங்கவேலாயுதம் மற்றும் ஜெயா, மலர், தயாபரன், ஜோதி, குணா, வவி, வவா, பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும், மது, யாழினி, கணா, சரவணன், அபிராமி, ஆரணி, அபிராமி ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், சரோஜினிதேவி (ஆஸ்திரேலியா), சர்வானநந்தன் (லண்டன்), விபுலானந்தன் (கனடா), இந்திராதேவி,(ஜேர்மனி), காலஞ்சென்றவர்களான சதானந்தன், கிருபானந்தன் மற்றும் சுலோசனாதேவி(புத்தூர் கிழக்கு), சத்தியானந்தன் (கொழும்பு), சுமித்திராதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 7, புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.
T.P : 077 645 0238, 077 925 7871

(31521) (7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்

## இழுபறியிலிருந்த 'நெல்சிப்' நிதி கையாளுகை தீர்வுக்கு வந்தது

அச்சுவேலி, செப்.7
வலி.கிழக்கு பிரதேச சபையின் "நெல்சிப்" நிதி கையாளுகை தொடர்பாக நிலவி வந்த இழுபறிநிலைக்கு தீர்வு காணப்பட்டு 56 மில்லியன் ரூபா நிதிமூலம் ஐந்து வீதிகள் திருத்தி அமைக்கப்பட்டு தார் போடப்படவுள்ளன.
நெல்சிப் நிதிமூலம் திருத்தி அமைக்கப்படவுள்ள ஐந்து வீதிகளின் விவரம் வருமாறு:
அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதி 1.5 கிலோ மீற்றர் தூரம் 12 மில்லியன் ரூபா செலவிலும், உரும்பிராய் வாகையடி வீதி 1.25 கிலோ மீற்றர் தூரம் 10 மில்லியன் ரூபா செலவிலும், நீர்வேலி அச்செழுவில் வேலியாபுரம் போயிட்டி குறுக்கு வீதி 1.5 கிலோ மீற்றர் தூரம் 12 மில்லியன் ரூபா செலவிலும், கோப்பாய் இலக்கடி வீதி 2.5 கிலோ மீற்றர் தூரம் 20 மில்லியன் ரூபா செலவிலும், உரும்பிராய் மயான வீதி 1.5 கிலோமீற்றர் தூரம் 12 மில்லியன் ரூபா செலவிலும் திருத்தி அமைக்கப்படவுள்ளன.
வலி.கிழக்கு பிரதேச சபையின் நெல்சிப் நிதியை பயன்படுத்தி கட்டட நிர்மாணப் பணியை மேற்கொள்வதா? அல்லது நீண்டகாலமாக திருத்தி அமைக்கப்படாமல் இருக்கும் வீதிகளை திருத்தி அமைப் பதா? என்ற இழுபறி நிலை யில் நிதி பயன்படுத்தப்படாமல் இருந்தது. அண்மையில் வீதி அமைப்பது என தீர்மானிக் கப்பட்டு வீதிகளை திருத்தி அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்த விடயம் தொடர்பாக வலி.கிழக்கு பிரதேச சபையின் உபதலைவர் கந்தையா தர்மலிங்கம் தகவல் தெரிவிக்கையில்: நெல்சிப் நிதியை பயன்படுத்தும் நடைமுறை தொடர்பாக நிலவி வந்த உட்பூசல்கள் நீக்கப்பட்டு 40 வருடங்களுக்கு மேல் திருத்தி அமைக்கப்படாமல் உள்ள வீதிகளை மக்களின் விருப்பத்துக்கு அமைய திருத்தி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (வ-11)

# வடக்கில் இடம்பெறும் ஆய்வு விரைவில் கிழக்கிலும் நடக்கும்

## கடல்வள புதைபொருள் ஆய்வுக்குழுத் தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.செப். 7
வடக்கில் கடல்வள தொல்பொருள் ஆய்வுகள் முடிவுற்றதும் மிகவிரைவில் அடுத்த கட்டமாக கிழக்கில் ஆய்வுகளை மேற்கொள்ள புதைபொருள் ஆய்வுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்று கடல்வள புதைபொருள் ஆய்வுக்குழுவின் தலைவர் மஹிந்த கருணாரட்ண தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
30 வருட கால போர்ச் சூழலின் பின்னர் இந்த வருடம் வடக்கில் எமது ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளோம். இவை தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக வடக்கின் கடற்கரைப் பிரதேசங்களில் கடலுக்குள் எமது ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இதன்போது புதை பொருள்கள் சில தொல் பொருள்களாக கண்டெடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுவருகின்றன.
மன்னர் காலம் உட்பட மூதாதையர் காலத்திலும் பயன்படுத்தப்பட்டுவந்த தொல்பொருள்கள் சில கண்டெடுக்கப்பட்டன. ஆய்வின் பின்னரே அவை எந்தக் காலப்பகுதிக்குரியவை. அதன் தோற்றம் எவ்வாறானது என்பது குறித்து அறிய முடியும்.

> வடக்கின் கடற்கரைப் பிரதேசங்களில் கடலுக்குள் எமது ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.


வடக்கில் நெடுந்தீவு மற்றும் காங்கேசன்துறை கடல்பகுதிகளில் எமது ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. இதனைத் தொடர்ந்து அடுத்த கட்டமாக கிழக்குப்பகுதி கடல் பகுதிகளில் ஆய்வுகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
12 பேர் கொண்ட குழுவினர் இந்த ஆராய்ச்சி நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளதால் துரித மாக எமது ஆய்வு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கடந்த காலங்களில் இவ்வாறான ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் தொல்பொருள்களை கண்டுபிடிக்கும் நோக்குடன் எமது ஆய்வுகள் துரிதப்படுத்தப்படவுள்ளன- என்றார். (வ-9)

கல்வி நிர்வாக சேவை ஆள்சேர்ப்பில்

## விசேட பாடத்துறை தெரிவு நிறுத்தம்

அச்சுவேலி, செப்.7
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சையில் விசேட பாடத் துறை ரீதியிலான ஆளணித் தெரிவு நிறுத்தப்பட்டுள்ளது.
பொது நிலை ஆளணித் தெரிவு மட்டும் நடைபெறும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.
திறந்த பரீட்சையாக 30 வயதுக்கு உட்பட்ட பட்டதாரிகளில் இருந்து இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு 25 வீதமானோர் தெரிவு செய்யப்படுகின்றனர்.
கடந்த காலங்களில் கல்வி நிர்வாக சேவை ஆளணித் தெரிவு விசேட பாடத்துறை ஆளணி, பொது நிலை ஆளணி என இரண்டு வகையில் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த வருட பொது நிலை ஆளணியில் மட்டும் திறந்த நிலை கல்வி நிர்வாக சேவை தரம் III ஆளணி தெரிவு நடைபெறவுள்ளது.
பாடத்துறை ரீதியில் பத்துக்கு மேற்பட்ட பாடங்களுக்கு தனித்தனியாக விசேட பாடத்தை ஆளணித் தெரிவு நடைபெறும் போது பொது நிலை ஆளணித் தெரிவில் உரிய வெட்டுப் புள்ளிக்கு மேல் உயர் புள்ளி பெற்ற பலர் தெரிவில் இருந்து தவிர்க்கப்பட்டு விசேட பாடத்துறை ஆளணித்தெரிவில் வெட்டுப்புள்ளியை மட்டும் பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.
திறந்த நிலையில் கல்வி நிர்வாக சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் போட்டிப் பரீட்சை இரண்டு கட்டங்களாக நடைபெறும்.
முதலாவது நிலை போட்டிப் பரீட்சையில் பாட ரீதியாக 60 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகள் இரண்டாம் கட்டமாக நடைபெறும் போட்டிப் பரீட் சைக்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.
இரண்டாம் கட்ட போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளியில் வெட்டுப்புள்ளிக்கு மேல் உயர்புள்ளி பெற்றவர்கள் தெரிவுசெய்யப்பட்டு நியமனம் வழங்கப்படுவதோடு ஒருவருடகால பயிற்சி அளிக்கப்பட்டு பின்னரே வலயக் கல்வி அலுவலகம் மற்றும் மாகாணக் கல்வி அலுவல கங்களில் உதவிக் கல்விப் பணிப்பாளர் தர நிலையில் பணியில் அமர்த்தப்படுவர். (வ-11)

## நெடுந்தீவில் கடுமையான வறட்சி; குடிதண்ணீருக்கும் தட்டுப்பாடு



யாழ்ப்பாணம், செப்.7
நெடுந்தீவுப் பகுதியில் தற்போது கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.
சாராப்பிட்டியில் இருந்து விநியோகிக்கப்படும் குழாய் நீரும் உவர்நீராக மாறியுள்ளதால் சாராப்பிட்டி கோட்டைக்காடு பகுதியில் தண்ணீரைப் பெறுவதற்கு செல்ல வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
இராணுவத்தினரால் நெடுந்தீவுத் துறைமுகப் பகுதியில் இருந்து குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டாலும் அது மக்களுக்கு போதுமானதாக இல்லை என்றும் கூறப்படுகிறது.
குடிதண்ணீர் விநியோக சேவைக்கு என பவுசர்கள் இருக்கின்ற நிலையிலும் அரச அதிகாரிகள் அவற்றைச் சேவையில் ஈடுபடுத்துவதில்லை எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.
யாழ். செயலகத்தின் உதவியுடன் நடைபெற்று வந்த குடிதண்ணீர் விநியோகமும் தற்போது நடைபெறுவதில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதனால் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் இராணுவ முகாம்களை நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-7)

## வீட்டுத்திட்டம் வழங்கப்படாததால் துன்பப்படும் மருதங்கேணி மக்கள்

யாழ்ப்பாணம், செப்.7
மருதங்கேணி ஜே/428 கிராம அலுவலர் பிரிவில் மீள் குடியமர்வு செய்யப்பட்டு 3 வருடங்கள் கடந்த நிலையிலும் அடிப்படை வசதியற்ற வீட்டுத் திட்டங்கள் எதுவும் வழங்கப்படாத காரணத்தால் போரின் போது அழிவுகளைச் சந்தித்த அந்தப் பகுதி மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர்.
மீள்குடியமர்வின் பின்னர் இந்தியன் வீட்டுத்திட்டம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வீட்டுத்திட்டங்கள் சில கிராமங்களுக்கு வழங்கப்பட்ட போதும் மருதங்கேணி ஜே/428 கிராம சேவகர் பிரிவில் உள்ள குடும்பங்களுக்கு எந்த வித அடிப்படை வசதிகளும் வழங்கப்படவிலலை.
எனினும் முன்னுரிமை அடிப்படையில் 43 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்படும் என்று மருதங்கேணி பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்ட போதும் அதற்கான அனுமதிகள் இதுவரை வழங்கப்படவில்லை.
இதனால் அந்தப் பகுதி மக்கள் அடிப்படை வசதிகள் இழந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
தற்போதுள்ள தற்காலிக வீடுகள் கூரைகள் சேதமுற்றதால் பழுதடைந்த நிலையில் காணப்படுவதால் பருவ மழை யின் போது பெரும் இன்னல் களை எதிர்கொள்ள நேரிட்டது.
இதற்கான மாற்று நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று மருதங்கேணி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (வ-14)



## பௌதிக திட்டமிடல் குழுவின் இரண்டாவது அமர்வு

யாழ்ப்பாணம்.செப். 7
வடமாகாண பிராந்திய பௌதிக திட்டமிடல் குழுவின் இரண்டாவது அமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பொது நூலக கேட்போர்கூடத்தில் இடம்பெறுமென மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜய லட்சுமி ரமேஸ் அறிவித்துள்ளார். குழுவின் முதலாவது அமர்வு கொழும்பு பத்தரமுல்லவில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

# வலி.தென்மேற்கு பிரதேச சபையில் நிதி பற்றாக்குறை

## தேவையான கணினிக் கொள்வனவுக்கு அனுமதி மறுப்பு

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தலைமையக அலுவலகப் பாவனைக்கு மூன்று கணினிகளை கொள்வனவு செய்ய செயலாளர் அனுமதி கோரியிருந்த போதிலும் நிதி நிலை காரணமாக ஒரு கணினியை மட்டும் வாங்க அனுமதி வழங்கிய உறுப்பி னர்கள், பழுதடைந்த நிலையிலுள்ள கணினிகளைத் திருத்திப் பயன்படுத்துமாறு தெரிவித்துள்ளனர்.
வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டதற்கு அமைய பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பயன்பாட்டிலிருந்த மூன்று கணினிகள் பழுதடைந்த நிலையிலிருப்பதால் பணிகளை உடனுக்குடன் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவசர வேலைகள் தேங்கியிருப்பதாகவும் தெரிவித்துள்ள செயலாளர் மூன்று கணினிகளை கொள்வனவு செய்ய சபையிடம் அனுமதி கோரியிருந்தார். (வ-115)

# 1990 இல் வந்தாறுமூலையில் கைதான 174 தமிழர்களுக்கும் நடந்தது என்ன?

## யோகேஸ்வரன் எம்.பி. கேள்வி

மட்டக்களப்பு,செப்.7

1990ஆம் ஆண்டு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புத் தேடுதலின்போது இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட 174 பேருக்கும் நடந்தது என்ன? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.



இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் காணாமல்போன தமது உறவுகளை கடந்த வியாழக்கிழமை உறவினர்கள் நினைவு கூர்ந்தனர்.

இலங்கை யில் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்ட சம்பவங்கள் உட்பட பல்வேறு சந்தர்ப்பங்களில் பலர் காணாமல் போய் உள்ளனர்.

1990 ஆம் ஆண்டு இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற சம்பவம் காரணமாகவே அது பின்னர் முறிவடைந்தது.

அக்காலகட்டத்தில் மட்டக்களப்பில் பலர் காணாமல் போயிருந்தார்கள். சிலரது சடலங்கள் வீதிகளில் ரயர்கள் போட்டு எரிக்கப்பட்டன.

இந்தச் சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில், வாழைச் சேனை தொடக்கம் பிள்ளையாரடி வரையிலான கிராம மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி ஆலயங்கள், பாடசாலைகள், பல்கலைக் கழகம் எனப் பல்வேறு இடங்களிலும் அகதிகளாக தஞ்சம் புகுந்து இருந்தார்கள்.

தஞ்சம் புகுந்த அகதி முகாம் அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்குமென நம்பினார்கள். இத்தகைய சந்தர்ப்பத்தில் 05.09.1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று கிழக்கு பல்கலைக்கழக அகதி முகாமில் 174 பேர் கைது செய்யப்பட்டனர் இராணுவ வாகனத்தில் வந்த முகமூடி அணிந்தவர்கள் தலையாட்டி அடையாளம் காட்டிக் கொடுத்ததற்கமைய அவர்கள் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

அவ்வாறு ஏற்றிச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது? என்று இதுவரை தெரியாது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனோரைக் கண்டறிவதற்காக 1995ஆம் ஆண்டு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று மறைந்த மேல் நீதிமன்ற நீதிபதி கு.பாலகிருஷ்ணன் தலைமையில் நியமிக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது. அதில் பலரும் சாட்சியம் அளித்தார்கள்

அத்தோடு காணாமல் போன சம்பவங்களுடன் தொடர்புடையவர்களை அடையாளப்படுத்தும் முறையில் வாக்கு மூலங்களை அளித்திருந்தார்கள் என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச-சி)



பல்கலைக்கழகங்களில், இணைந்த சுகாதார விஞ்ஞானக் கற்கை நெறிகளின் காலக் குறைப்புக்கு எதிராகக் கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் வியாழக்கிழமை ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மஜீத்தினுடைய கருத்து வேடிக்கை அளிக்கிறது

## அ.இ.மு.காங்கிரஸ் கூறுகிறது

அம்பாறை,செப்.7

நவிப்பிள்ளையைச் சந்திக்க அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்க்கு சந்தர்ப்பம் வழங்கவில்லை என்று அப்துல் மஜீத் கூறியிருப்பது வேடிக்கை அளிக்கிறது என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஏ.எம்.லத்தீப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"யாரும் மஜீத்தினுடைய அறிக்கைகளைக் கவனத்தில் எடுப்பதில்லை. தான் நினைக்கும் சகல கருத்துக்களையும் அவர் அறிக்கையாக வெளியிட்டு வருகின்றார். இவ்வாறான குழப்பவாதிகளால் மக்கள் குழப்பமடைய வேண்டாம். நாம் ஐக்கிய நாடுகள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சந்திப்புக்கான நேரம் பெறமுயற்சித்தது பொய் எனக் கூறியுள்ளார் மஜீத். நவிப்பிள்ளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தவிர இலங்கையில் ஏதாவது ஒரு கட்சியினரைச் சந்தித்ததாகக் கூறமுடியுமா? இதெல்லாம் மஜீத்துக்குப் புரியப் போவதும் இல்லை. இத்தகையோரைத் திருத்துவது கடினம்.

அரசு சார்பில் ஜனாதிபதியையும் சில அமைச்சர்களையுமே நவிப்பிள்ளை சந்தித்தார். பாதிக்கப்பட்ட பள்ளிவாசல்கள் தொடர்பில் நவிப்பிள்ளையிடம் மனு கையளிக்க விவரம் கோரிய மஜீத் ஏன் சந்திக்கவில்லை. மஜீத்தின் கட்சி பதிவு செய்யப்பட்ட கட்சியல்ல".- என்றார். (ச-10)

# மட்டக்களப்பில் 69.3 மி.மீ. மழை வீழ்ச்சி



மட்டக்களப்பு.செப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகத் தினமும் மாலை நேரத்தில் கடும் மழை பெய்து வருகின்றது.

கடந்த மூன்று நாள்களில் இந்த மாவட்டத்தில் 69.3 மில்லிமீற்றர் மழை பதிவாகியுள்ளது என்று வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார்.

மழையால் பல வீதிகளில் நீர்தேங்கியுள்ளதுடன், போக்குவரத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

# சமூகங்களைப் பிரிக்கவே ஆலயங்கள் உடைப்பு

## மாகாணசபை உறுப்பினர் குற்றச்சாட்டு



மட்டக்களப்பு,செப்.7

சகல சமூகங்களையும் இணைப்பதற்காகப் பாலங்கள் போடப்படுவதாகப் பலர் கூறுகின்றனர். ஆனால் அதே சமூகங்களைப் பிரிப்பதற்காகவே ஆலயங்களையும், பள்ளிவாசல்களையும் தாக்குகின்றனர் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித்தார்.

தம்புள்ளை காளி கோயில் விக்கிரகம் உடைத்தெறியப்பட்ட விவகாரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இதுவரை காலமும் சிறுபான்மை சமூகத்தவர் மீது தாக்குதல் நடத்தி வந்தவர்கள் தற்போது சிறுபான்மை சமூகத்தவர் வழிபாடு நடத்தும் ஆலயங்கள் மீது கடவுள்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இவற்றிற்கெல்லாம் தக்க தண்டனை யார் கொடுக்காவிட்டாலும் இறைவன் கொடுப்பான். சமூகங்களைப் பிரிக்க வேண்டும் என்றே இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் நடத்தப்படுகின்றன என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசு அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவது சிங்கள குடியேற்றங்களுக்காகவே அன்றி வேறு யாருக்காகவுமல்ல. அரசு பௌத்த அடிப்படைவாதக் குழுக்களின் நடவடிக்கைகளைக் கண்டுகொள்வதில்லை. சிறுபான்மையினருக்கான அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன.- என்றார். (ச-10)

# தபால்மூலம் வாக்களிக்க 1350 பேர் தகுதி



மட்டக்களப்பு,செப்.7

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள வடக்கு மற்றும் வடமேல், மத்திய மாகாண சபைத் தேர்தல்களின்போது தபால்மூலம் வாக்களிக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் 1350பேர் தகுதி பெற்றுள்ளனர் என்று மட்டக்களப்பு மாவட்டத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமை புரியும் பொலிஸ் மற்றும் இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையைச் சேர்ந்த படையினரே இவ்வாறு தபால் மூலம் வாக்களிப்பதற்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்கள் எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் தபால் மூலம் வாக்களிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வீதி அனுமதிப்பத்திரமின்றி 4 தனியார் பஸ்கள் மாட்டின

## அபராதம் செலுத்தினர் சாரதிகள்



மட்டக்களப்பு.செப்.7

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதை அனுமதிப்பத்திரமின்றி கொழும்புக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட 4 தனியார் பஸ்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்தப் பஸ்களின் சாரதிகளை கைதுசெய்யப்பட்டு அபராதம் செலுத்திய பின்னர் விடுவிக்கப்பட்டனர் என்று கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட முகாமையாளர் ருத்திரமூர்த்தி யுவநாதன் தெரிவித்தார்.

பாதை அனுமதிப்பத்திரமின்றி போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களை பொலிஸாரின் உதவியுடன் அதிகாரிகள் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

இந்த நடவடிக்கையின் கீழ் கடந்த ஒரு வாரத்தில் பாதை அனுமதிப்பத்திரமின்றி கொழும்புக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்ட 4 பஸ்கள் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கண்டுபிடிக்கப்பட்டு சாரதிகள் கைதுசெய்யப்பட்டனர் என்று அவர் கூறினார்.

இந்த பஸ்களுடன் கைது செய்யப்பட்ட சாரதிகளை ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற நீதிவான் எம்.றியாஸ் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியபோது, தலா ஒரு லட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். எதிர்காலத்தில் பாதை அனுமதிப்பத்திரமின்றிப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டால், பஸ்கள் அரச உடைமையாக்கப்படும் என்றும் நீதிவான் இவர்களை எச்சரித்துள்ளார். (ச)

# பணமோசடி செய்த உயர் அதிகாரிக்கு பிணை

அம்பாறை,செப்.7

நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் கண்காட்சிக்காக ஒதுக்கப்பட்ட 39 மில் லியன் ரூபா பணத்தை மோசடி செய்த சந்தேகத்தில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் செயலர் பிணையில் விடுவிக் கப்பட்டுள்ளார்.

அவர் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கண்காட்சி நடைபெற்ற வளாகத்தில் 149 தற்காலிகக் கழிவறைகள், கேட்போர் கூடம், உணவகம் போன்றவற்றை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியை மோசடி செய்த சந்தேகத்தின் பெயரால் குறித்த சந்தேக நபர் குற்றப் புலனாய் வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-10)

# இலங்கைக் கடற்படைக்கு இரண்டு போர்க் கப்பல்கள்

## மீண்டும் கொடுக்கிறது இந்தியா



கொழும்பு,செப்.7

இலங்கைக் கடற்படைக்கு இரண்டு போர்க்கப்பல்களை இந்தியா வழங்கவுள்ளது என்று பிரிஜ செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் கடல் எல்லைகளைப் பலப்படுத்துவதற்கு உதவும் நோக்கிலேயே, இந்தப் போர்க்கப்பல்கள் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்படவுள்ளன.

கோவாவில் உள்ள இந்திய அரசுத்துறை கப்பல் கட்டும் நிறுவனத்தில் கட்டப்படவுள்ள, ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல்களே இலங்கைக்கு வழங்கப்படவுள்ளன.

இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கக் கூடாது. இலங்கையுடன் பாதுகாப்பு உறவுகளை வைத்துக் கொள்ளக்கூடாது என்று தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் வலியுறுத்திவரும் நிலையில் இந்தப் போர்க்கப்பல்களை இலங்கைக்கு இந்தியா வழங்கவுள்ளது.

**ஆழ்கடல் கண் காணிப்புக் கப்பல்களே இலங்கைக்கு வழங்கப் படவுள்ளன.**

விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு, இலங்கைக் கடற்படைக்கு சயுர, சாகர ஆகிய பெயர்களைக் கொண்ட இரண்டு ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களை இந்தியா ஏற்கனவே வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 3500 நிர்வாக உதவியாளரை புதிதாக இணைக்க நடவடிக்கை

## பொது நிர்வாக அமைச்சு தகவல்

கொழும்பு,செப்.7

3,500 நிர்வாக உதவியாளர்களை புதிதாக இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அவர்களுக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று பொது நிர்வாக அமைச்சர் டபிள்யூ.ஜே செனவிரத்ன தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற மூவாயிரத்து 500 பேர் இந்தப் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

**பரீட்சையில் சித்தி பெற்ற மூவாயிரத்து 500 பேர் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.**

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களிடம் இருந்து நிர்வாக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



# நாட்டில் மழை 9 ஆம் திகதி வரை தொடரும்

கொழும்பு.செப்.7

நாட்டில் எதிர்வரும் 9 ஆம் திகதி வரை காற்றுடனான மழை பெய்யக்கூடிய காலநிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனினும் மேற்கு, சபரகமுவ, மத்திய, தெற்கு மாகாணங்களில் இடைக்கிடை மழை பெய்யும். சில இடங்களில் 100 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியை எதிர்பார்க்கமுடியும் என்று திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டில் கடும் காற்று மணிக்கு 60 கிலோமீற்றர் வேகத்தில் வீசக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. பருவ கால காற்று தென்மேற்கு திசையில் வீசும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.(ச)

# கஞ்சா கலந்துள்ள மூக்குப் பொடி மீட்பு



கொழும்பு.செப்.7

கஞ்சா கலந்த 268 மூக்குப் பொடி டப்பிகளை பண்டாரவளைப் பொலிஸார் மீட்டுள்ளனர். பண்டாரவளையிலுள்ள பாடசாலையொன்றுக்கு அருகிலிருந்தே இந்த டப்பிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டன.

உயர்தர பரீட்சையின்போது இந்த மூக்கு பொடி மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கலாம்.

மீதமிருந்தவையே பாடசாலைக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ரொசான் தெரிவித்தார். (ச)

# இன, மத அடையாளங்களை செய்திகளில் பயன்படுத்தாதீர்

## ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு,செப்.7

செய்திகளில் இன, மத அடையாளங்களை தேவையின்றிப் பயன்படுத்தக்கூடாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார். அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

செய்திகள் எழுதும் போதும் சம்பந்தப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் அல்லது சம்பவங்கள் தொடர்பிலான செய்திகளைப் பிரசுரிக்கும் போது தேவை யின்றி இன, மத அடையாளங்களை வெளிப்படுத் தப் படக் கூடாது.

இது தொடர்பிலான பொறி முறைமை ஒன்று உருவாக்கப்படவேண்டும். இதற்கான பொறுப்பு தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முரண்பாடுகள், மோதல்களின் போது தேவையின்றி இன, மத அடையாளங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அதனால் இன, மத முரண்பாடுகள் ஏற்படக் கூடிய அபாயம் ஏற்படுகிறது.-என்றார். (ச)

# இசை விருது வழங்கல் விழா

கொழும்பு,செப்.7

இசைக் கலை வளர்ச்சிக்கு முன்னோடியாக, இசைக் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறந்த இசைப் படைப்புகளை வழங்கிய கலைஞர்களைக் கௌரவப்படுத்தி அவர்களுக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

அரச இசை விருது வழங்கல் விழா எதிர்வரும் 12 ஆம் திகதி 6 மணிக்கு இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெறவுள்ளது. (ச)

# இலங்கையில் நடப்பது சர்வாதிகார ஆட்சிதான்

கொழும்பு,செப்.7

லிபியா, எகிப்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற சர்வாதிகார ஆட்சி இலங்கையில் இடம்பெறுகின்றது என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்குக் கூற முடியாது போயுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெறும் அபிவிருத்திகள் பற்றிக் கூறிய அவர், அதன் பின்னணியில் மறைந்து கிடக்கும் உண்மைகளைக் கூற மறந்துவிட்டார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.


கொழும்பு, இராஜகிரியவில் உள்ள ஐ.தே.கவின் தொழிற்சங்கப் பணிமனையில் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் எதேச்சாதிகார ஆட்சி இடம்பெற்று வருகின்றது என்று கடந்த காலங்களில் நாம் முன்வைத்த குற்றச் சாட்டை அண்மையில் இலங்கை வந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தமது அறிவிப்பினூடாக ஏற்றுக்கொண்டுள்ளார்.

தாம் பயணம் மேற்கொண்ட உலக நாடுகளில் இலங்கையில் மட்டுமே அதிக நாள்கள் தங்கியதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். இலங்கையில் சட்டம் வீழ்ச்சி அடைந்துள்ளது. வடக்கு, கிழக்கில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. முழு நாட்டையும் இராணுவமயப் படுத்தும் எண்ணம் உள்ளது. ஊடக அடக்குமுறை இடம்பெறுகின்றது.

ஆனால், இலங்கையில் எதேச்சாதிகார ஆட்சி இடம்பெறுகின்றது எனக் கூறிய அவருக்கு லிபியா, எகிப்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற சர்வாதிகார ஆட்சி இங்கு நடக்கிறது என்பதைக் கூற முடியாது போயுள்ளது - என்றார். (ச-சி)



இந்தியாவின் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச)

# அசுத்தமான தண்ணீர் போத்தல்கள் மீட்பு

கொழும்பு,செப்.7

மனித பாவனைக்கு ஒவ்வாத அசுத்தமான தண்ணீர் போத்தல்கள் புறக்கோட்டைப் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்துள்ளார்.

தண்ணீர் போத்தல்களில் எண் ணெய் மற்றும் கிறீஸ் போன்றவை கலந்திருந்தமை கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

புறக்கோட்டைப் பகுதியில் சுமார் 200 கடைகளில் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போதே இவ்வாறான அசுத்தமான தண்ணீர் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.- என்றார். (ச)

# வெள்ளவத்தை கட்டட தொகுதியில் தீ

கொழும்பு,செப்.7

கொழும்பு, வெள்ளவத்தை, ஹொலிங்வூட் வீதியிலுள்ள ஆறு மாடிக் கட்டடத் தொகுதியின் நான்காம் மாடியில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த மாடித் தொகுதியில் வியாழக்கிழமை மாலை தீ விபத்து ஏற்பட்டது என்று வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாடித் தொகுதியிலிருந்து புகை வெளியானதைத் தொடர்ந்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. இதன் பின்னர் பொலிஸார் மற்றும் தீயணைப்பு படையி னர் இணைந்து தீயை கட்டுப் பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர்.



தீயால் ஏற்பட்ட பொருள் சேதம் குறித்து இதுவரையில் தகவல்கள் வெளியாகவில்லை. (ச)

# தேர்தல் விதிகளை மீறினால் வேட்பாளருக்கு நடவடிக்கை

## அமைச்சர் பஸில் உறுதி



கொழும்பு,செப்.7

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணசபைகளுக்கான தேர்தல் பரப்புரைகளின் போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்கள் தேர்தல் விதி மீறல்களில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதி மொழி வழங்கியுள்ளார்.

தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோதே அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார் என்று அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தல் பரப்புரைகளுக்கு அரச சொத்துக்கள் பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் ஐ.ம.சு.முன்னணி வேட்பாளர்களுக்கிடையில் ஏற்படக் கூடிய மோதல்களைத் தடுத்தல் போன்றவற்றில் தலையிட்டு அவற்றை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதி மொழி வழங்கியுள்ளார் என்று அவர் குறிப்பிட்டார்.

வடக்கில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தோம்.

அமைச்சர் பஸிலின் தலையீட்டின் பின்னர் தேர்தல் விதி மீறல்கள் குறையும் என்று அவர் கூறினார்.

வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் இதுவரை 282 தேர்தல் வன்முறைகள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள் என.

மத்திய மாகாணத்திலிருந்து 156 முறைப்பாடுகளும், வடமேல் மாகாணத்தில் இருந்து 79 முறைப்பாடுகளும், வடக்கிலிருந்து 47 முறைப்பாடு களும் பதிவாகியுள்ளன என்று அவர் குறிப்பிட்டார். (ச)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிரியாவில் போர் மூளும் அபாயம்; பேச்சு மூலம் தீர்வு காண முயல்க

கடந்த இரண்டு வருடங்களாக சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போர், பிராந்திய மட்டத்திலான போராக மாறும் ஆபத்து உருவாகி உள்ளது. சிரிய ஆட்சியாளர்கள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி அப்பாவி மக்களைக் கொன்று தீர்த்துள்ளனர். அதனால் சிரிய அரசை தண்டிக்கப் போவதாக ஒபாமா நிர்வாகம் அறிவித்துள்ளது.

அமெரிக்க மத்திய உளவு ஸ்தாபனமான சி.ஐ.ஏக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களை ஆதாரம் காட்டி அஸாத்தின் படைகள்தான் இரசாயன ஆயுதத் தாக்குதலை நடத்தின என்று ஒபாமா நிர்வாகம் கூறுகிறது. இந்த உளவுத் தகவலை அடிப்படையாக வைத்தே சிரியாவைத் தண்டிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

சிரியாவில் கடந்த மாதம் 21 ஆம் திகதி இரசாயன ஆயுதம் பயன் படுத் தப்பட்டுள்ளது என்பதை சிரியாவின் நட்பு நாடான ரஷ்யாவும் ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால் யார் இதனைப் பயன்படுத்தினார்கள்? அஸாத் தரப்புப் படையினரா, கிளர்ச்சிக் காரர்களா என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய விடயமாகும்.

அதற்கு முன்னோடியாக அமெரிக்க செனட் வெளியுறவுக் குழு கூடி 10-7 பெரும்பான்மை வாக்குகளால் சிரியா மீதான தாக்குதலுக்கு பச்சைக்கொடி காட்டிவிட்டது. அமெரிக்கா, சிரியாவில் தனது படைகளை இறக்கக்கூடாது; அமெரிக்க தாக்குதல் நடவடிக்கை 90 நாள்களுக்குள் முடிவுக்கு வரவேண்டும் என்று இந்தக் குழு நிபந்தனை விதித்துள்ளது. இது விடயம் காங்கிரஸில் முழு அளவிலான விவாதத்துக்கு எடுக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும்.

இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு ஐ.நா. சாசனத்தில் தடைவிதிக்கப்பட்ருப்பதால் ஐ.நா. இரசாயனப் பரிசோதகர்களின் அறிக்கை கிடைத்ததும் பாதுகாப்புச்சபையின் ஒப்புதல் இன்றியே சிரியா மீது தாக்குதல் நடத்தப்பட இருக்கிறது. இத்தாக்குதல்கள் ஒருசில ஏவுகணைகளுடன் முடிவடைந்தால் நெருக்கடியைத் தவிர்க்க முடியும்.

ஆனால் அமெரிக்கா தனக்கு காங்கிரஸினால் வழங்கப்படும் 90 நாள் அவகாசத்தைப் பயன்படுத்தி ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து நடத்துமானால் நெருக்கடி ஏற்படுவதற்கும், வெளிநாடுகள் தலையிடுவதற்கும் சாத்தியம் உண்டு.

அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒப்புதல் பெறாமல் சிரியா மீது ஒருதலைப்பட்சமாகத் தாக்குதல் நடத்தினால் அது ஆக்கிரமிப்பாகக் கருதப்படும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆகவே மத்திய கிழக்கில் ஏற்படக்கூடிய பெரும் நெருக்கடியை இது கோடி காட்டுகிறது. கடந்த மாதம் 21 ஆம் திகதிய தாக்கு தலை சிரியாவின் அரச படைகள்தான் நடத்தின என்றால் அதனை பாதுகாப்புச்சபையில் ஆதாரங்களுடன் சமர்ப்பிக்கு மாறு அமெரிக்காவுக்கு ரஷ்யா சவால் விடுத்துள்ளதுடன் தனது அதி நவீன எஸ்- 300 ரக ஏவுகணைகளை சிரியாவுக்கு அனுப்ப நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது.

அஸாத் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையில் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார் என்பது இப்போது நிச்சயமாகி விட்டது. அமெரிக்கா தொடர்ச்சியாக ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தும் பட்சத்தில் சிரியா ரஷ்யாவின் நவீன ஏவுகணைகளைப் பயன்படுத்தி இஸ்ரேலையோ அல்லது அமெரிக்காவுக்கு ஆதரவான துருக்கி அல்லது ஜோர்தானையோ தாக்கலாம் என்று கருதப்படுகிறது.

இதேவேளை, ஹிஸ்புல்லா போராளிகள் அஸாத்துக்கு ஆதரவாக தாக்குதல்களை ஆரம்பிக்கும்போது பதிலடியாக ஈரானும் தாக்கப்படுமானால் முழுப்பிராந்தியமும் யுத்தத்துக்குள் சிக்கிவிடும்.

அத்தகைய ஓர் ஆபத்தைக் கருத்தில் கொண்டே 2003 ஈராக் படையெடுப்பின்போது அமெரிக்காவுக்கு முழு ஆதரவு வழங்கிய பல நாடுகள் தற்போது தயக்கம் காட்டுகின்றன. லிபியா மீது தாக்குதல் நடத்தும் தீர்மானத்தை பிரிட்டிஷ் நாடாளுமன்றம் நிராகரித்துவிட்டது. பிரான்ஸ் அரசு தாக்குதலுக்கு முழு ஆதரவு வழங்குகிறது. ஆனால் பொதுமக்களிடையே எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் எதிராக உள்ளன. அமெரிக்காவில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பிலும் 60 சதவீதமானோர் போரை நடத்துவதற்கு ஆதரவு அளிக்கவில்லை; எதிர்க்கிறார்கள்.

ஒபாமா முதல்முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது, ஆசியாவில் இனி போர் இருக்காது என்று உறுதிமொழி வழங்கினார். சர்வதேசப் பிரச்சினைகளில் அமெரிக்க ஜனநாயகக் கட்சி கடைப் பிடித்து வந்த பாரம்பரிய அணுகுமுறைகள் மீறப்படுகின்றன. ஒபாமா நிர்வாகம் அவ்வழி நடவாமல், தனது தாக்குதல் திட்டத்தைக் கைவிட்டு பேச்சு மூலம் சிரியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வர வேண்டும்.

# பேசுபொருளான சிரியாப் போர்



சிரியாவில் போர் ஏற்படும் சூழல் உருவாகியுள்ள நிலையில், இஸ்ரேலும், அமெரிக்கா வும் இணைந்து மத்திய தரைக்கடல் பகுதியில் ஏவுகணைச் சோதனை நடத்தியதால் உலகம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டதை இஸ்ரேல் அரசு உறுதி செய்துள்ளது. இரு ஏவுகணைகள் வீசப்பட்டதாகவும் அவை இரண்டும் மத்திய தரைக் கடல் பகுதியிலேயே விழுந்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மத்திய தரைக்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கப் போர்க் கப்பல்களில் இருந்து இந்த ஏவுகணைகள் வீசப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. இந்த ஏவுகணைகள் வீசப்பட்டதை ரஷ்ய ரேடார்கள் கண்காணித்ததாகத் தகவல் வெளியானது. சிரியாவில் தாக்குதல் நடத்துவது குறித்து நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா திட்டமிட்டிருக்கும் நிலையில், இந்த ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டுள்ளது. முன்னதாக சிரியாவை நோக்கி ஏவுகணைகள் வந்ததாகச் செய்திகள் வெளியானதால் உலக அளவில் பங்குச் சந்தைகளில் சரிவு ஏற்பட்டது.

### அதிபர் முடிவுக்கு எதிரான வாக்களிப்பு :

சிரியா மீதான ராணுவ தாக்குதலுக்கான நாடாளுமன்றப் பிரேரணைக்கு எதிராக வாக்களிப்பது பேரழிவை ஏற்படுத்தக்கூடியதாக அமையும் என அமெரிக்க செனட் உறுப்பினர் ஜான் மெக்கெய்ன் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் ஜனாதிபதி ஒபாமாவுடன் கலந்தாலோசித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒரு பிரச்சனையில் ஜனாதிபதி தீர்க்கமான முடிவெடுத்த பிறகு, நாடாளுமன்றம் அதை நிராகரித்தால் அது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரித்தார். மேலும் அசாத்தின் ரசாயன ஆயுதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் அளவிலேயே அமெரிக்காவின் தாக்குதல் அமையும் என்பதைப் பிரேரணை உறுதி செய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே சிரியா மீது தனித்து தாக்குதல் நடத்தமாட்டோம் என பிரான்ஸ் தெரிவித்துள்ளது. மேலும் சிரிய அரசு படைகளே ரசாயனத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் உறுதியாகத் தெரிவித்துள்ளது. இந்நிலையில் சிரியா மீதான தாக்குதல் பிராந்திய அளவிலான போரை உருவாக்கும் என தெரிவித்துள்ள சிரிய அதிபர் அசாத், ரசாயன ஆயுத பயன்பாட்டுக்கான ஆதாரங்களை வழங்குமாறும் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்குச் சவால் விடுத்துள்ளார்.

### சிரியாவில் மனிதக் கேடயங்கள்

அமெரிக்கத் தாக்குதலைச் சமாளிக்க மனிதக் கேடயங்களாக மாறத் தயாராகுமாறு சிரியாவின் அரசுக்கு ஆதரவான அமைப்பினர் பரப்புரை மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்கா தாக்குதல் நடத்தும் வாய்ப்புகள் உள்ள பகுதிகளில் தற்காலிக கூடாரம் அமைத்து அவர்கள் தங்கி வருகின்றனர். ஓவர் அவர் பொடீஸ் (Over Our Bodies) என பெயரிடப்பட்டுள்ள இந்தப் பரப்புரையில் பங்கேற்க பலர் ஆர்வம் காட்டி வருவதாக தெரிகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தங்களது தாக்குதல் எண்ணங்களை கைவிட்டால் மட்டுமே இந்த கூடாரங்களை விட்டு வெளியேறுவோம் என தெரிவித்துள்ள அவர்கள், அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதில் உயிரிழக்கத் தயாராக இருப்பதாகவும் கூறியுள்ளனர்.

### அரசே ரசாயனத் தாக்குதலை நடத்தியது

சிரியாவில் அதிபர் பஷர் அல் அசாதின் ஆதரவு படைகளே ரசாயன தாக்குதல் நடத்தியதாக பிரான்ஸ் உளவுப்பிரிவு தகவல்கள் தெரிவித்துள்ளன.

பிரான்ஸ் ராணுவத்தினாலும், உளவுப் பிரிவாலும் திரட்டப்பட்ட தகவல்களைக் கொண்ட 9 பக்க அறிக்கை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப் பட்டுள்ளது. ஓகஸ்ட் 21ஆம் திகதி சிரியா தலைநகர் டமாஸ்கஸ் (Damascus) அருகே ரசாயன ஆயுதத் தாக்குதல் பெருமளவிலும், திட்டமிட்டும் நடத்தப் பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது. ஆசாத்தின் ஆதரவாளர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்பதை உறுதி செய்யும் வகையில் 5 அம்சங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக நடந்து வரும் உள்நாட்டுப் போரில் சிரியா அரசு விதிகளை மீறுவதால் அங்கு சர்வதேச ராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலாந்த் வலியுறுத்தி வருகிறார். இந்த முடிவுக்குப் பிரிட்டன் நாடாளுமன்றம் எதிரான வாக்குகளை பதிவு செய்துள்ள நிலையில், அமெரிக்கா காங்கிரஸின் ஒப்புதலை பெற திட்டமிட்டுள்ளது.

ரசாயன ஆயுதங்கள் பிரயோகிப்பு சர்வதேச பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் என ஃபிரான்ஸ் நம்புகிறது. ஃபிரான்ஸ் உளவுப்பிரிவு அறிக்கையில் எந்தெந்த இடங்களில் ரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளது.

### மனிதாபிமான பேரிடர்

சிரியாவில் 15 நொடிக்கு ஒருவர் அகதியாவதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உள்நாட்டுப் போரால் நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கை 20 லட்சத்தை தாண்டிவிட்டதாக ஐ.நாவின் அகதிகள் ஆணையம் கூறுகிறது. ஏறக்குறைய 2 லட்சம் பேர் 17 வயதிற்கும் குறைவானவர்கள் என கூறப்படுகிறது. ஓராண்டிற்கு முன்னதாக இந்த எண் ணிக்கை 2 லட்சத்தை ஒட்டியே இருந்தது என கூறும் அந்த அமைப்பு, இந்த போக்கு மிகவும் ஆபத்தானது என எச்சரித்துள்ளது.

மக்கள் எழுச்சியாக தொடங்கியது இரண்டரை ஆண்டுகளாக உள்நாட்டு போராக மாறிவிட்டதனால் 1 லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப் பதை ஐ.நா. தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய துயரம் என்றும், மனிதாபிமான பேரிடர் என்றும் ஐ.நாவின் சிறப்பு தூதர் ஆண்டானியோ குடெர்ரஸ் (Antonio Guterres) கூறியிருக்கிறார்.

உள்நாட்டிலேயே சுமார் 40 லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அகதிகளாக வெளியேறுபவர்கள் அண்டை நாடுகளில் தங்கி வருவதால் அந்த நாடுகளில் போதிய கட்டமைப்பு வசதிகள், பொருளாதார நிலைமை பாதிக்கப்படுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. பதிவு செய்யக்கோரி காத்திருக்கும் சிரியா அகதிகளின் பட்டியலையும் ஐ.நா வெளியிட்டுள்ளது. அதன்படி லெபனானில் 7 லட்சம், ஜோர்டனில் 5 லட்சம், துருக்கியில் நான்கரை லட்சம், ஈராக்கில் ஒன்றே முக்கால் லட்சம் என தெரியவந்துள்ளது.

### அசாத்துக்கு சீனா, ரஷ்யா ஆதரவு

மத்திய கிழக்குப் பகுதியில் துருக்கி, லெபனான், ஜோர்டான், இஸ்ரேல் போன்ற நாடுகள் சூழ அமைந்திருக்கிறது சிரியா. ஒரு காலத்தில் ஆட்டமன் பேரரசின் பகுதியாக இருந்த இந்த நாடு, பின்னர் பிரான்சின் காலனி ஆதிக்கத்தின் கீழ் வந்தது. 1946-ஆம் ஆண்டில் பிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை கிடைத்த பிறகு பல ஆட்சி மாற்றங்கள் நடந்தன.

1970- ஆம் ஆண்டு முதல் முறையாக அசாத் தின் குடும்பம் சிரியாவில் ஆட்சிக்கு வந்தது. 1970 முதல் ஹபீஸ் அல்-அசாத்தின் ஆட்சியின் கீழ் இருந்த சிரியா, அதன் பிறகு அவரது மகனும் தற்போதைய அதிபருமான பஷார் அல்-அசாத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கடந்த இரு ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு நடந்து வரும் உள்நாட்டுப் போருக்கு முக்கியமான காரணமாகக் கூறப்படுவது அந்நாட்டின் மதப் பிரிவினை.

ஷியா இஸ்லாமியப் பிரிவான அலாவி மதத்தவர் 10 சதவீதமும், சன்னி பிரிவினர் 74 சதவீதமும், கிறிஸ்தவர்கள் 10 சதவீதமும் சிரியாவில் வசிக்கின்றனர். ஆட்சியில் இருக்கும் அசாத், அலாவி இனத்தைச் சேர்ந்தவர். அவருக்கு எதிராகச் சண்டையிட்டு வருபவர்கள், சன்னி பிரிவைச் சேர்ந்தவர்கள். இந்தச் சண்டையில் அரசுப் படைகளும், அவற்றுக்கு ஆதரவாக சில ஆயுதக் குழுக்களும் இருக்கின்றன. எதிரணியில் சிரிய விடுதலை ராணுவம் என்ற ஆயுதப் பிரிவும், சிரிய தேசியக் குழு என்ற அரசியல் பிரிவும் நிற்கின்றன.

உள்நாட்டுப் போர் தொடங்கிய காலத்தில் இருந்தே அண்டை நாடுகளான துருக்கி, ஈராக், ஜோர்டான், லெபனான் போன்ற நாடுகளுக்கு லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயரத் தொடங்கினர். இது சர்வதேச சமூகத்துக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியது. பொதுவாக உள்நாட்டுப் போர் நடக்கும் நாடுகளில் அமெரிக்காவோ, பன்னாட்டுப் படைகளோ தலையிடுவதே வழக்கம்.

லிபியாவில் கடாபி, ஈராக்கில் சதாம் ஹூசை, ஆப்கனில் தலிபான்கள் ஆட்சிக்கு எதிராக இது போன்ற தலையீடுகள் நடந்தன. ஆனால், சிரிய அரசுக்கு ஆயுதவிற்பனை செய்து வரும் ரஷ்யா, ஷியா முஸ்லிம் உறவு கொண்ட ஈரான், வர்த்தக உறவு கொண்ட சீனா ஆகியவை அசாத்துக்கு ஆதரவாக இருப்பதால், அந்நாட்டுக்கு எதிரான நடவடிக்கை எடுப்பதற்கு மேலைத் தேய நாடுகள் தயக்கம் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

(நன்றி: இணையம்)

# நவநீதம்பிள்ளையின் வல்லமைச் சான்றுகள்

கந்தவனம் கோணேஸ்வரன்



ஐக்கிய நாடுகள்சபை மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கைக்கு வந்தார், நின்றார், சென்றார் என்றில்லாமல், வந்தார்; நின்றார்; தமிழ் மக்களின் நிலைமைகளைச் சரியாகவே புரிந்து கொண்டார் என்றமையவேண்டுமெனத் தமிழ் மக்கள் விரும்புகிறார்கள்.

போர் அவலங்களால் நொந்துபோனவர்கள் அவர்கள். தாலாட்டிச் சீராட்டி வளர்த்த பிள்ளைகளை இன விடியலுக்காகக் காவு கொடுத்தவர்கள் அவர்கள். விடுதலைப் போருக்கு அனுப்பாமல் பொத்தி வைத்திருந்த பிள்ளைகளையும் கதறக்கதறக் கண்முன்னே பறிகொடுத்தவர்கள் அவர்கள்.

பிள்ளைகளுக்குத் தந்தை இல்லை; தாய்க்குப் பிள்ளைகள் இல்லை; பெண்களுக்குக் கணவர் இல்லை; ஆண்களுக்கு மனைவி இல்லை; தாயைப் பறிகொடுத்த பிள்ளைகளுக்கு நிம்மதியில்லை. இவை தாம் அவர்கள் வாழ்வாக இருந்தது; இருக்கிறது.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் போது அவர்கள் பட்ட துயர் கொஞ்ச நஞ்சமல்ல. உலகமறியா பிஞ்சுகளைப் பறிகொடுத்தார்கள். பெற்றோரின் முகம் பார்த்தபடி பிள்ளைகள் இறந்து கொண்டிருக்கச் செய்வதறியாது திகைத்து நின்றார்கள். மருந்துகள் இல்லை; போதிய வைத்தியர்கள் இல்லை. இருந்த வைத்தியர்களும் தூக்கமில்லாமல் சேவை புரிந்தார்கள். காயம்பட்டவர்களுக்கு மயக்க மருந்து இல்லாமலேயே அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய நிலை. சிகிச்சை இடம் பெற்றால் வலி, சிகிச்சை இடம்பெறாவிட்டால் பலி என்ற நிலை காயம்பட்டோருக்கு.

## உலகில் இல்லாத துயரம் தமிழருக்கு

உழைத்து உண்டு வளமாக வாழ்ந்தவர்கள் ஓரிரு வாரங்களிலேயே ஏதிலிள் ஆக்கப்பட்டார்கள். அவயவங்களை இழந்து தவித்தார்கள். உறவுகளைப் பறிகொடுத்துத் துடித்தார்கள். உலகில் ஒரு மக்கள் கூட்டம் அனுபவிக்கக்கூடாத அத்தனை துயரங்களையும் அனுபவித்தார்கள்.

அவர்கள் அரசிடம் அகலமான பாதை கேட்டுப் போராடவில்லை. புதிய பஸ்கள் கேட்டு ஆர்ப்பாட்டங்கள் செய்யவில்லை. மின்சாரம் கேட்டு மேடைகளில் முழுங்க வில்லை. அவர்கள் கேட்டதெல்லாம் தங்கள் பகுதிகளில் தங்களை நிம்மதியாக வாழவிட வேண்டும் என்பதுதான். தமிழர் பகுதியின் தனித்துவத்தைச் சிதைத்து விடாதிருக்கவேண்டும் என்பதுதான். அதற்காகத்தான் இவ்வளவு துயரங்களையும் சுமந்தார்கள்; இன்றும் சுமந்து கொண்டிருக்கிறார்கள். கணவரை இழந்த கைம்பெண்களாக எமது மகளிர் வாடுகி றார்கள். மகவை இழந்த அபலைகளாக எங்கள் தாய்மார் கண்ணீர் வடிக்கிறார் கள். விடுதலைப்புலிகளை அழிக்கிறோம் என்ற அரசின் கொடூர நடவடிக்கையால் இன்றும் வீதிகளில் அலைந்து கொண்டி ருக்கிறார்கள்.

> அரசிடம் அகலமான பாதை கேட்டுப் போராடவில்லை. புதிய பஸ்கள் கேட்டு ஆர்ப்பாட்டங்கள் செய்யவில்லை. மின்சாரம் கேட்டு மேடை களில் முழுங்க வில்லை. அவர்கள் கேட்டதெல்லாம் தங்கள் பகுதிகளில் தங்களை நிம்மதியாக வாழவிடவேண்டும் என்பதுதான்.

நான்காண்டுகளுக்கு முன்னர் வன்னி மக்களின் அன்றாடச் செயற்பாடுகளை அரசு முடக்கியது. நான்கரை இலட்சம் மக்கள் வாழ்ந்த பகுதியில் எழுபதினாயிரம் பேரே வாழ்கிறார்கள் என்று பரப்புரை செய்தபடி பற்றாக்குறை உணவை அனுப்பி அவர்களைப் பட்டினியால் வதைத்தது. இதற்கு மக்கள் மீட்புப்போர் என்று பெயரும் சூட்டிக்கொண்டது.

ஆனால், மக்கள் மீட்கப்படுவதற்குப் பதிலாக அங்கிருந்து பிணங்கள் தாம் மீட் கப்பட்டன. அரசை நம்பி அதன் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த மக்களில் பலரை இன்று வரை காணோம். நம்பிக்கைத் துரோகங்கள். நயவஞ்சகங்கள் என்பவை அரச தரப்பால் தாராள மாகச் செயற்படுத்தப் பட்டன. "மக்களுக்கு அநியாயம் செய்துவிட்டீர்கள். விசாரியுங்கள். அவர்களுக்கு வாழும் வகையைச் செய்யுங்கள்" என்றது உலகம். "நாங்கள் எங்கே தீங்கு செய்தோம்? மக்களைக் காப்பாற்றவல்லவா போர் தொடுத்தோம்? இப்போது அவர்கள் நலமாகத் தானே இருக்கிறார்கள்? என்றது இலங்கை அரசு.

இந்தத் திமிர்வாதப் பதிலுக்குப் பதிலடியாக உலக மன்றத்தால் இரண்டு தடவைகள் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. தீர்மானம் வரக் கூடாது என்பதற்காகப் பதறியது அரசு. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அவற்றை அலட்சியம் செய்வதாகக் காட்டிக் கொண்டது. ஆனாலும் உள்ளூரப் பயந்து கொண்டே இருக்கிறது.

இந்தத் தீர்மானங்களின் விளைவுதான் நவநீதம்பிள்ளையின் விஜயம். அவரை நாட்டில் கால்வைக்க முடியாமல் தடுத்திருக்கத் தம்மால் முடியும் என்று இலங்கை அரசு பீற்றிக்கொண்டாலும் அவ்வாறு தடுத்தால் அதன் பலாபலன்கள் இலங் கையை அதிரவைப்பவையாக இருக்கும் என்பதையும் அரசு அறிந்துதான் வைத்திருந்தது. பின்விளைவுகளைச் சந்திக்கத் தைரியம் இல் லாத நிலையில் தான் இலங்கை நவநீதம் பிள்ளையின் வருகையை ஏற்றது.

## அரசின் கையாலாகாத்தனம்

இருந்த போதிலும் புத்த பிக்குகள் அவரின் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி னார்கள். பிக்குச்சிறார்கள்கூட ஆர்ப்பாட்டத்துக்கு இழுத்து வரப்பட்டார்கள். தேரர் ஒருவரும், நூறு வருடங்களுக்குத் தேவையான அபிவிருத்தியை அரசு தமிழர்களுக்குச் செய்து கொடுத்திருக்கிறது என்று பிதற்றிக் கொண்டார். அமைச்சர்கள் சிலர் ஆங்காங்கே தமக்குள்ளேயே புறுபுறுத்துக் கொண்டார்கள். எல்லாவற்றுக்கும் உச்சமாக நவநீதம்பிள்ளையின் பாதியளவு உயரங்கூட இல்லாத ஒரு கோமாளி அமைச்சர் அவரைத் திருமணம் செய்துகொள்ளத் தயார் என்று தனது ஆண்மையைக் கொச்சைத்தனமாகப் பறைசாற்றி வைத்தார். இவை, அரச தரப்பின் கையாலாகாத்தனத்துக்கான அடையாளங்கள்.

நவநீதம்பிள்ளை ஹக்கீமைச் சந்தித்தார்; வாசுதேவ நாண யக்காரவைச் சந்தித் தார்; பிரதம நீதியரசர், சட்டமா அதிபர் ஆகியோரையும் சந்தித்தார்; வடபகுதியில் அரச அதிகாரிகளையும், மக்களையும் சந்தித்தார். கிழக்கில் சம்பூர் மக்களுடனும் உறவாடினார். ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஜனாதிபதி மஹிந்த, அமைச்சர் பஸில் ஆகியோரையும் அவர் சந்தித்துப் பேசினார்.

அவர் அறிக்கையை இலங்கை அரசால் கட்டுப்படுத்த முடியாது. அதேபோல் உதாசீனம் செய்யவும் முடியாது. நவநீதம்பிள்ளையின் வருகையின்போது அரசு போர்த் தடயங்களை மறைத்ததும், படையினரால் கைப்பற்றப் பட்ட மக்களுடைய காணிகளை விழாக்கள் நிகழ்த்தி மக்களிடம் ஒப்படைத்ததும், பொலிஸ் திணைக்களத்தைப் படைத்துறையிட மிருந்து பிரித்துத் தனிஅமைச்சாக ஆக்கியதும் நவநீதம்பிள்ளையின் வல்லமைக்கான சான்றுகள்.

எதிர்வரும் மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை பற்றிய அறிக்கை முன்வைக்கப்படலாம். 2014 மார்ச்சில் இடம்பெறவிருக்கும் மாநாட் டில் இலங்கைக்கு எதிரான நிலைப்பாடுகள் முன் வைக்கப்படலாம். இவை இலங்கை அரசால் தவிர்க்கப்படக்கூடியவை அல்ல. இதுதான் இன்றைய நிலைமை.

## உலக அரங்கில் தமிழருக்கு வாய்ப்பு

இலங்கைத் தமிழர்களுக்கு வாய்ப்பான ஒரு சூழல் உலக அரங்கில் உருவாகிவருகிறது. நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை தமிழர்களுக்கும் இருக்கிறது. எமக்காக அழிந்த உறவுகளின் உயிர்கள் 'வெறுங்காற்றல்ல' என்று உலகுக்குச் சொல்லவேண்டிய தேவை இருக்கிறது. கண்களை விற்றுச் சித்திரம் வாங்கத் தயாராகும் கூட்டமல்ல தமிழர்கள் என்று உரத்துச்சொல்ல வேண்டிய கடப்பாடு இருக்கிறது.

பிறரால் தமிழர்களை உற்சாகப்படுத்தத்தான் முடியும். உணர்வைத் தரமுடியாது. ஆதரவைத்தான் காட்ட முடியும். செயற்பாட்டைத் தரமுடியாது. எனவே, உணர்வுபூர்வமாகச் செயலாற்றவேண்டிய பொறுப்பு தமிழர்களிடமே இருக்கிறது. அதுவும் வடபகுதி மக்களிடம் அந்த, பொறுப்பு தானாகக் கனியக் காத்திருக்கிறது.

இதை வடபகுதி மக்கள் தவறவிட முடியாது. கிணற்றுக்குள் வீழ்ந்தவன் கூட உதவுபவனின் கயிற்றைப் பற்றிப் பிடித்தால்தான் மேலே வர முடியும். இல்லையேல் அமிழ்ந்து போவதுதான் முடிவாக இருக்கும். தமிழர்களின் நிலையும் அதுதான்.

வீடு இருந்தால்தான் அதற்குள் அமர்ந்து வெற்றிலை போட்டுக் கொள்ளலாம். அது சுவையாகவும் இருக்கும். வேண்டுமானால் யானையையும் கட்டி வளர்க்கலாம். ஆனால், வெற்றிலைக்குள் அமர்ந்து எவரும் வீட்டைக் கட்டிக்கொள்ள முடியாது. எனவே, வாக்காளர்கள் காலம் கனிந்துவருவதை உணர்ந்து தங்கள் கடமையை நினைத்துத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பே எங்கள் ஒரே பிரதிநிதி. அவர்கள் பாதையே எங் கள் பாதை என்பதை உலகுக்கு எடுத்துச் சொல்வதற்கு இந்தத் தேர் தலைப் பயன்படுத்தவேண்டும். இது வட பகுதி மக்களின் தலையாய கடமை.

# கனவுகளிடம் கவனமாக இருங்கள்!




நாம் எதிர்காலத்தைப் பற்றிக் காணும் கனவுகளை நனவாக்குவதற்கு கடின முயற்சியும் அவசியம். எனவே, கனவை நனவாக்குவதில் கவனமாக இருக்க வேண்டும்.

வாழ்நாளை யாராலும் அதிகப்படுத்த முடியாது. ஆனால் அர்த்தப்படுத்த முடியும். மேலும் ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழப் போகிறார் என்பது தெரியாது. ஆனாலும் நம்பிக்கையோடு எதிர்காலத்துக்கான கனவுகளை வளர்க்கிறோம். அவ்வாறன இலட்சியக் கனவுகளை எவ்வளவு விரைவாக நனவாக மாற்றப் போகின்றோம் என்பதுதான் முக்கியம்.

கனவு காண்பதிலேயே வாழ்நாளைக் கழித்து விடாமல் உங்களுக்குத் தேவையானது எது? தேவையற்றது எது? என்பது குறித்து ஒரு தெளிவான தீர்மானம் செய்து கொள்வது மிக அவசியம்.

நீங்கள் செய்யும் ஒவ்வொரு செயலும் உங்களுடைய கனவுகளுக்கு மெருகேற்றும் விதமாக இருக்க வேண்டும். அத்தோடு, ஒவ்வொரு நாளும் நீங்கள் உங்களுடைய கனவை நனவாக்கும் நோக்கில் முன்னோக்கியே செயல்பட வேண்டும். சிலர் ஆண்டுதோறும் சில குறிக்கோள்களை ஏற்படுத்திக் கொண்டு அதை அடைவதற்கு உழைப்பார்கள். அது மிகவும் நல்லதுதான் என்றாலும், அத்தகைய குறிக்கோள் உங்களுடைய கனவுக்கு வலிமை சேர்ப்பதாகவும், கனவுகளை நனவாக்குவதற்கான செயல்பாடுகளாகவும் இருக்க வேண்டும்.

கனவு நனவாகும் வரை நீங்கள் கவனமாகவும், மென்மையாகவும் செயல்பட வேண்டும். எப்பொழுதும் எந்தச் சூழ்நிலையிலும் சாந்தமாகவும் அன்பாகவும் அணுகக் கற்றுக் கொள்ள வேண்டும். கோபப்படுவதும், எரிச்சலடைவதும் கூடவே கூடாது. அத்துடன் எதற்கெடுத்தாலும் பயப்படுவது, பதற்றப்படுவது போன்ற குணாங்களை விட்டொழிக்க வேண்டும். அதற்கு உங்களை நீங்களே சுயதிறனாய்வு செய்து தேவையற்ற மனோபாவத்தையும் குணங்களையும் நீக்கி விடுங்கள்.

உதவி செய்தல், புன்னகை புரிதல், சாந்தமாகப் பேசுதல் போன்ற நற்பண்புகள் உங்களுடைய கனவை நனவாக்குவதற்கு நிச்சயம் உதவும். உங்களுடைய வாழ்வில் வரும் நல்ல சந்தர்ப்பங்களை நழுவவிடாமல் நன்றாகப் பயன்படுத்தி உங்களுடைய திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிக்காட்டுங்கள். உங்களுடைய இலட்சியக்கனவு நிச்சயம் ஒரு நாள் நனவாகும்

# யாழ்ப்பாண கலாசார வேர்கள் இன்றுவரை நிலைத்துள்ளன

## தென்னிந்தியப் பாடகி சுதா ரகுநாதன் கருத்து

யாழ்ப்பாணம்.செப்.7
யாழ்ப்பாணத்தில் கலாசார வேர்கள் இன்று வரை சாயவில்லை. அவை ஊறிக்கிடக்கின்றன. இங்குள்ள மாணவர்களை அவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப படிக்க விடுங்கள் என தென்னிந்தியப் பாடகி சுதா ரகுநாதன் தெரிவித்தார்.
வீரசிங்கம் மண்டபத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது;
யாழ் மண்ணுக்கு வருகை தந்தது இதுவே முதல் தடவை. எனது கனவுகளில் ஒன்று நிறைவேறியதாகவே நான் நினைக்கின்றேன். எனது குருவிடம் யாழ்ப்பாணத்தைப் பற்றி அதிகமான விடயங்கள் கேட்டறிந்துள்ளேன். இங்குள்ள மாணவர்கள் தயக்க சுபாவம் உடையவர்களாக இருந்தாலும் பரதம், சங்கீதம் போன்றவற்றில் ஒன்றித்துள்ளார்கள். அவர்கள் விருப்பத்துக்கேற்ப வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கலைகளை ஒரே இரவில் கற்றுவிட முடியாது. அவற்றைக் கற்பது கடினமான விடயம். ஒரு கலையைப் பத்து வருடங்கள் சிறந்த குருவிடம் கற்றால் நிச்சயம் பிரகாசிக்க முடியும்.
கலைஞர்கள் காலத்துக் காலம் மாற்றம் பெற்றாலும் கலைகள் மாறுவதில்லை. யாழ் மக்கள் கலையார்வம் மிக்கவர்கள். கலைஞர்களால் கலையை வளர்க்க முடியாது. வளரும் கலைகளுக்கு உதவிகளை வழங்கமுடியும் - என்றார்.
இதேவேளை ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த சுதா ரகுநாதன்.
உன்னிக் கிருஷ்ணன் ஒரு தரம் வந்ததோடு யாழ்ப்பாணத்தை மறந்து விட்டார். தென்னிந்திய கலைஞர்கள் யாழ் மண்ணுக்குக் கலைப் பணி ஆற்றவில்லை எனக் கூற முடியாது.
தென்னிந்தியக் கலைஞர்கள் ஒரு தடவை யாழ்ப்பாணத்திற்கு வந்தால் மறுபடியும் வரவே விரும்புவார்கள். தற்போதும் யாழ் மாணவர்களுக்கு எவ்வாறு உதவலாம் என சிந்தித்தவண்ணமே உள்ளோம். இதற்கு நல்ல தீர்வு அமையும் - என்றார்.
இந்த மாநாட்டில் பரதநாட்டியக் கலைஞர் லீலா சாம்சன், இசைக்கலைஞர் கிருஷ்ணா ஆகியோரும் கலந்து கொண்டனர் (வ-10)




> கலைஞர்கள் காலத்துக் காலம் மாற்றம் பெற்றாலும் கலைகள் மாறுவதில்லை. யாழ். மக்கள் கலையார்வம் மிக்கவர்கள்.

## விவசாயப் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை திங்களன்று

வலி.வடக்கு, செப். 7
விவசாயக் கல்லூரியினால் நடத்தப்படும் நான்கு மாத விவசாயப் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மருதனார் மடத்திலுள்ள விவசாயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.
இந்தப் பயிற்சி நெறி இலவசமாக நடத்தப்படுவதுடன் ஆண். பெண் இருபாலாரும் அனுமதிக்கப்படவுள்ளனர்
பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் க.பொ.த சாதாரண தரத்தில் விஞ்ஞானம் அல்லது விவசாய விஞ்ஞானத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ள விரும்புவோர் காலை கிராம அலுவலர் மற்றும் இருவரின் நற்சான் றிதழ்கள் , பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் , கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் திங்கட்கிழமை காலை நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கும்படி நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## யோகக் கலைப் பயிற்சியின் அறிமுகவிழா நல்லூரில்

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்.யோக அரங்கம் நல்லூர் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்திவரும் யோகக் கலைப் பயிற்சியின் புதிய பயிற்சி நெறியின் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.
யோக அரங்க இயக்குநர் எஸ். உமாசுதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக இந்து கலாசார உத்தியோகத்தர் உதயபாலனும், சிறப்பு விருந்தினராக அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மட நிர்வாகி தருமராசா தம்பதியினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
"யோகக் கலைப் பயிற்சி நுட்பங்கள்" என்ற தலைப்பில் மூத்த யோக ஆசான் எம்.இரத்தினசோதி உரை நிகழ்த்துவார்.
"யோகக் கலைப் பயிற்சி



வகுப்புக்கள் திங்கள்,புதன் மற்றும் வெள்ளி ஆகிய தினாங் களில் காலை 6 மணி முதல் 7மணி வரையும் , செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் அதிகாலை 5.30 மணி தொடக்கம் 6.30 மணிவரை நடைபெறும் என்றும், மாலை நேர வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும்,
புதிதாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் நாளை இடம்பெறும் அறிமுக நிகழ் வில் தவறாது கலந்து கொள்ளுமாறும் யோக அரங்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (வ-400)

## முன்பள்ளி ஆசிரியைகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வலி.வடக்கு, செப். 7
ஆறுதல் நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஒரு வருட டிப்ளோமா பயிற்சி நெறியை நிறைவு செய்த பாலர் பாடசாலைகளின் முன்பள்ளி ஆசிரியைகளுக்கான சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வண்ணார் பண்ணை நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (வ-86)

## சிறுவர் கழகங்களுக்கிடையே நாடகப் போட்டிகள் பளையில்

பளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறுவர் கழகங்களுக்கிடையிலான நாடகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடத்தப்படவுள்ள சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 6 வயது தொடக்கம் 18 வயது வரையான சிறுவர்கள் பங்கு கொள்ளும் விதத்தில் உருவாக்கப்பட்ட நாடகங்கள் போட்டியில் பங்கேற்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
"சிறுவர் பாதுகாப்புக்கு அவர்களின் திறன்களைப் பயன்படுத்துதல்" என்னும் தலைப்பில் சிறுவர் குறு நாடகங்கள் அமையவேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-9)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

நாளை
ஆவணி-23 ஞாயிற்றுக்கிழமை 08.09.2013
திதி: திருதியை பி.ப. 05.10 வரை
நட்சத்திரம்: அத்தம் மு.ப.09.46 வரை
சுபநேரம்: 09.04 - 10.34 வரை
இராகுகாலம்: 04.34 - 06.04 வரை



**மேடம்:** சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். அரசாங்க வேலைகளில் அனுகூலமான நிலை காணப்படும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**இடபம்:** மன உளைச்சல் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். முன்கோபம் விலகும்.



**மிதுனம்:** வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக் குழப்பங்கள் நீங்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.



**கடகம்:** சோர்வு, அலைச்சல் நீங்கி ஆனந்தமாகக் காணப்படுவீர்கள். பழைய நண்பர்களைச் சந்திப்பீர்கள். அரசியல்வாதிகளின் ஆதரவு கிடைக்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**சிங்கம்:** அயலில் இருப்பவர்களை அனுசரித்துப் போங்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது.



**கன்னி:** வியாபாரம் சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியால் சங்கடங்கள் வரும். முன்யோசனையுடன் செயற்படுங்கள்.



**துலாம்:** நீண்ட நாள் எண்ணங்கள் பூர்த்தியாக முயற்சிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மன உளைச்சல் நீங்கும். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**விருச்சிகம்:** மன உறுதியுடன் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும். மாணவர்கள் உற்சாகத்துடன் காணப்படுவார்கள்.



**தனுசு:** புதிய முயற்சிகள் வெற்றி தரும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணவரவு உண்டு. முன்கோபம் விலகும். பிரியமானவர்களைச் சந்தித்து பொழுதைக் கழிப்பீர்கள். அலுவலகப் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிரிக்கும்.



**மகரம்:** பழைய கசப்பான சம்பவங்களை பேசிக்கொண்டிருக்க வேண்டாம். தடைப்பட்ட வேலையை மாறுபட்ட அணுகுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சிலவற்றுக்கு உங்கள் அவசர முடிவுகள் தான் காரணம் என்பதை உணர்வீர்கள். உத்தியோகத்தில் பிறரின் குறைகளை சுட்டிக் காட்ட வேண்டாம்.



**கும்பம்:** புதியவர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். கவனமுடன் செயற்படுங்கள்.



**மீனம்:** கடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். முன்கோபம் விலகும். அரச காரியங்களில் அனுகூலம் உண்டு. வீடு, வாகனச் செலவுகள் குறையும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 7 | | | | |
| 8 | 1 | 7 | 3 | 4 | | | 2 | |
| | | 3 | | | 6 | | | 8 |
| 9 | | | 6 | | | 2 | 3 | 1 |
| 3 | | | | | | | | 5 |
| 2 | 5 | 6 | | | | | | 9 |
| 5 | | | 2 | | | 1 | | |
| | 3 | | | 6 | 5 | 4 | 8 | 7 |
| | | | | 1 | | | 5 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 5 | 3 | 6 | 7 | 8 | 2 | 1 |
| 2 | 7 | 1 | 5 | 8 | 9 | 4 | 6 | 3 |
| 3 | 8 | 6 | 4 | 2 | 1 | 9 | 5 | 7 |
| 9 | 4 | 8 | 7 | 5 | 6 | 1 | 3 | 2 |
| 5 | 6 | 3 | 2 | 1 | 8 | 7 | 4 | 9 |
| 7 | 1 | 2 | 9 | 4 | 3 | 5 | 8 | 6 |
| 6 | 2 | 9 | 8 | 7 | 4 | 3 | 1 | 5 |
| 1 | 3 | 4 | 6 | 9 | 5 | 2 | 7 | 8 |
| 8 | 5 | 7 | 1 | 3 | 2 | 6 | 9 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


## ஆலய வருடாந்த உற்சவம்

முல்லைத்தீவு, செப்.7
ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடுக் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் சமளந்துளாய்ப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வுடன் ஆரம்பமாகவுள்ளது.
இந்த ஆலயத்தில் நாளைய தினம் சாந்திபூசையும், மறுநாள் விநாயக சதுர்த்திப் பூசையும் இடம்பெற்று 10 ஆம் திகதி கொடியேற்ற நிகழ்வு இடம்பெறும். தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.
இதுவரை காலமும் இந்த ஆலயத்தில் கொடியேற்ற நிகழ்வு இடம்பெறாது வருடாந்த அலங்கார உற்சவங்கள் இடம்பெற்று வந்தன. ஒட்டுசுட்டான் சிவன் ஆலயப் பிரதமகுருவாகிய கீர்த்திவாசன் குருக்கள் ஆலய உற்சவக் கிரியைகளுக்குத் தலைமை தாங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## மாணவர்களுக்கான கருத்தரங்கு

முல்லைத்தீவு, செப்.7
இந்த ஆண்டு ஜி.சீ.ஈ.சாதாரண பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான கருத்தரங்கு இன்றும் நாளையும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும் மல்லாவி மத்திய கல்லூரியிலும் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெறவுள்ளது.
இந்தக் கருத்தரங்கு கொழும்பு சிரேஷ்ட சட்டத்தரணி வி.தேவசேனாதிபதியின் அனுசரணையில் நடைபெறவுள்ளது.
இதில் ஒட்டுசுட்டான் பகுதிப் பாடசாலைகள், முல்லைத்தீவு கல்வி வலயம் ஆகியவற்றைச் சேர்ந்த 400 மாணவர்களுக்கு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்திலும், துணுக்காய் கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மல்லாவி மத்திய கல்லூரியிலும் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.
கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு, சமயம் ஆகிய முக்கிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## பாடசாலையில் திருட்டுச் சம்பவம்



வவுனியா, செப்.7
வவுனியா கணேஸ்வரா வித்தியாலயத்தில் திருட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பாடசாலை விடுமுறைக் காலத்தில் பாடசாலைக் கிணற்றுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம், கப்பி, வாளி என்பனவே திருட்டுப் போயுள்ளன. இது தொடர்பாக பாடசாலை நிர்வாகத்தினர் பொலிஸாருக்கு முறையிட்டுள்ளனர்.
இந்தத் திருட்டு சம்பவத்தை அடுத்து பாடசாலை மாணவர்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள் வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
திருட்டுப் போன நீர் இறைக்கும் இயந்திரத்துக்குப் பதிலாக வேறொரு இயந்திரம் கிடைக்குமாயின் மாணவர்கள் பாதுகாப்பான வகையில் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியுமென பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். (க-402)

# கிராமிய அமைப்புகளின் செயற்பாடு கவனிக்கப்படாமையால் மோசடிகள்

முல்லைத்தீவு, செப்.7
முல்லைத்தீவு மாவட்டத்தில், கிராமிய அமைப்புக்களின் செயற்பாடுகள் கவனிக்கப்படாத காரணத்தால் அந்த அமைப்புக்களுக்குள் ஊழல் மோசடிகள் அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.
குறித்த அமைப்புக்களின் நடவடிக்கைகள், நடைமுறைகள் மற்றும் கணக்கறிக்கைகள் எவையும் ஆய்வு செய்யப்படாத நிலையில் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.
கிராம முன்னேற்றச் சங்கம், மாதர் சங்கம், சனசமூக நிலையம், கமக்கார அமைப்பு, சிக்கனக் கடனுதவுச் கூட்டுறவுச் சங்கம் போன்ற கிராமமட்ட அமைப்புக்களிலேயே இவ்வாறான நிலை காணப்படுவதாக அறியமுடிகின்றது.
இதுகுறித்து முல்லைத்தீவில் இயங்கும் கிராமமட்ட அமைப்பு ஒன்றைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்:
எமது சங்கம் போன்று இங்கு இயங்கும் அமைப்புக்களின் ஆண்டு நடவடிக்கைகள் குறித்து பிரதேச, மாவட்ட செயலகங்கள் ஆய்வு செய்வதில்லை. இதனால் பணக் கையாளல் நடவடிக்கைகள் மற்றும் சேவைகள் குறித்த வெளிப்படுத்தல்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. இதனால் இந்த அமைப்புக்களுக்குள் ஊழல் மோசடிகள் நடைபெறுவதற்கு வாய்ப்புக்கள் உருவாகியுள்ளன-என்று தெரிவித்தார். (க-500)



பொலிஸ் திணைக்களத்தின் 147 ஆவது ஆண்டு நிறைவையொட்டி பொலிஸாரும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய நடமாடும் சேவையின் போது கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரும் அவர்களுக்கான சேவைகளை வழங்கக் காத்திருக்கும் உத்தியோகத்தர்களும் இங்கு காணப்படுகின்றனர்.

## கச்சான் வியாபாரிகளால் பயணிகளுக்குச் சிரமம்

கிளிநொச்சி, செப்.7
கிளிநொச்சி நகரில் பஸ்களில் ஏறி கச்சான் வியாபாரத்தில் ஈடுபடுபவர்களால் தாம் அசௌகரியங்களை எதிர்கொள்வதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.
வெவ்வேறு இடங்களிலிருந்து வருகின்ற பஸ்கள் கிளிநொச்சியில் தரித்து நிற்கும்போது அவற்றுள் முண்டியடித்துக் கொண்டு ஏறும் கச்சான் வியாபாரிகள் பயணிகளுக்குச் சிரமங்களை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர்.
மேலும் ஆனையிறவு, பரந்தன், இயக்கச்சி போன்ற இடங்களிலும் பஸ்களில் ஏறும் கச்சான் வியாபாரிகள் அதனை விற்பனை செய்வதில் முரண்பட்டு நிற்பதையும் காணமுடிகின்றது.
இதன் காரணமாகவும் பயணிகள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
கச்சான் வியாபாரிகளால் பயணிகளுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் அவதானித்துக் கொள்ள வேண்டும் எனவும் பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)



## வாகனங்களின் வேகத்தை கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

வவுனியா, செப்.7
வவுனியா கண்டி வீதியில் அதிவேகத்தில் பயணிக்கும் வாகனங்களால் அச்சமடையும் மக்கள் அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
வவுனியா கண்டி வீதிக்கு அருகில் அமைந்துள்ள தமிழ் மகா வித்தியாலயம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, கல்வித் திணைக்களம் வவுனியா பொலிஸ் நிலையம், தபால் கந்தோர், நகர சபை, வவுனியா பொது மருத்துவமனை, வவுனியா மாவட்டச் செயலகம், வவுனியா பிரதேச செயலகம் என்பன அமைந்துள்ள பகுதிகளில் வேகமாகப் பயணிக்கும் வாகனங்களின் வேகத் தைக் கட்டுப்படுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஏற்கனவே வேகமாகச் செலுத்தப்பட்ட வாகனங்களால் விபத்துக்கள் ஏற்பட்டு மூவர் பலியாகியிருந்தனர்.
இத்தகைய விபத்துக்களால் அச்சப்படும் மக்கள் வாகனங்களின் வேகத்தை மட்டுப்படுத்துமாறு வீதி போக்குவரத்துப் பொலிஸாரிடம் அவ்வப்போது தெரிவித்தபோதிலும் இது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படாமை குறித்து விசனம் வெளியிட்டுள்ளனர். (க-402)


# புதிய அரச அலுவலருக்கான கலந்துரையாடல் கோப்பாயில்

### வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில்

கிளிநொச்சி, செப்.7
வடக்கு மாகாணத்தில் இந்த ஆண்டு புதிதாக நியமனம் பெற்ற அரச பணியாளர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.
சமுர்த்தி உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆசிரியர்கள், பட்டதாரிப் பயிலுநர்கள், சிற்றூழியர்கள் போன்றோருக்கான இந்தக் கலந்துரையாடல் கோப்பாயில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நேற்று முன்தினம் முற்பகல் 10.20 மணி முதல் மதியம் 12.30 மணி வரை இடம்பெற்றது.
வடமாகாண அபிவிருத்தி தொடர்பாக விளக்கமளிக்கும் இந்தக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்து இந்த ஆண்டு புதிதாக அரச நியமனம் பெற்ற சுமார் 600 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.
வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி மற்றும் ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிச் செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டு கடந்த காலங்களில் வடமாகாணத்தில் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும், அரச அலுவலர்கள் தமது கடமைகள் பொறுப்புக்களை உணர்ந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்பது பற்றியும் எடுத்துக் கூறினர். (க-426)


## மோசமான பாலங்களால் ஆபத்து

முல்லைத்தீவு, செப்.7
ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள பாலங்கள் சேதமடைந்து மோசமான நிலையில் காணப்படுவதால் எதிர்வரும் மழை காலத்தில் மக்களுக்கு ஆபத்து ஏற்படக் கூடிய சாத்தியக்கூறு காணப்படுவதாக அறிய முடிகின்றது.
ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதி கடந்த 30 வருடங் களுக்கும் மேலாக புனரமைப்பு எதுவுமில்லாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இதில் பயணிக்கும் மக்கள் அதிக இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
மேலும் இந்த வீதியில் அமைந்துள்ள பாலங்களின் நிலை மிகவும் மோசமாக உள்ளது. இவை உடைந்தும், தூர்ந்தும், பாதுகாப்புச் சுவர்கள் சிதைந்தும் காணப்படுவதால் மழையின்போது வெள்ள நீர் வெளியே செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது. இதனால் வெள்ள நீர் வீதியை அடித்துச் செல்வதுடன் மேலும் சேதங்களை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.
மேலும் சேதமடைந்த பாலங்கள் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் ஏது நிலையும் உள்ளது.
இதன் காரணமாக இந்த வீதியூடான வாகனப் போக்குவரத்தில் பெரும் பாதிப்பு ஏற்படுமெனவும் தெரிய வருகின்றது. (க-500)



## வறட்சி காரணமாக ஒட்டுசுட்டானில் பாதிப்புக்கள்

முல்லைத்தீவு, செப்.7
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாகப் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் போதிய மழை பெய்யாததால் கடும் வறட்சி நிலவி வருகின்றது. இதனால் குடிதண்ணீர் நெருக்கடி மோசமான கட்டத்தை எட்டியுள்ளது. மக்கள் மட்டுமன்றிக் கால்நடைகளும் குடிதண்ணீர் தேடி அலைந்து திரிவதைக் காணமுடிகின்றது. மேலும் போதிய நீர் கிடைக்காமையால் கால்நடைகள் இறந்து போகும் அபாய நிலை ஏற்பட்டு விடுமென அவற்றின் உரிமையாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.
இதேவேளை நீர் கிடைக்காததால் பயன்தரும் வான் பயிர்களும் அழிவடையும் நிலை காணப் படுகின்றது. கிணறுகளில் உள்ள நீர்வற்றிச் செல்வதால் அவற்றை நம்பி மேற்கொள்ளப்பட்ட உப உணவுச் செய்கையும் பாதிக் கப்பட்டுள்ளது. இதனால் மரக்கறி வகைகளின் விலைகள் உயர்ந்து காணப்படுகின்றன. (க-500)



# மாறாத போர் வடுக்கள்

முல்லைத்தீவு, செப்.7
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள தேவிபுரம் குடியேற்றத் திட்டப் பகுதிகள் போர் வடுக்களிலிருந்து வழமையான நிலைக்கு இன்னமும் திரும்பாத நிலையில் காணப்படுவதாகத் தெரிய வந்துள்ளது.
இங்குள்ள தென்னந்தோட்டங்கள் பராமரிப்பின்றிக் காடு மண்டிய நிலையில் காணப்படுகின்றன. இங்கு மீள்குடியமர்ந்த குடும்பங்கள் இன்னமும் சிறிய கொட்டில்களில் வசித்து வருவதைக் காணமுடிகின்றது. ஒரு சிலருக்கே நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.
மேலும் தற்போது இங்கு நிலவும் கடுமையான வறட்சி காரணமாக இந்தக் குடியேற்றத் திட்டப் பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

## தொழிற்பயிற்சி நிறுவனத்தால் பல்வேறு தொழிற்பயிற்சிகள்

முல்லைத்தீவு, செப். 7
கற்சிலைமடுவில் இயங்கி வரும் ஜலீட் தொழிற்பயிற்சி நிறுவனம் சகல துறைகளுக்குமான பயிற்சிகளை வழங்குவதுடன் மாணவர்களிடையே தொழில் வாய்ப்புக் களையும் உருவாக்கி வருகின்றது. இதுவரையில் முதலாவது பயிற்சியை நிறைவு செய்த 50 மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை இந்த நிறுவனம் வழங்கியுள்ளது.
மேலும் இரண்டாவது தொகுதி பயிற்சியை 35 பேருக்கு வழங்கிவருகின்றது. இந்தத் தொழிற்பயிற்சி நிலையத்தினூடாக படித்த இளைஞர், யுவதிகள் வேலை தேடி அலையாது தாமே சுயதொழிலில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. இந்தத் தொழிற்பயிற்சிகள் யாவும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-500)

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு (K.K.S வீதிக்கு அருகில்) தேவாலய வீதியில் கிணற்றுடன் உள்ள 1¼ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 176 6206 (31512)(11.6.3)

**காணி விற்பனை**

சுன்னாகம் சந்திக்கு வடக்கே கே.கே.எஸ். வீதியில் இருந்து 100m தூரத்தில் 7 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 071 480 6309 (39483)(7.6)

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல பேக்கரி ஒன்றிற்கு கணக்காளர் மற்றும் விற்பனை உதவியாளர் வேலைக்கு ஆள்கள் தேவைப்படுகின்றனர். குறிப்பாக பெண்கள் விரும்பத்தக்கது.

தகைமைகள் -
* க.பொ.த உ/த (வர்த்தக கணக்கியல் பாடத்தில் சித்தி பெற்றோர்.
* கணினி அறிவு

தொடர்பு:
077 713 1594, 077 314 7580 (39405)(7.6.3)

## வெல்லவாய பகுதியிலும் இரட்டைக் கொலை

வெல்லவாய ,ஊவா குடாஓய பகுதியில் இனந்தெரியாத நபர்களால் ஒரு தாயும் அவரது மகளும் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 85 வயதுடைய தாயும், 58 வயதுடைய அவரது மகளுமே இவ்வாறு வீட்டுக்குள் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

சடலங்கள் மொனராகலை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இரத்தினரி, ஹகவத்த பகுதியிலும் அண்மைக்காலத்தில் இத்தகைய பல இரட்டைக் கொலைகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

**வீடு காணி விற்பனைக்கு**

நல்லூர் செக்கட்டித்தெரு நாவலர் வீதிச் சந்திக்கருகில் இல.64, மருதடி வீதியில் அமைந்துள்ள விசாலமான வீட்டுடன் கூடிய 3 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.

(சி/11839)(10.6.3) தொடர்பு: 077 602 8888

**Soft View Computer Center**

கணினி சிங்கள மற்றும் ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்

102, Main Street, (A9) Jaffna. E.C Colin
T.P : 021 222 4885, 077 905 3545
யாழ். திருமறைக் கலாமன்றம் அருகில்
(இரவு நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றன)

**House For Rent/ வீடு வாடகைக்கு**

மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் வீடு வாடகைக்கு உண்டு.

Cont. No- 078 566 1780 (39441)(11.6)

**வீடு வாடகைக்கு**

சொய்சாபுரம், மொறட்டுவ தொடர் மாடியில் (N BLOCK) ஒரு வீடு வாடகைக்கு உண்டு. வடமராட்சி மக்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு:
021 226 3321, 077 670 4790

**விற்பனைக்குண்டு**

ஹோட்டல் ஒன்றில் பாவித்த குளிர்சாதனப் பெட்டி, கூலர், டைப்பிறீசர், T.V, சாப்பாட்டு மேசை கதிரைகள், கட்டில் மெத்தை, குளிரூட்டிகள் என்பன 70 றக்கா வீதி (பொஸ்கோ முன்பாக) 47, சேர் வை துரைச்சாமி வீதி (வேம்படி வீதி) யாழில் 7ஆம், 8ஆம் திகதி (சனி, ஞாயிறு) களில் விற்பனைக்குண்டு. (31505)(45.6.3)

தொ.பே. 021 222 9958, 077 899 8145

**INFORMATION TECHNOLOGY PARK**
**Jaffna, Sri Lanka**
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்ப பூங்காவில் கீழ்வரும் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**August/September Batch**

* Dip.in PC Application & Office Management
* Dip.in Desktop Publishing
* Internet & e-mail (Workshop)

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | - 27.09.13 |
| வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் | - 28.09.13 |

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer- (c/11902)(11.6.3)

**துருக்கி வேலை அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குரிய விளக்கம்**

**துருக்கி ஐரோப்பிய யூனியனில் உள்ள ஒரு நாடு**

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
**(work Permit Visa)**

புதுப்பிக்கக் கூடிய இரண்டுவருட வேலை ஒப்பந்தம்
மாதாந்த சம்பளம் 690 **Euro** (180×690 = 124200/=)
வேலை (**Packing Section**) பொதி செய்தல் மேலதிக விவரங்களுக்கு நேரில் வரவும்.
வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்து சட்டரீதியான பயணம். நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
(சி/11762)(45.6.3)
முன்பதிவுகளுக்கு மட்டும்.
021 492 1831, 021 492 1832
அனி இன்டர் நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்,
இல. 72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# உயர்தரத்தின் பின்னர் சர்வதேச அங்கீகாரமுள்ள ஒரே ஒரு IT DIPLOMA கற்கைநெறி



DiTEC INTERNATIONAL — **Diploma in Information Technology**

DiE — **Diploma in English**

**பாட உள்ளடக்கங்கள்**
- IT Fundamentals
- Microsoft Office
- PC Hardware
- Networking Essentials
- Internet & Email
- Web Designing - HTML
- Graphics and Animation
- Software Engineering
- C#.net
- Java
- Web Applications
- ASP.net
- Project

(c/11912)

**யாருக்குப் பொருத்தமானது ?**
* A/L பரீட்சைக்குத்தோற்றிய மாணவர்களுக்கு
* IT துறைக்கான உயர்கல்வி வெற்றிகரமான ஆரம்பம் அடித்தளத்தை எதிர்நோக்குவோருக்கு
* பல்கலைக்கழக மாணவர்களுக்கு
* வேலைவாய்ப்பு ஒன்றினை எதிர்நோக்குவோருக்கு

**கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்**
* 10 பாட டிப்ளோமாக்கள் உள்ளடங்கியது
* பாடப்புத்தகங்கள் இலவசம்
* அனுபவமிக்க விரிவுரையாளர்கள்
* 2012 வருடம் 20,000 மாணவர்கள் பெற்றுக்கொண்ட தகமை
* ESOFT இன் 10 பாட டிப்ளோமாக்கள் சான்றிதழுடன் Edexcel UK, BCS-UK போன்ற பிரித்தானிய சான்றிதழ்களையும் பெறமுடியும்.

**FREE Pendrive**

பாடநெறிகள் தொடர்பாக மேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்
**077 990 56 11**

சர்வதேச தரம்வாய்ந்த மேலும் **3** டிப்ளோமாக்கள் முற்றிலும் இலவசம்

**புதிய பிரிவுகள்**
2013.09.07, 08
காலை 9:00 மணி
2013.09.09
காலை 9:00 மணி

**ESOFT METRO CAMPUS - JAFFNA**
No.137, K.K.S Road, Jaffna | 021 222 4142

**ESOFT COMPUTER STUDIES - KILINOCHCHI**
No.01, Kanagapuram Road, Kilinochchi | 021 228 5444

**ESOFT**
Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

HOTLINE : 077 309 9 308 www.esoft.lk 50 நாடளாவிய கிளைகள்

## தென்மராட்சியில் அதிகரிக்கும் வயிற்றுளைவு நோய்த் தாக்கம்

தென்மராட்சி, செப்.7
தென்மராட்சிப் பிரதேசத்தில் வயிற்றுளைவு நோயால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சாவகச்சேரி வைத்தியசாலை புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் கிசிச்சை பெற வருவோரின் தினமும்குறைந்தது இருவருக்குமேல் விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

தற்போது நிலவும் வெப்ப நிலையால் குடிதண்ணீரில் மாற்றம் ஏற்பட்டமை, கடல் உணவு போன்றவற்றால் வயிற்றுளைவு ஏற்பட்டதாக நோயாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய காலநிலையில் கிணறுகளில் கல்சியத்தின் தன்மை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதால் பொதுமக்கள் கொதித்து ஆற வைத்த நீரைப் பருகுமாறும் வெளியிடங்களில் குடிதண்ணீரை பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

வெப்பநிலையாலும் பல்வேறு காரணங்களாலும் வயிற்றுளைவு ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளதால் அது தொடர்பான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலையை நாடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## 300 ஓட்டோக்களுக்கு இதுவரை மீற்றர்

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் 300 ஓட்டோக் களுக்குஇதுவரைமீற்றர்கள்பொருத்தப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட ஓட்டோ சங்கத் தலைவர் எஸ்.ராஜ்குமார் தெரிவித்தார்.

கடந்த 3 மாத காலமாக யாழ். மாவட்டத்தில் சங்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இதுவரை 300 ஓட்டோக்களுக்கு மீற்றர்கள் பொருத்தப்பட்டுள்ளன.


ஏனைய ஓட்டோக்களும் இந்த வருட இறுதிக்குள் மீற்றர்கள் பொருத்தப்படும்.

மீற்றர் பொருத்தும் 2 நிறுவனங்கள் மட்டும் இதில் ஈடுபடுவதால் மீற்றர் பொருத்தும் நடவடிக்கைகள் தாமதமடைவதுடன் கடன் அடிப்படையிலேயே அதிகளனவான ஓட்டோச் சாரதிகள் மீற்றர் பொருத்தி வருகின்றனர். சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஓட்டோக்களுக்கும் கட்டாயம் மீற்றர் பொருத்தப்படும். இதன் காரணமாக பொது மக்களுக்கும் ஓட்டோ சாரதிகளுக்கும் இடையில் ஏற்படும் முரண்பாடு தவிர்க்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

## வலி.கிழக்கில் நான்கு ஒழுங்கைகளுக்கு விமோசனம்

அச்சுவேலி, செப். 7
வலி.கிழக்கு பிரதேச சபையின் நிதியின் மூலம் நான்கு ஒழுங்கைகள் தலா 10 லட்சம் ரூபா செலவில் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

திருத்தி அமைக்கப்படவுள்ள நான்கு ஒழுங்கைகளின் விவரம் வருமாறு: சிறுப்பிட்டி கலை ஒளி ஒழுங்கை அச்சுவேலி பூதத்தம்பி ஒழுங்கை, நிர்வேலி அரசகேசரி ஒழுங்கை, கல்வியங்காடு, நியூசெம்மணி ஒழுங்கை என்பனவாகும். (வ-5)



நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் துரித கதியில் இடம்பெறுகின்றன. (வ-7)

## தென்மராட்சியில் தேர்தல் சுவரொட்டிப் போர்

தென்மராட்சி, செப். 7
தென்மராட்சி பிரதேசத்தில் பகலில் தேர்தல் சுவரொட்டிகள் கிழித்தெடுக்கப்படும் இடங்களில் இரவிரவாக மற்றொரு வேட்பாளரின் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

வேட்பாளர்களின் ஆதரவாளர்களால் மக்கள் கூடும் இடங்கள் உட்பட பல இடங்களில் இரவிரவாக தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

மறுநாள் பகலில் பொலிஸார் மற்றும் கிராம அலுவலர்களால் அகற்றப்படுகின்றன. மீண்டும் அதே இடங்களில் வேறொரு வேட்பாளரின் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

சில இடங்களில் இனந் தெரியாதோரால் சுவரொட்டிகள் மீது கழிவு ஓயில் ஊற்றப்பட்டாலும் அந்த இடங்களிலும் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

வீதிகள் சிலவற்றில் வெள்ளை நிறத்தில் காணப்பட்ட மதில்கள் தற்போது பல நிறங்களிலும் கறுப்பு நிறமாகவும் மாறி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. (வ-9)

# அதிகரித்த கடன் சுமையால் வர்த்தகர் பலர் தலைமறைவு

யாழ்ப்பாணம், செப்.7
போரின் பின்னர் ஏ-9 வீதி போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டதால் தமது வியாபாரத்தை அதிரடியாக அதிகரிக்க முயன்ற பல வர்த்தகர்கள் கடன் சுமையால் தமது வியாபார நடவடிக்கைகளைக் கைவிட்டு தலைமறைவாகி வரும் சம்பவங்கள் மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன.

தென்னிலங்கையிலிருந்து வரும் நிறுவனங்களிடம் பெருந்தொகை நிதியில் பொருள்களை கொள்வனவு செய்து வியாபாரத்தில் இலாபமடைந்ததும் மேலும் வியாபாரத்தை விஸ்தரிப்பதற்காக பெருந் தொகையில் வாடகைக்கு கட்டடங்களைப் பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் வேலையாள்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, தமது நிலையை உயர்த்த 'லீஸிங்'கில் வாகனக் கொள்வனவு போன்றவற்றாலும், வங்கிகள், நிதி நிறுவனங்கள் போன்றவற்றிலும் கடன்களைப் பெற்றும் நடத்தி வந்த வியாபாரம் திடீரென வீழ்ச்சியடைந்ததால் கடன்களை நிவர்த்தி செய்ய முடியாமல் தலைமறைவாகும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இதனால் இவர்களை நம்பிக் கடன் கொடுத்தவர்களும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் பெற்ற கடன்களுக்கு பிணையொப்பமிட்டவர்களும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி அவர்களின் வியாபார நிலையங்களை மூட வேண்டிய நிலைகளும் உருவாகி உள்ளது.

தலைமறைவான சில வர்த்தகர்கள் வெளிநாடுகளில் உள்ள தெரிந்தவர்களுடன் தொலைபேசியில் கதைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடன் சுமையினால் வர்த்தகர்கள் சிலர் உயிரை மாய்த்துக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (வ-9)

# சமஷ்டியின் அர்த்தம் புரியாத சிலர் தெற்கை குழப்புவதாக புலம்புகின்றனர்

### கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து

யாழ்ப்பாணம்,செப்.7
சமஷ்டி ஆட்சி முறை என்பதன் சரியான அர்த்தம் தெரியாதவர் களே தமிழ் தேசிய கூட்ட மைப்பு தெற்கைச் குழப்ப சதி செய்கின்றது எனப் பிதற்றுகின்றனர். சமஷ்டி ஆட்சி முறைமை எம்மால் கொண்டு வரப்பட்ட ஒன்று அல்ல. அது சிங்களவர்களால் தேசியத் தலைவர் என்று போற்றப் படும் காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா வினால் தான் முன்வைக் கப்பட்டது. இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

ஜனாதிபதியின் சகோதரரும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாப னத்தை விமர்சனம் செய்துள்ளாரே என்று கேட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை. தனியாக ஆட்சி நடத்தவும் கேட்கவில்லை. ஒன்றுபட்ட இலங்கைக்குள் சுய நிர்ணய உரிமையுடன் நம்மை நாமே ஆளும் முறைமையைத்தான் கேட்கின்றோம்.

வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்று கூறுவது ஒன்றும் தவறு அல்ல. அது சிங்களத் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

1956ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இன வன்முறையைத் தொடர்ந்து என்பதுகளில் தென்னிலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் தமிழ் மக்களை கப்பல்களிலும், விமானங்களிலும் ஏற்றி வடக்கிற்கு அனுப்பி வைத்தனர். இதனை விட கொழும்பில் விடுதிகளில் தங்கி இருந்த தமிழர்களை எல்லாம் ஒரே இரவில் பஸ்களில் ஏற்றி வவுனியாவுக்கு அப்பால் கொண்டு வந்து விட்டார்கள்.

இவை எல்லாம் எதைக் குறிக்கின்றன? வடக்கும் கிழக்கும்தான் தமிழர்களுடைய பிரதேசம், அங்குதான் தமிழர்களுக்கும் பாதுகாப்பு என்பதை சிங்களத் தலைவர்களே அங்கீகரித்துள்ளனர் என்பதைத் தானே

கொழும்பில் கலவரம் வெடித்த போது அங்கு வாழ்ந்த தமிழர்களை மலையகத்துக்கோ அல்லது ஊவா மாகாணத்திக்கோ கொண்டு செல்லாமல் வவுனியாவுக்கு அப்பால் ஏன் கொண்டு வந்து விட்டனர். காரணம் இது தமிழர்களின் தாயகம் என்பதால் தான். இதை பஸில் ராஜ பக்ஷ தெரிந்து கொள்ள வேண்டும். தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் தமி ழர்கள் தான். வடக்கு கிழக்கு, மலையகம், கொழும்பு என்று பேதம் இல்லை. மலையகத் தமிழர்கள் பலர் இங்கு பிரதேச சபைகளில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். நடைபெறவுள்ள மகாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிடுகின்றனர். எம் தமிழர்கள் தலைநகரில் கொழும்பு மாநகர சபையிலும் உறுப்பினர்களாக இருக்கின்றனர். நாம் எல்லோருமே ஈழத் தமிழர்கள்.

ஓய்வு பெற்ற மூத்த நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்களை நாங்கள் வட மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக முன்னிலைப்படுத்தியுள்ள தன் மூலம் கொழும்பில் இருந்து வடக்கை ஆளும் நிலை வரும் என பஸில் ராஜ பக்ஷ கூறுகின்றார். இது அவருடைய அரசியல் ஞானத்தை எடை போடுவதாக அமைந்துள்ளது. சர்வதேச அரங்கில் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலம் வடக்கும் கிழக்கும் ஒன்றிணைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தையும் மீறி அரசியல் சூதாட்டம் ஆடி நீதிமன்றத் தீர்ப்பை வைத்து இரண்டாகப் பிரித்துவிட்டனர்.

இது இந்தியாவை மட்டுமல்ல சர்வதேசத்தையும் அவமதிக்கும் ஒரு செயல்.

இந்தியாவினால் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டது.

உண்மை இவ்வாறு இருக்க தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெற்கைச் குழப்ப சதி செய்கின்றது என ஒப்பாரி வைப்பது மிகவும் நகைச்சுவைக்குரியது. அதற்காக வருந்துகின்றேன் என்றார் சுரேஷ் பிமேச்சந்திரன். (ஜ-02)

## நடமாடும் சேவையில் விண்ணப்பித்தோருக்கு அடையாள அட்டைகள் அனுப்பிவைப்பு

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆறு தினங்கள் நடைபெற்ற தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் ஆள்பதிவுத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படுகின்றன. இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட தேசிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகம் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ள அதேவேளை அடையாள அட்டை பெறுவதற்கு சுய விலாசம் எழுதப்பட்ட கடித உறையை விண்ணப்பத்தோடு சமர்ப்பித்தவர்களுக்கு நேரடியாகவும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

வலி.கிழக்கில் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவைகள் ஆறு தினங்கள் நடத்தப்பட்டன. மூன்று தினங்கள் 'பவ்ரல்' அமைப்பின் அனுசரணையுடனும் மூன்று தினங்கள் 'கபே' மற்றும் 'சீ.எச்.ஆர்' நிறுவனத்தின் அனுசரணையுடனும் நடைபெற்றன. (வ-11)



# அரசு தான் விதைத்ததையே இன்று அறுவடை செய்கிறது

## கரு ஜெயசூரிய தெரிவிப்பு



கொழும்பு.செப்.7
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு தான் விதைத்ததையே இன்று அறுவடை செய்து கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

கொழும்பு. ராஜகிரியவில் உள்ள தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க மண்டபத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் சட்டங்களை அரசியல் அதிகாரத்தின் பிடியில் வைத்துக் கொண்டு எத்தனை தேர்தல்களை நடத்தினாலும் அதன் மூலம் ஜனநாயகம் பாதுகாக்கப்படப் போவதில்லை.

தேர்தல் கண்காணிப்பு அமைப் புகளின் தலைவர்கள் தேர்தலில் மேற்கொள்ளப்படும் முறைகேடுகள் பற்றி தெளிவாகத் தெரிவித்துள்ளனர். சமுர்த்தி அதிகாரிகள் வெளிப்படையாகவே அரசின் தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றனர்.

தேர்தல் பணிகளில் ஈடுபடுமாறு அரச மேல் மட்டத்தில் இருந்து தமக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்று சில சமுர்த்தி அதிகாரிகள் எம்மிடம் தெரிவித்தனர்.

அரசின் வாகனங்கள் வரையறையின்றி அரசின் தேர்தல் பரப்புரைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் கூட இருக்காத தடைகளும் இடையூறுகளும் அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினரின் வாகனங்களினால் ஏற்படுத்தப்படுகின்றன.

அரசில் உள்ள பலமிக்க அதிகாரிகள் மக்களின் பணத்தைக் கொண்டு உலங்குவானூர்திகளை பயன்படுத்தி பயணங்களை மேற்கொள்கின்றனர்.

அரச மாளிகைகள் தேர்தல் பரப்புரை அலுவலகங்களாக மாறி விட்டன. தேர்தலை அடிப்படையாகக் கொண்டு அரச மாளிகைகளில் விருந்துகள் நடத்தப்படுகின்றன. இதற்காக நாட்டு மக்களின் பணமே செல விடப்படுகிறது.-என்றார். (ச)

## யாழ் ஓசைப் பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.7
யாழ். மாநகர சபையின் யாழ் ஓசைப் பெருவிழா 2013 நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (ந-7)

## 'புட் வால்வுகள்' அபகரிப்பு

தென்மராட்சி, செப்.7
சாவகச்சேரி கல்வயல் விளைவேலி தோட்டங்களின் கிணறுகளுக்குள் வைக்கப்பட்டிருந்த 15க்கும் மேற்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களின் குழாய்களின் 'புட்வால்வுகள்' திருடர்களினால் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. புதன்கிழமை இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.



விளைவேலி தோட்ட நிலங்களில் வெங்காயம் உட் பட பல்வேறு மரக்கறி வகைகள் பயிரிடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் காலை மாலை வேளைகளில் பயிர்களுக்கு நீரிறைத்து முடிந்ததும் விவசாயிகள் தமது நீரிறைக்கும் இயந்திரங்களை வீடுகளுக்கு கொண்டு சென்று விடுகின்றனர்.

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை தோட்ட நிலங்களுக்குள் நுழைந்த திருடர்கள் அங்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் இல்லாததால் கிணறுகளுக்குள் காணப்பட்ட குழாய்களை வெளியே எடுத்து அவற்றின் புட்வால்வுகளை வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த வாரம் மட்டுவில் அம்பலாந்துறைப் பகுதியிலும் இவ்வாறான திருட்டு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திருட்டுத் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

## அதிபர்களுக்கு செயலமர்வு

தென்மராட்சி, செப்.7
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட இரு நாள் செயலமர்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரினால் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தச் செயலமர்வில் யாழ்ப்பாணம், வவுனியா வடக்கு கல்வி வலயங்களின் ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர்கள், யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்வி வலயக் கணக்காளர் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை நிகழ்த்தினர். (ச-9)

☎ 0215671111
advt@uthayan.com

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
**விசேட தொழில் சார் பயிற்சிகள்**
1. கணினிப் பிரயோகவியலாளர் பயிற்சி (4 மாதம்)
2. தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பயிற்சி (6 மாதம்)
**ஆரம்பம்: 09.09.2013 காலை 8.30 மணி**
விசேட சலுகைகள்:
* மூன்றாம் நிலைக் கல்வி தொழில் கல்வி ஆணைக்குழுவின் அனுமதியுடனான பயிற்சியும் சான்றிதழும்.
* கழகப் பயிற்சியின் பின் 6 மாத காலம் அரச அலுவலகம் ஒன்றில் செயன்முறைப்பயிற்சி
* மேலதிக ஆங்கில தட்டச்சுப்பயிற்சி
* மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு நேரில் அல்லது தொலைபேசியில்
021 226 4211, 077 864 8213
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி, கரவெட்டி. (31505) (45.6.3) நிர்வாகம்.

சாதனையாளரின் சேவை சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாமஸ்ரீ தேச ஜோதி
**ஏ.என்.எஸ்.திருச்செல்வம் ஜே.பி**
இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாக நியமனம் பெற்று பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட பத்திரிகையாளர் ஏ.என்.எஸ்.திருச்செல்வம் சாமஸ்ரீ தேச ஜோதி பட்டமும் பெற்று உயர் விருதும் பெற்றுள்ளதுடன் பத்திரிகைத் துறையில் 35 வருட சாதனைக்கான விருதும் பெற்றுள்ளார். இவரது சேவைகளும் சாதனைகளும் மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
பொன்.இராசதுரை குடும்பமும், மஹாலட்சுமி பல்பொருள் விற்பனை நிலைய ஊழியர்களும்
பஸ்நிலையம், பருத்தித்துறை. (வி/11906)(5.3.6)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய ஆதார வைத்தியசாலைகளில் அபிவிருத்தி உத்தியோகத்தர் (சுகாதாரம்) ஆக பதவி வகிப்பவரும் யாழ்.பல்கலைக்கழகப்பட்டதாரியும் சமூக சேவையாளருமான
**கந்தையா இந்திரகுமார்**
கடந்த 27.08.2013 அன்று யாழ். மாவட்ட நீதிபதி உயர்திரு A.A.ஆனந்தராஜா முன்னிலையில்சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டமையையிட்டுப் பாராட்டுவதுடன் இது போன்று பல பதவிகளையும் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.
சட்டத்தரணி செ.ஜெயக்குமார் குடும்பம்
571/10 - 4/2,காலிவீதி, கொழும்பு -06.
சு.ஜெகநாதன்,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF CAMBRIDGE
**CAMBRIDGE ENGLISH**
After A/L
**August** மாதத்தில் A/L பரீட்சைக்குத் தோற்றி மருத்துவ பொறியியல், விவசாய, விஞ்ஞான முகாமைத்துவம் போன்ற பாட நெறிகளை பல்கலைக்கழகங்களில் ஆங்கில மொழி மூலம் கற்க இருக்கும் மாணவர்கள் தங்கள் ஆங்கில அறிவைக் கூட்டிக் கொள்ளவும், பல்கலைக்கழகங்களில் எந்தவித சிரமுமின்றி விரிவுரைகளைக் கேட்கவும், ஒப்படைகளை எழுதவும் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள அரிய சந்தர்ப்பம்.
உடனடியாக BRITISH Council இன் ஆதரவுடன் 02.09.2013 இல் ஆரம்பிக்கவிருக்கும் Cambridge - Preliminary Engligh Test (PET) வகுப்பில் சேருங்கள்.
◇ இது ஓர் Intermediale B, level பரீட்சையாகும். U.Kஇல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை ஏற்றுக்கொள்கின்றன.
◇ நீங்கள் UK இல் திருமணம் செய்வீர்களானால் UK Border Agency அங்கீகரிக்கும் A1 பரீட்சைக்குப் பதிலாக PET Certificate இனை நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் ஒப்படைக்கமுடியும்.
◇ நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றிய பின் IELTS வகுப்பில் சேர்ந்தால் கற்க இலகுவாக இருக்கும்
Subjects : Reading, Writing, Listening, Speaking
Exam Fee : Rs.6900/=
Exam Date : 16.11.2013 - Colombo

Course Schedule

| | Mon,Tues,Wed,Thur | Saturday&Sunday |
|---|---|---|
| Duaration | 10 weeks | 10 weeks |
| Time | 8.30-10.30;10.30-12.30 | 2.00-5.00 |
| Exam fee | Rs.8300/= | |
| Exam Date | 07-12-2013 - Colombo | |

வகுப்புக்கள் 09.09.2013 இல் ஆரம்பமாகும்.
For Registration and Further details Contact
**BRITISH COLLEGE OF ENGLISH**
No. 192, Navalar Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்குச் சமீபமாக)
Tel : 021 222 0384 - 077 880 3887
(31519)

**வேலையாள் தேவை**
சட்டத்தரணி அலுவலகம் ஒன்றில் கடமையாற்ற கொம்பியூட்டர் தமிழ் ரைப்பிங் தெரிந்த பெண் பிள்ளை தேவை.
தொடர்பு: (39456) (11.6.3)
077 276 8470, 077 139 7969

**பசுக்கன்று தேவை**
ஈன்று இரண்டு நாளில் கன்றைத் தவறவிட்ட கறவைப்பசு ஒன்றுக்கு தாய்ப் பசுவைத் தவறவிட்ட இரண்டு, மூன்று நாள்கள் கொண்ட கன்று உள்ளவர் தொடர்பு கொள்ளவும்.
(C/11911)(11.6.3)
தொலைபேசி: 021 226 2067
கைத்தொலைபேசி: 077 600 6400


**மணமக்கள் தேவை**
* 80இல் பிறந்த, செவ்வாய் பாவம் இல்லாமல், 17 பாவம் உடைய, B.Scஇஞ்சினியருக்கு படித்த மணமகள் தேவை. (விவாகரத்துப் பெற்றவர்)
* 83இல் பிறந்த, 7 இல் சூரியனும் செவ்வாயும் 33½ பாவம், உடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த, 4இல் சூரியனும் செவ்வாயும் 15¼ பாவம் உடைய, அமெரிக்க பிரஜாவுரிமை பெற்ற மணமகளுக்கு பட்டதாரி மணமகன் தேவை.
* 81இல் பிறந்த, 2இல் செவ்வாய், 9½ பாவம் உடைய, அவுஸ்திரேலிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 78இல் பிறந்த, 4இல் சூரியனும் செவ்வாயும் 25½ பாவமுடைய, அமெரிக்கப் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த, 7இல் சூரியனும் செவ்வாயும் 63 பாவம் உடைய ஜேர்மன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 86இல் பிறந்த, செவ்வாய் இல்லாமல் 13½ பாவமுடைய மணமகளுக்கு லண்டன், கனடா மணமகன் தேவை.
தொடர்பு:கமலக்கண்ணன் திருமணசேவை-
இல.435/3,கோயில் வீதி, நல்லூர். (வி/31517) (3.5.6)
தொ.பே.: 077 607 0862

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம் சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியில் Holy Family Convent இற்கு முன்பாக 3 அறைகள் (குளியலறை உட்பட) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:077 555 2142 (31551) (3.5.6)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# அன்னாசி உறிஞ்சி துண்டங்கள் விவசாயிகளுக்கு விநியோகம்



யாழ். குடாநாட்டு விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் பத்தாயிரம் அன்னாசி உறிஞ்சி துண்டங்களைத் தருவித்து விவசாயிகளுக்கு விநியோகித்து வருகின்றது.

வட்டக்கச்சியில் நடைபெற்று வரும் விவசாய கண்காட்சியில் இந்த அன்னாசி உறிஞ்சிகள் வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருவதாக சங்கத்தின் பொதுமுகாமையாளர் ரி.ரவி மயூரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொறிசியஸ் என்ற இனத்தைச் சேர்ந்த இந்த அன்னாசி உறிஞ்சிகள் குளியாப்பிட்டியில் இருந்து எடுத்து வரப்பட்டன.

இந்த அன்னாசி உறிஞ்சித் துண்டங்களை விவசாயிகள் ஆர்வத்துடன் பெற்று வருகின்றனர்.

சிறந்த இனமான உடைய இந்த அன்னாசித் துண்டங்களை வடக்கே பயிரிடுவதன் மூலம் அன்னாசிச் செய்கையை மேலும் ஊக்குவிக்க விவசாயத் திணைக்களம் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. (ந-17)

# கொடுப்பனவு வழங்குவதாகக் கூறி அழைத்து மக்களுக்கு பரப்புரை

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில்

புதுக்குடியிருப்பு, செப்.7

வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்ற அறிவித்தலை நம்பி புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குச் சென்ற மக்கள், கொடுப்பனவுகள் வழங்கப்படாததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவுகள் கடந்த வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளதாக அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த அறிவித்தலை நம்பி அந்தப் பகுதிகளில் இருந்து சுமார் 450 குடும்பங்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மண்டபத்துக்கு சென்றனர். ஆனால் அவர்களுக்கு எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. இதனால் மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர் என்று கூறப்படுகின்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட ஆளுங் கட்சியின் பிரதி அமைச்சர் ஒருவர் அரசினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் பற்றியே அதில் மக்களுக்கு விளக்கமளித்தார் என்று கூறப்படுகிறது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் பொது சன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்வதற்காகவே இத் தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


(ந-410)

## பொறுப்பதிகாரியாக பதவியேற்பு

யாழ்ப்பாணம், செப்.7

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாக வைத்திய கலாநிதி சி.யமுனானந்தா பொறுப்பேற்றுள்ளார்.

கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரியாக பண்ணை வைத்திய சாலையில் கடமையாற்றி வந்த இவர் 4 வருட சேவையில் இடமாற்றக் கொள்கையின் அடிப்படையில் பண்டத்தரிப்பு பிரதேச வைத்திய சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். இதேவேளை யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரியாக, பதில் கடமையாற்றிய மருத்துவர் எஸ். மணிவாசகர் பொறுப்பேற்றுள்ளார். (ந-14)




இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் நெடுந்தீவுப் பிரிவுத் தொண்டர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கடந்த வார இறுதியில் இரத்ததானம் வழங்கினார்கள். (வ-7)

# வெட்டுக்களி புழுதிக்கு முடிவு கிட்டுமா?

## நெடுந்தீவில் மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், செப்.7

நெடுந்தீவில் வறண்டு கிடக்கும் வெட்டுக்களி குளத்துப் பகுதியில் இருந்து புழுதி பறக்கத் தொடங்கியுள்ளதால் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அந்தப் பகுதியால் போக்குவரத்துச் செய்யும் மக்களும் புழுதி படிந்த நிலையில் தமது போக்குவரத்தைத் தொடர வேண்டியுள்ளது.

இந்தக் குளத்தை ஆழமாக்கும் பணிகள், அணைகட்டும் பணிகள், இடம்பெற்றிருந்த போதும் குளத்தில் நீர்தேங்கி நிற்கவில்லை. பெருமளவு நிதி இதற்கெனச் செலவிடப்பட்ட போதும் அதனால் எந்தவித பயனும் கிடைக்கவில்லை. கடும் காற்றுக் காலத்தில் வெட்டுக்களிக் குளத்தில் இருந்து எழும் புழுதி நயினா தீவு அனலைதீவு தெற்குக் கடற்கரைப் பகுதிகளில் உள்ள பனைகளை வெள்ளை நிறமாக்கி விடுகின்றது. தற்சமயம் நெடுந்தீவு வைத்தியசாலைப் பகுதி வரை புழுதி பறந்து காணப்படுகின்றது. இந்தப் புழுதி காரணமாக இந்தப் பகுதி வீடுகளில் கூட நிம்மதியாக இருக்க முடியவில்லை எனவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-7)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.7

புன்னாலைக்கட்டுவன் கணேச முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், விளை யாட்டு முற்றம் திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கணேச சனசமூக நிலையத் தலைவர் ஆ.திருநாவுக்கரசு தலைமை யில் நடைபெறும்.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் முன்பள்ளிகளின் பணிப்பாளர் செல்வி.ஜெயா தம்பையா கலந்துகொள்வார்.(ந)

# பனை உற்பத்தி பொருள்களுக்கு கண்காட்சியில் அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், செப்.7

வருடாந்த விவசாயக் கண்காட்சியில் பனை உற்பத்திப் பொருள்களுக்கான காட்சிக் கூடத்துக்கு பார்வையாளர்கள் மத்தியில் இருந்து அமோக வரவேற்பு கிடைக்கப்பெற்றுள்ளது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

வருடாந்த விவசாயக் கண்காட்சி இந்த வருடம் கிளிநொச்சி வட்டக்கச்சியில் நடைபெற்றது. இதன்போது ஒவ்வொரு வகைசார் உற்பத்திகளுக்கும் விசேட காட்சிக் கூடங்கள் தனித்தனியாக ஏற்படுத்தப்பட்டிருந்தன. இந்த வகையில் பனை உற்பத்திப் பொருள்களுக்கும் விசேட காட்சிக் கூடம் அமைக்கப்பட்டிருந்தது.

வடக்கின் பிரதான உற்பத்திப் பொருள்களாக பனை உற்பத்திப் பொருள்கள் கருதப்படுவதால் வெளி மாவட்டங்களில் இருந்து கண்காட்சியைப் பார்வையிட வந்தோர் அதிகமாக பனை உற்பத்திப் பொருள்களின் காட்சிக் கூடத்தை ஆர்வமாகப் பார்வையிட்டனர். அத்துடன் உற்பத்திப் பொருள்களையும் வாங்கிச் சென்றனர்.

வட மாகாணத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட பனை சார் உற்பத்திப் பொருள்கள், உணவுப் பொருள்கள், அழகு சாதனப் பொருள்கள் என காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

கூடுதலாக தென்னிலங்கைப் பகுதியில் இருந்து கண்காட்சியைப் பார்வையிட வந்தோர் பனைசார் உற்பத்திப் பொருள்களின் காட்சிக் கூடத்தை ஆர்வமாகப் பார்வையிட்டனர்.

ஒவ்வொரு வருடமும் விசேட கண்காட்சிகள் யாழ். மாவட்டத்தில் நடைபெறும்போது பனைசார் உற்பத்திப் பொருள்களுக்கும் தனியாகக் காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இந்த வருடம் வருடாந்த வட மாகாண விவசாயக் கண்காட்சியில் பனை சார் உற்பத்திப் பொருள்களுக்கு காட்சிக் கூடம் அமைக்கப்பட்டன. அந்த வகையில் இந்த வருட விவசாயக் கண்காட்சியில் அமோக வர வேற்பு பனை உற்பத்திப் பொருள்களுக்குக் கிடைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-14)

# மாயமானார் வர்த்தகர்

தென்மராட்சி, செப்.7

கடன் சுமையால் தலைமறைவானார் வர்த்தகர். கடைக் கதவு உட்பட கடையில் இருந்த தளபாடங்கள் உட்பட பொருள்களை எடுத்துச் சென்றனர் கடன் கொடுத்தவர்கள். இந்தச் சம் பவம் புதக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்றது.

வர்த்தகர் திடீரென தலைமறைவாகிய போதிலும் வர்த்தக நிலையம் அவரது குடும்பத்தினரால் நடத்தப்பட்டு வந்தது. இந்த நிலையில் வர்த்தகருக்கு கடன் கொடுத்த வர்கள் பொறுமையை இழந்து கடையில் இருந்த பொருள்களுடன் கதவையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடைக் கட்டடம் குறித்த வர்த்தகரால் வாடகைக்கு எடுத்து நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடன் சுமையினால் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த 7 வர்த்தகர்கள் இதுவரை தலைமறைவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், செப்.7

கல்விமாணித் தின ஒன்று கூடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். கல்வியியல் கல்லூரியில் நடைபெறும்.

கல்லூரியின் கல்விமாணிப் பிராந்திய இணைப்பாளர் எஸ். ஆர். சத்தியேந்திரம் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி கலந்து கொள்வார்.

அன்றைய தினம் மாலை 3 மணிக்கு 'இனிய மாலை' நிகழ்வு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் திருமதி குமாரி ரணசிங்க கலந்து கொள்வர். (ந)

# மனனப் போட்டி முடிவுகள்

கல்வித்திணைக்களத்தின் கரவெட்டிக் கோட்ட மனனப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அதனடிப்படையில் வகுப்புரீதியாகபாடசாலை மாணவர்கள் பெற்ற நிலை வருமாறு:-

**தரம்-1**

முதலாம் இடம்-சி.லசானா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), இரண்டாம் இடம்- ந.சங்கீத் (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), மூன்றாம் இடம்- பி.பிரம்மியா (கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலை)

**தரம்-2**

முதலாம் இடம்- ப.ஆரணி (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), இரண்டாம் இடம்- து.திருஷிகா (கரணவாய் வேதாரணீஸ்வரா வித்.), மூன் றாம் இடம்-க.சங்கீதா (வதிரி திரு இருதயக் கல்லூரி)

**தரம்-3**

முதலாம் இடம்- பா.அபிநயன் (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), இரண்டாம் இடம்- இ.அஜந் (கரணவாய் வேதாரணீஸ்வரா வித்தியாலயம்), மூன்றாம் இடம்- நா. கிருஷ்ண மேனன் (கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம்)

**தரம்-4**

முதலாம் இடம்- சொ.கோவர்த்தனி (கரணவாய் வேதாரணீஸ்வரா வித்தி), இரண்டாம் இடம்-கு.சஞ்சிகா (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை), மூன்றாம் இடம்-ம.கிருஷன் (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்)

**தரம்-5**

முதலாம் இடம்- பு.திலக்சிகா (கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்), இரண்டாம் இடம்-யோ.மதுமிதா (கரணவாய் மணியகாரன் தோட்டம்), மூன்றாம் இடம்- ப. அஜானா (நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை). (ந)

## வித்தகம் சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், செப்.7

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் தேசிய கல்வி நிறுவக, கல்வி முதுமாணி மாணவர்களின் 'வித்தகம்' சஞ்சிகை வெளியீடும் புதிய மாணவர்களின் வரவேற்பு நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் எஸ்.ஜே.யோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக தேசிய கல்வி நிறுவகப் பிரதிப் பணிப்பாளர் பேராசிரியர் பி.ஜவ்வரும் சிறப்பு விருந்தினராக பணிப்பாளர் திருமதி குமாரி ரணசிங்கவும் கலந்துகொள்வர். (ந)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



பருத்தித்துறை, வராத்துப்பளையைச் சேர்ந்த ஏ.எஸ்.எஸ். திருச்செல்வம் அகில இலங்கை சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பத்திரிகையாளரான இவர் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வட பிராந்திய இணைப்பாளராகவும், தென்னாசிய ஊடக அமைப்பின் இலங்கைக்கிளை உறுப்பினராகவும் இருந்து வருகின்றார். யாழ். பல்கலைக்கழக ஊடகவியல் டிப்ளோமா பயிற்சியையும் பெற்றுள்ளார். இவர் இளைப்பாறிய நூலகராவார். (ந)

## சுஜித் என்ரபிறைசஸ்

டச்சு வீதி, சாவகச்சேரி
(பழனி ஆண்டவர் ஆலயத்துக்கு அருகில்)

விற்பனைப் பிரதிநிதிகள்
விநியோகப் பிரதிநிதிகள்
**தேவை**

மாதாந்தம் ரூபா 30000/- தொடக்கம் 35000/- வரை சம்பாதிக்கலாம்.

**தொடர்பு**

(2747-23-14-16) **021 227 0586**


## மரண அறிவித்தல்

### பத்மநாதன் செல்லம்மா



மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் செல்லம்மா கடந்த 04.09.2013 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.09.2013 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## சிற்றாலய விழாஇன்று

வடமராட்சி,செப். 7

கரவெட்டி இராஜ கிராமம் மெதடிஸ்த திருச் சபையின் சிற்றாலய வருடாந்த ஆண்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. (த-400-8)

## மின்தடை

யாழ்ப்பாணம்,செப். 7

கிளிநொச்சி - சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள 132,000 வோல்ட் அதியுயர் அழுத்த மின்மார்க்கத்தின் ஊடாக மின்விநியோக இணைப்பு மீள்ஒழுங்குபடுத்தல் வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை மந்திகை, புலோலி, கற்கோவளம், தும்பளை, வல்லிபுரம், அம்பன், குடத்தனை, மருதனார் மடம், இணுவில், கோண்டாவில், தாவடி, கொக்குவில், கொட்டடி, நாவாந்துறை, காக்கைதீவு, முஸ்லிம் கல்லூரி வீதி ஆகிய இங்களிலும்-

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கரந்தன், ஆடியபாதம் வீதி, கொக்குவில், மருத்துவபீடம், திருநெல்வேலி, கல்வியங்காடு, சிறுவிளான், உரும்பிராய்,கோண்டாவில், பட்டணப் பகுதி, யாழ். மாநகரசபைப் பகுதி, குருநகர், பாஷையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ். பிரதான வீதி, பண்ணைப் பகுதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், மாதகல், இளவாலை, சங்கானை, வட லியடைப்பு, பண்டத்தரிப்பு, கரந்தன், நீர் வேலி, சிறுப்பிட்டி, புத்தூர், அச்சுவேலி, வாதரவத்தை, வீரவாணி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.

## மரண அறிவித்தல்

### முருகேசு பாலசிங்கம்



ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

மாரியம்மன் கோயிலடி, கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பாலசிங்கம் நேற்று (06.09.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற காராளசிங்கம் மற்றும் நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சுலோயனாதேவியின் அன்புக் கணவரும் சுகந்தினி (கனடா), சுதாகரன் (சுவீற்றிகா கல்லுடைக்கும் ஆலை), சுரேஸ்கரன், பாலேஸ்கரன் (தபாலகம்- கோப்பாய்), சுபாஜினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுப்பிரமணியம் ராசம்மா, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பராணி (கனடா), ரவீந்திரகுமாரன் (ஓய்வு பெற்ற இலங்கைத் தொலைத்தொடர்புக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வைத்திலிங்கம் (கனடா), சுதர்யனா (ஜமுனா), சாந்தினி (கி/பூநகரி மகா வித்தியாலய ஆசிரியர்), அகல்யா, தயாளன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.09.2013) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தன் காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(31543-23-14-16)

மாரியம்மன் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை திருநாவுக்கரசு (ராசு)



அளவெட்டி வடக்கு ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஐயாத்துரை திருநாவுக்கரசு நேற்றுமுன்தினம் (05.09.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் அன்னபூரணம் தம்பியரின் இளைய புதல்வரும், அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி-சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை மற்றும் பாலகௌரி, இராசநாயகி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், கஜனி (U.K), நிர்த்திகா, சுவர்னா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதாஸனின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணிக்கு உடுவில் மேற்கு டச்சு றோட்டிற்கு அருகில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டச்சு றோட், உடுவில் மேற்கு.**
**077 977 3155**

(31545) (10,16,14)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பூமணி



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் சந்தம் புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பூமணி கடந்த 05.09.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டாரி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சூரியன் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அரியகுட்டி இராசமணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நேசமலர், ஞானமலர், காலஞ்சென்ற சிவமலர், காலஞ்சென்ற செல்வம், சிவசுந்தரராசா (சுந்தரம் ஜெயா ஸ்ரோர்ஸ், காரைநகர்), சிவகுருநாதன் (கிட்டி, ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி காரைநகர்), சிவானந்தநாதர் (சிவா- ஜெனா ரவல்ஸ், ஆனைக்கோட்டை), நவமலர், குலானந்தராசா (குலம்- குலம் களஞ்சியம், மானிப்பாய்), அரியமலர் (இந்தியா), சிவகுலகருணா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் துரைராசா, காலஞ்சென்ற பாலசிங்கம், தங்கமலர், ஸ்ரீகுலராணி, விஜயராணி, பாலசுப்பிரமணியம், ரவீந்திரன், ரதிமலர், சுபாஷினி ஆகியோரின் ஆசை மாமியும் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகளுக்கும் உரித்துடையவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தம்புளியடி (புதுரோட்),
காரைநகர்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலாதேவி தம்பையா



விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி தம்பையா நேற்று (06.09.2013)இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையாவின்(ஓய்வுபெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், நீர்வேலி இளையதம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, பாலசிங்கம், (ஈழநாடு முன்னாள் ஊழியர்)தணிகாசலம் மற்றும் தில்லைநாதன் (ஓய்வு பெற்ற அதிபர்), குஞ்சிதபாதம்(ஓய்வுபெற்ற ஆசிரியர்) பூவிலிங்கம்(ஓய்வுபெற்ற வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கக்கிளை முகாமையாளர்), குகதாசன் (ஓய்வு பெற்ற வலிகிழக்கு பிரதேச சபை செயலாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற கூட்டுறவு தட்டெழுத்தாளர்), கைலாயபிள்ளை (ஓய்வுபெற்ற மதுவரித்திணைக்கள உத்தியோ கத்தர்) ஆகியோரின் மைத்துனியும், லலிதாதேவி, காலஞ்சென்ற பரமானந்தம் (ஓய்வு பெற்ற விற்பனை அதிகாரி)மற்றும் நித்தியானந்தன் (அமெரிக்கா) காலஞ்சென்ற தவராணி மற்றும் அற்புதமலர்,சாரதாம்பாள், நிர்மலானந்தன் (வலிதெற்கு பிரதேச சபை வருமானவரி பரிசோதகர்), விமலராணி, குணரோகினி, ஜெயக்காந்தன் (யாழ். பிரதம தபாலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,காலஞ்சென்ற வேலுப் பிள்ளை (ஓய்வு பெற்ற யா.ப.நோ.கூ.ச.கிளைமுகாமையாளர்) மற்றும் வனிதாதேவி (ஓய்வுபெற்ற உபதபாலதிபர்), காலஞ்சென்ற இந்திராணி,செல்வராசா,(ஓய்வுபெற்ற நல்லூர் பிரதேச சபை, மின்சார சபை ஊழியர்) மற்றும் யோகநாதன்,கந்தசாமி, காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் திசாகராஜா(விவசாயதிணைக்கள தட்டெழுத்தாளர்- வட்டக்கச்சி), விமலராணி ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி தர்சினி பிரகாஸ், திருமதி மலர்விழி சியோட்ஜன், காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் உஷா, கஜனி, துஷாந், நிஷாந், திருமதி ஜசிந்தா ஜீவகாந்தன், திருமதி மஞ்சுளா சுரேஸ்குமார், திருமதி சயந்தினி டயானந்தன், ஜயந்தன், சங்கீதா, திருமதி நர்மதா றமணஸ்ரீ, மயூரி, கோபி நாத்,கயூரன், கௌதமன், சரிதா, ராதிகா,கிருபாகர், கலைமதி,திருமதி சாருஜா மணிவதனன், அகிலா, அனோஜன் ஆகியோரின் பேர்த்தியும், சாரங்கனி, புகழீசன், சனந்தன், சாதனா, ஸயிலாஸ், தனிஸ்கா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.09.2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விநாயகர் வீதி,நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

(31526)(5.6)

தகவல்:குடும்பத்தினர்.

## எங்கள் அன்புத் தெய்வத்திற்கு ஆண்டுகள் ஏழு



அமரர்
### சுப்பிரமணியம் பசுபதி

தோற்றம்
29
11
1935

மறைவு
26
08
2006

திதி: துதியை
07.09.2013

ஆண்டுகள் ஏழு ஆனதுவோ அப்பா! நீங்கள்
அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக்கேங்குகின்றோம்!
வழிகாட்டும் ஒளியாய்- எம் விழியாய்
உம் வார்த்தைகள் எம்மோடு என்றும்...
வாழும்...! வணங்குகிறோம்!

பசுபதீயம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி

குடும்பத்தினர்

# அரசின் ஊழல் தகவல்களை தருவோர் அமைச்சர்களே

## மங்கள சமரவீர குற்றச்சாட்டு



கொழும்பு.செப்.7

"ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் அமைச்சரவையில் அவருக்கு நம்பிக்கை இல்லாதவர்கள் இருக்கிறார் களா என்பது எமக்குத் தெரியாது. ஆனால், அரசின் அமைச் சரவைப் பத்திரங்கள் அமைச் சர்களினூடாகவே எமக் குக் கிடைக்கின்றன."

இவ்வாறு ஐ.தே.கவின் நாடாளு மன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசின் ஊழல், மோசடிகளால் அதிருப்தி அடைந்துள்ள அமைச் சர்கள் அது குறித்து எதிர்ப்பு வெளியிட முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே, அரசின் இந்த மோச டிகள் குறித்து நீங்கள் பேசுங் கள் என்று சில அமைச்சர் மார் அமைச்சரவைப் பத்தி ரத்தை எம்மிடம் வழங்கு கின்றனர்.

இதற்கமைய நாம் நடவடிக் கைகள் மேற்கொண்டு வருகி றோம்.

**மக்களின் பிரச்சினைகளை எம்மால் தீர்க்க முடியாது**

எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு மக்களின் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்க முடியுமே தவிர, அவற்றை எம்மால் தீர்க்க முடியாது.

ஆட்சிக்கு வந்தால் மட்டுமே மக்களின் பிரச்சினைகளை எம்மால் தீர்க்க முடியும். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தான் நாட்டில் உள்ள பிரச்சினை களுக்குத் தீர்வு காண முடியும். அத்துடன், ஆட்சி மாற்றம் ஏற் பட்டால்தான் அரசின் ஊழல், மோசடிகளையும் எம்மால் நிரூபிக்க முடியும் - என்றார். (ச-சி)

# பிள்ளையைத் திருமணம் செய்வதாகக் கூறவில்லை

## மேர்வின் சில்வா மறுப்பு

கொழும்பு.செப். 07

"நான் யாரையும் திருமணத் துக்கோ பூங்காவுக்கோ வரு மாறோ அழைக்கவில்லை. நவநீதம்பிள்ளை விடுதலைப் புலிகளுக்கு ஆதரவளிக்காமல் இலங்கைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று தோரணை யில் மாத்திரமே பேசினேன்" என்று அமைச்சர் மேர்வின் சில்வா கூறியுள்ளார்.

தனது குடும்பத்துக்கும் அமைச் சர் டலஸ் அழகப்பெருமவின் குடும்பத்துக்கும் இடையிலான உறவு குறித்து. டலஸ் மறந்து போய்விட்டார் என்றும் குறிப் பிட்டார் மேர்வின்.

நவநீதம்பிள்ளைக்குத் திருமண அழைப்பு விடுத்தமை தொடர் பில் மேர்வின் சில்வாவின் கருத்தை டலஸ் கண்டித்திருந் தார். அதற்காக அமைச் சரவை யின் சார்பில் தான் மன்னிப் புக்கோருவதாகவும் கூறினார் அவர்.

இதற்குப் பதிலளித்துள்ள அமைச் சர் மேர்வின் சில்வா, தான் ஒரு பௌத்தன் என்றும்,நாட்டுக்கு எதிராக எவராவது கருத்துக் கூறினால் பார்த்துக் கொண்டி ருக்க போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

"யாரையும் திருமணத்துக்கோ பூங்காவுக்கோ வருமாறோ அழைக்கவில்லை. நவநீதம் பிள்ளை விடுதலைப் புலிக ளுக்கு ஆதரவளிக்காமல் இலங் கைக்கு மதிப்பளிக்க வேண் டும் என்று தோரணையில் மாத்திரமே பேசினேன்." என் றார் மேர்வின் சில்வா. (து)

# ஐ.நா. சபையில் மஹிந்தவுக்கு உரையாற்ற நேரம் ஒதுக்கீடு

நியூயோர்க்.செப் 06

ஐ.நா பொதுச்சபையின் 68 ஆவது கூட்டத்தொடரில் ஜனா திபதி மகிந்த ராஜபக்ச முதலா வது நாள் உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

பொதுச்சபைக் கூட்டத்தின் பொதுவிவாதத்தின் முதல் நாள் அமர்வில், முதலாவதாக பிரே சில் ஜனாதிபதியும், அடுத்து அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வும் உரையாற்றவுள்ளனர்.

இந்த அமர்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் உரை யாற் றுவதற்கு நேரம் ஒதுக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, 27ஆம் திகதி உரையாற்றவுள்ளதாக முத லில் அறிவிக்கப்பட்ட இந் தியப் பிரதமர் மன்மோகன்சிங், எதிர் வரும் 28ஆம் திகதி உரை யாற்றுவார் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி வெள்ளை மாளிகையில் மன்மோகன் சிங் சந்திக்கவுள்ளதால், அவ ரது ஐ.நா பொதுச்சபை உரை பிற்போடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உரையாற்ற 24ஆம் திகதி நேரம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அவர் அதில் பங்கேற்பாரா என் பதை இலங்கை அரசு இன்ன மும் உறுதிப் படுத் தவில்லை.

கடந்த ஆண்டும் ஜனாதிபதி பொதுச்சபையில் உரையாற்ற நேரம் ஒதுக்கப்பட்ட போதி லும், கடைசி நேரத்தில் அந்தப் பயணத்தை அவர் கைவிட் டிருந்தார். அவருக்குப் பதிலாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உரையாற்றியி ருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (து)



திருக்கோணமலை நகரசபைக்குரிய வாகனங்களை சுத்திகரிப்பு செய்வதற்கான நிலையம் மொன்று மின்சார நிலைய வீதியிலுள்ள நகரசபையின் வேலைத்தல வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்தை நகரசபைத் தலைவர் க.செல்வராஜா திறந்து வைக்கின்றார். (ச-40)

## வள்ளி திருமணம் இசை நாடக்கம் இன்று

கொழும்பு.செப். 07

நல்லூர் கந்தனின் பெருந் திரு விழாவை முன்னிட்டு துர்க்கா மணிமண்டபத்தில் நடை பெற்று வரும் தெய்வீக இசைய ரங்கு நிகழ்வில் இன்று சனிக் கிழமை மாலை, நாட்டார் வழக் கியல் கழகம் வழங்கும் 'வள்ளி திருமணம்' என்னும் இசை நாடகம் நடைபெறவுள்ளது.

## ரயில் கடவைகள் குறித்து 93 யோசனைகள்

கொழும்பு.செப்.7

பாதுகாப்பற்ற ரயில் கடவை கள் தொடர்பில் 93 யோச னைகள் முன் வைக்கப்பட்டுள் ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த யோசனைகளை பரிசீ லனை செய்யும் நடவடிக்கை கள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பிரபாவின்

தானே?" என்று கேட்டார்கள் அதற்கு நான் இல்லை இல்லை அவர் ஒரு மாவீரன். ஒவ் வொரு வரையும் நாங்கள் பார்க்கும் கோணமே அவர்கள் பற்றிய மதிப்பீட்டை ஏற்படுத்துகிறது. எனது கோணத்தில் அவர் பயங்கரவாதி அல்ல.

கண்டியில் வெள்ளையனை எதிர்த்துப் போராடிய ஹெப்பிற் றிப் பொல திஸ்ஸவே என்ப வரை ஆங்கிலேயர்கள் பயங் கரவாதிஎன்று பிரகடனம்செய்து அவரை தண்டித்தார்கள். ஆனால் இப்போது அவரை தேசிய வீரன் என்று பிரகடனப் படுத்தி சிலை வைத்து சிங்கள மக்கள் கொண்டாடுகிறார்கள். வெள்ளையரின் பார்வையில் பயங்கரவாதியாகத் தெரிந்த வீர ஹெப்பிற்றிப்பொல திஸ்ஸ இப்போது சிங்கள மக்களின் பார்வையில் இலங்கையின் விடுதலைக்காகப் போராடிய தேசிய வீரனாகத் தெரிகின் றான். அதேபோலத்தான் பிர பாகரனும் எனக்கு விடுதலை வீரனாகத் தெரிகின்றான்." என்று பதில் கூறியிருந்தேன். இந்த நேர்காணலில் நான் கூறிய விடயங்கள் பல சிங்கள ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரமாகின. இத னைப் பார்த்த அமைச்சர் டிலான் பெரேரா " பதுளையில் மேல் நீதிமன்ற நீதிபதியாக விக்னேஸ் வரன் இருந்த போது அங்கே சட்டத்தரணியாகப் பணியாற்றி இருக்கிறேன். அப்போது அவர் வழங்கிய தீர்ப்புகளை தலை சாய்த்து ஏற்றுக்கொண்டிருந் தேன். ஆனால் இப்போது அவர் பிரபாகரனை வீரன் என்று கூறுவதால், அவர் முன் னர் வழங்கிய தீர்ப்புகளையும் மறுபரிசீலனை செய்ய வேண் டும் என்று கருதுகி றேன்." என்று கருத்து வெளி யிட்டிருந் தார். அவருக்கு நான் ஒன்று கூறுகிறேன். " என்னுடைய தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் எதுவு மில்லை. பிரபாகரன் மாவீரன் என்று முதலில் ஏற்றுக் கொண் டவர் உங்களின் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக் ஷ தான் எனவே நீங்கள் தான் (டிலான் பெரேரா போன்றோர்) உங்க ளின் நிலைப்பாட்டை மறு பரிசீலனை செய்ய வேண்டும் - என்றார். (ங-2)

### நவியின்

இதில் உரையாற்றிய எதிர்க்கட் சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க, "நாட்டு மக்களின் சுதந்தி ரம் பறிக்கப்பட்டதுடன், கருத்து வெளியிடும் சுதந்திரமும் பறிக் கப்பட்டுள்ளது. இலங்கையில் எதேச்சாதிகார ஆட்சிதான் இடம்பெறுகிறது என ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளரும், ஐ.நா. செயலாளர் நாயகமும் வெளிப்படையாகக் கூறியுள்ளனர்" என்றார். (து-சி)

### இறந்தே

சத்திரசிகிச்சை மூலம் குழந் தையை வெளியே எடுக்க வேண்டும் என்று தெரிவித் தார். அன்று பகல் 10 மணிக்கு சத்திரசிகிச்சை செய்யப்படும் என்றும் சொன்னார்' என்கின் றனர் உறவினர்கள்.

ம்று நாள் முற்பகலே சத்திரசி கிச்சை என்பதால் முதல் நாள் (26 ஆம் திகதி) இரவு 10 மணி யிலிருந்து குறித்த பெண் ணுக்கு உணவு வழங்குவது நிறுத்தப்பட்டது. எனினும் 27 ஆம் திகதி இரவு 11.30 மணிய ளவிலேயே சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் குழந்தை இறந்தே பிறந்தது.

'மருத்துவர் சிறிதரன் இல்லாத காரணத்தால் மருத்துவர் சுகந் தனே சத்திரசிகிச்சையை மேற் கொண்டார். தான் பரிசோ தனை ஏதுவும் செய்ய வில்லை. சத்திரசிகிச்சை செய்யச் சொன் னதால் செய்தேன் என்று அவர் எங்களிடம் கூறினார்' என்கின்றனர் உறவினர்கள்.

குழந்தை இரண்டு நாள்க ளுக்கு முன்னரே இறந்து விட் டதாக வைத்தியசாலையில் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகப் பெற்றோர் கூறுகின்றனர். ஆனால் 27 ஆம் திகதி முற் பகல் பரிசோதித்த மருத்துவர் சிறிதரன் தாயும் சேயும் நலன் என்று கூறியிருந்தார் என்றும் சொல்கிறார்கள்.

சத்திரகிச்சைக்கு முன்னதாகக் கூட தனது பிள்ளை வயிற்றில் உதைப்பதை தான் உணர்ந் தார் என்று குறித்த பெண் கூறு கின்றார். இதனையடுத்தே தமது குழந்தையின் இறப்பு குறித்து விசாரணை நடத்து மாறு பெற்றோர் பொலிஸாரி டம் கேட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்க யாழ். போதான வைத்தியசாலை பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா மறுத்துவிட்டார். நீதிமன்றில் இது தொடர்பான விசாரணை நடத்த இருப்பதால் கருத்துத் தெரிவிக்கஅவர்விரும்பவில்லை. குழந்தையின் சாவுக்கு மருத் துவர்களின் கவனவீனம் அல் லது அலட்சியம் காரணமாக இருக்கலாம் என்ற கோணத் தில் பொலிஸார் தீவிரமாக விசா ரணை நடத்தி வருகின்றனர். (உ-4)

### இலங்கையின்

களையே கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞா பனமாக வெளியிட் டுள்ளது. இது அரசமைப்புக்கு முரணா னதாகும். எனவே, அரசு கூட்டமைப்பினரை கைதுசெய்ய வேண்டும் என் றும் அவர் வலி யுறுத்தினார்.

"தாயகபூமி, சுயாட்சி போன்ற காரணிகளை அன்று புலிகளே முன் வைத்திருந்தனர். இன்று வரலாற்றை தமிழ்க் கூட்ட மைப்பு திரிபுபடுத்தியுள் ளது. வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகபூமியல்ல.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் தங்களின் பாதுகாப் புக்காக பிரதேசங்களைப் பிரித் தனர். இதனை அடிப்படையா கக் கொண்டே செல்வ நாயகம் முதல் இன்றுவரை இனவாதக் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன" என்றும் எல்லா வல மேதானந்த தேரர் சுட்டிக் காட்டினார்.

"வடக்கில் அரசு முன்னெடுத் துவரும் அபிவிருத்தித் திட்டங்க ளுக்குச் சிங்கள மக்கள் எதிர்ப்பை வெளியிடவில்லை. ஆனால், கூட்டமைப்புத்தான் தமிழ் மக்களை இருண்ட யுகம் நோக்கி மீண்டும் அழைத் துச் செல்ல முயற்சிக்கின்றது. தமிழர்கள் இதற்கு ஏமாறக் கூடாது. புலிகளின் கொள்கை களைப் பிரதிபலிக்கும் கூட்ட மைப்பின் தேர்தல் அறி விப்பை நாம் நிராகரிக்கின் றோம்" என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார். (து-சி)

### சுவ-ர மைப்பின்

அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் மிரட்டி வருகின் றனர்.

இது இவ்வாறிருக்க, வன்னி யில் ஒட்டப்பட்டுள்ள கூட்டமைப்பு வேட்பா ளர்களின் சுவரொட்டி களைக் கிழித்தெறியும் அடா வடிச் செயலிலும் இராணுவப் புலனாய்வாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் தேர்தல் செய லகத்தில் அமைக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுப் பிரிவுக்கு நாம் எழுத்து மூலம் அறிவித்துள் ளோம்" - என்றார். (து-சி)

### நாவற்குழியில்

அளவைத் திணைக்கள அதிகா ரிகள் வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் நாவற் குழியில் நில அளவைப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

நாவற்குழியில் தங்கியுள்ள 60சிங்களக் குடும்பங்களுக்கு மாத்திரம் காணிகள் பகிர்ந்த ளிப்பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகத் தெரிய வரு கின்றது.

இதேவேளை தென்மராட்சி பிரதேச செயலகத்திடம் 182 தமிழ் சிங்களக் குடும்பங் களுக்கும் மாவட்ட செயலங் களுக்கும் காணிகளை பங் கிட்டு வழங்குதாறு தேசிய வீடமைப்பு அதிகார சபை வேண்டுகோள் விடுத் திருந் தமை குறிப்பிடத்தக்கது. (து-5)

### ஐ.நா அலுவலகம்

சிகிச்சைக்காக, லௌசான் பல் கலைக்கழக மருத்துவமனைக்கு ஹெலி மூலம் கொண்டு செல் லப்பட்டார். எனினும் மாலை 4.15 மணியள்வில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந் தார்.

ஈரானியர்கள் அந்தப் பகுதியில் போராட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

தீக்குளித்த இடத்தில், விடுத லைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவரின் நினைவுச் சின்னம் ஒன்று காணப்பட்ட தாகச் சுவிஸ் ஊடகங்கள் தெரி வித்துள்ளன.

மரணமான செந்தில்குமரன், ஈழத் தமிழர்களுக்கு ஆதர வாகப் புலம்பெயர் தமிழர்க ளால் நடத்தப்பட்ட போராட்டங் கள் அனைத்திலும் பங்கேற்ப வர் என்றும், அமைதியான சுபாவம் கொண்டவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (து)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 7
யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் அனுமதியுடன் கலட்டி நியூ ஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும் நியூஸ்ரார் பிரிமியர் லீக் '20/20' கிரிக்கெட் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

காலை 8 மணி
வை.எம்.எச்.ஏ. விளையாட்டுக் கழக அணி எதிர் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி.

காலை 11 மணி
பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி எதிர் ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணி.

பிற்பகல் 2 மணி
விக்டோறிஸ் விளையாட்டுக் கழக அணி எதிர் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகஅணி. (ற-23)

+++++

யாழ்ப்பாணம், செப். 7
யாா.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவாலி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் நேசராஜா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப 3.30 மணி
அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை ஐக்கியவிளையாட்டுக் கழகம். (ற-23)

+++++

மாங்குளம், செப்.7
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது50ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று மோதவுள்ள அணிகள்:

பிற்பகல் 4மணி
புத்தூர் விக்னேஸ்வரா அணி எதிர் பொற்பதி 'ஏ' அணி.


பிற்பகல் 4.45 மணி
வல்வெட்டி கருணாகரன் அணி எதிர் உரும்பிராய் சென். மைக்கல் அணி. (ற-422)

+++++

யாழ்ப்பாணம், செப். 7
யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப 3.45 மணி
அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் எதிர் தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம்.

பி.ப 4.45 மணி
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் மயிலங்காடு ஞான கலா விளையாட்டுக் கழகம். (ற-23)



2018 ஆம் ஆண்டு பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளுக்கான வீர.வீராங்கனைகளுக்கான தெரிவுகள் தற்போது நடைபெற்று வருகின்றன. தெரிந்தெடுக்கப்பட்ட வீர. வீராங்கனைகளுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சிகள் கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் வீராங்கனை ஒருவருக்கு விளையாட்டு அமைச்சின் வளவாளர் சுசந்திகா ஜெயசிங்க பயிற்சிகளை வழங்குகின்றார். (ற-23-433)

## பெரு விளையாட்டு இன்று



வவுனியா, செப்.7
வவனியா வடக்கு பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் பெரு விளையாட்டுக்கள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும், காலை 9 மணி முதல் புளியங்குளம் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
இன்றையதினம் ஆண், பெண்களுக்கான உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பனவும்-நாளை ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கான கிரிக்கெட், வலைப்பந்தாட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.
அதில் வவுனியா வடக்குப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அனைத்துக் கழகங்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சஜிதரசீலன் கேட்டுள்ளார். (ற-400)

# மட்டுவில் ஐங்கரன் கரப்பந்துத் தொடர் இறுதியாட்டங்கள் இன்று



கச்சாய் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணியினர்



மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியினர்



ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக அணியினர்



ஆவரங்கால் இந்து விளையாட்டுக் கழக அணியினர்

யாழ்ப்பாணம், செப். 7
மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டம், தென்மராட்சி பிரிவு அணிகளுக்கு இடையே மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று சனிக்கிழமை மட்டுவில்ஐங்கரன்விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்துஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.
தென்மராட்சி பிரிவு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கச்சாய் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இறுதியாட்ட நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிறப்பு விருந்தினர்களாக யர்ழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவர் கி.மனோகரன், ஜே/315 பிரிவு கிராம சேவையாளர் க.வாமதேவன், ஜே/312 மட்டுவில் கிராம சேவையாளர் செ.சிவசுப்பிரமணியம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக சமூக சேவையாளர் செ.கனகலிங்கம், கலுவம் வீரகத்தி விநாயகர் ஆலய செயலாளர் சி.செல்வராசா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-23)


## நவசக்தி உதைபந்துத் தொடர்: போட்டி முடிவுகள்

மாங்குளம், செப்.7
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் தமது 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகம், நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் என்பன வெற்றி பெற்றுள்ளன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் கலட்டி ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக் கழகம் மோதியது. அதில் கலட்டி ஐக்கிய அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
மற்றைய ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்துஅல்வாய் நண்பாகள் அணிமோதியது. அதில் 3:1 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றி பெற்றது. (ற-422)

++++

நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்துத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் 'பி' அணி வெற்றி பெற்றுள்ளது.
நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென். சேவியர் 'பி' அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞா அணி மோதியது.
இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைக்காமல் ஆடினர். இருஅணி வீரர்களும் எதிரணியின் கோல்காப்பாளர்களிற்கு அச்சுறுத்தும் தமது திறமையை வெளிப்படுத்தினர். அதனால் இடைவேளைக்கு முன்னரும் பின்னரும் இரு அணிகளும் கோல் எதனையும் போட முடியவில்லை.
அதையடுத்து வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையில் சென்.சேவியர் 'பி' அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ற-422)





# அசத்தியது சிம்பாப்வே போராடுகிறது பாகிஸ்தான்

சிம்பாப்வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், சிம்பாப்வே அணிக்குமிடையிலான 2 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரின் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் முடிவில் சிம்பாப்வே அணி முன்னிலையைப் பெற்றுள்ள போதிலும், பாகிஸ்தான் அணி தொடர்ந்து போராட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

7 இலக்குகளை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த சிம்பாப்வே அணி சகல இலக்குகளையும் இழந்து 327 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக மல்கொம் வோலர் 70 ஓட்டங்களையும், எல்ற்றன் சிக்கும்புரா 69 ஓட்டங்களையும், ஷீகன்டர் ராஸா 60 ஓட்டங்களையும், வியூசி சிபன்டா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 95 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளைக் கைப்பற்றினார். அத்துடன் ஜுனைட் கான் 2 இலக்குகளையும், றஹாத் அலி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

78 ஓட்டங்கள் பின்தங்கியிருந்த நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணி, மூன்றாம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அதன்படி 6 இலக்குகள் கைவசமுள்ள நிலையில் அவ்வணி 90 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

3 இலக்குகளை இழந்து 23 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறிய பாகிஸ்தான் அணி சார்பாக 4ஆவது இலக்குக்காக யுனீஸ் கான், மிஸ்பா உல் ஹக் இருவரும் 116 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக யுனீஸ் கான் ஆட்டமிழக்காமல் 76 ஓட்டங்களையும், மிஸ்பா உல் ஹக் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக ரினாஷே பணியங்கர 2 இலக்குகளையும், ரென்டாய் சத்தர, ஷிங்கி மஸகட்ஸா இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 249 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஜுனெஜாவின் சதத்தால் மீண்டது இந்தியா

நியூசிலாந்து 'ஏ' அணிக்கெதிரான நான்கு நாள் டெஸ்ட் ஆட்டத்தில் மன்பிரித் ஜுனெஜா சதம் அடித்து கைகொடுக்க இந்திய 'ஏ' அணி சரிவிலிருந்து மீண்டது.

இந்தியா சென்றுள்ள நியூசிலாந்து 'ஏ' அணி இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. மூன்று நாள்கள் நடந்த முதல் டெஸ்ட் ஆட்டம் சமநிலை ஆனது. நான்கு நாள்கள் நடக்கும் 2ஆவது டெஸ்ட் ஆட்டம் ஆந்திர மாநிலத்தில் நடைபெற்று வருகிறது.

முதல் இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி 437 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 2 இலக்குகள் இழப்புக்கு 94 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஜெகதீஷ் 40 ஓட்டங்களும், மன்பிரித் ஜுனெஜா 43 ஓட்டங்களும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸை தொடர்ந்த ஜெகதீஷ், ஜுனெஜா இணை அசத்தலாக ஆடியது. மூன்றாவது இலக்குக்காக 197 ஓட்டங்கள் சேர்த்த போது ஜெகதீஷ் 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சதம் அடிக்கும் வாய்ப்பை இழந்தார்.

அடுத்து வந்த அணித்தலைவர் அபிஷேக் நாயர் அரைசதம் கடந்து 57 ஓட்டங்கள் எடுத்தார். மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் முதல் இன்னிங்ஸில் இந்திய அணி 7 இலக்குகள் இழப்புக்கு 408 ஓட்டங்கள் எடுத்து 29 ஓட்டங்கள் பின்தங்கி இருந்தது.

அபாரமாக ஆடிய மன்பிரித் ஜுனெஜா ஆட்டமிழக்காமல் சதம் கடந்து 178 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து சார்பில் பிரேஸ்வெல் 3 இலக்குகளையும், ஆஸ்லே 2 இலக்குகளையும் வீழ்த்தினர். 4 நாள்கள் கொண்ட டெஸ்ட் தொடர் என்பதால் இந்த ஆட்டமும் பெரும்பாலும் சமநிலையிலேயே முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

# மோடி குற்றவாளியே

## விசாரணைக் குழு அறிக்கை



நிதிமுறைகேடு தொடர்பான விசாரணைகளில் லலித் மோடி குற்றவாளி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரை உருவாக்கிய லலித் மோடி நிதிமுறைகேடுகளில் ஈடுபட்டார் என்ற காரணத்துக்காக 2010ஆம் ஆண்டு இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

தற்போது லண்டனில் வசித்து வரும் இவர் மீதான முறைப்பாடுகள் குறித்து விசாரணை குழு 133 பக்க அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அதில், அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியது, நிதிமுறைகேடு மற்றும் ஐ.பி.எல். தொடருக்கெதிராக, புதிய தொடரை தொடங்க திட்டமிட்டது போன்ற பல்வேறு முறைகேடுகள் தொடர்பாக மோடி மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

விசாரணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 25ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள இந்திய கிரிக்கெட் சபையின் சிறப்புப் பொதுக்குழுக் கூட்டத்தில் லலித் மோடிக்கு ஆயுட்கால தடை விதிக்கப்பட அதிக வாய்ப்புகள் உள்ளன என்று கூறப்படுகின்றது. (ற)

# சச்சின் 200 ஆவது டெஸ்ட்டுக்கு மும்பைதான் பொருத்தமானது

## கங்குலி கருத்து

இந்தியக் கிரிக்கெட் அணியின் சாதனை நாயகன் சச்சின் டெண்டுல்கர் தனது 200 ஆவது டெஸ்ட் ஆட்டத்தை மும்பையிலேயே ஆடவேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளார் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி



இந்தியாவின் நட்சத்திர கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் சதசாதனை உள்ளிட்ட பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். கிரிக்கெட்டில் சகாப்தம் என்று அழைக்கப்படும் இவர் 198 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி உள்ளார். விரைவில் 200ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடி புதிய மைல்கல் சாதனையை படைக்க உள்ளார்.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்யும்போது அவர் 200ஆவது ஆட்டத்தில் விளையாடும்படி அட்டவணை இருந்தது. ஆனால், தற்போது சச்சின் 200வது டெஸ்ட்டை இந்திய மண்ணில் விளையாட வேண்டும் என்று விரும்பிய இந்தியக் கிரிக்கெட் சபை மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 2 டெஸ்ட், 3 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரை ஏற்பாடு செய்துள்ளது.



இதையடுத்து சச்சின் டெண்டுல்கர் 200வது டெஸ்ட்டை இந்திய மண்ணில் விளையாடுகிறார். ஆனால் எந்த மைதானத்தில் விளையாடுவார் என்று இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்தநிலையிலேயே கங்குலி இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

"டெண்டுல்கர் 'தனது 200 ஆவது ஆட்டத்தை மும்பையில் விளையாடினால் பொருத்தமாக இருக்கும். அங்குதான் அவரது உறவினர்கள், நண்பர்கள் அதிகம் உள்ளனர் மும்பைதான் அவருக்கு உணர்வுபூர்வமாக இருக்கும். அவரது இந்த சாதனையை முறியடிக்க முடியாது. அவர் இந்த பொன்னான வாய்ப்பை அனுபவித்து விளையாட வேண்டும்.

டெண்டுல்கரின் ஓய்வுக்கு பின்பு அந்த இடம் வெற்றிடமாகவே இருக்கும். நாம் நிறைய வீரர்களின் ஓய்வை பார்த்து இருக்கிறோம். பல வீரர்கள் வருவார்கள், போவார்கள். ஆனால் சச்சின் போன்ற வீரரை பார்க்க முடியாது என்றும் அவரது இடத்தை நிரப்புவது மிகவும் கடினம்" என்றும் தெரிவித்துள்ளார் அவர். (ற)

# நாடு கடந்த தமிழீழ அரசுடனும் இலங்கை அரசு பேசத் தயார்

நாடு கடந்த தமிழீழ அரசுடன் கூட பேச்சு நடத்த இலங்கை அரசு தயாராக உள்ளது. போரின் பின் நாட்டின் நல்லிணக்கத்திற்காக அரசு திறந்த கொள்கையுடன் செயற்பட்டாலும் சர்வ தேசம் அவற்றைத் தவறாக அர்த்தப் படுத்தியே பார்க்கின்றது. இவ்வாறு தேசிய பாதுகாப்பு கொள் கைகள் மற்றும் பயங்கரவாத ஒழிப்புத் தொடர்பான ஆலோசகர் ரொஹான் குணரட்ண தெரிவித்தார். சர்வதேச பாதுகாப்புச் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## ரொஹான் குணரட்ண தெரிவிப்பு

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப் பட்டனர் என்பது போலிப்பிரசாரம். 2009 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரை வடக்கில் 7 ஆயிரம் பேர் மட்டுமே கொல்லப்பட்டனர். அதில் 5 ஆயிரம் பேர் புலி உறுப்பினர்கள் என்பதே உண்மை. புலம் பெயர்ந்து வாழும் புலிகள் மீண்டும் இலங்கைக்குள் வர சந்தர்ப்பம் தேடுவதுடன் 10 வீதமான தமிழர்கள் சர்வதேசத்திலுள்ள புலிகளுடன் தொடர்பில் உள்ளனர். எனவே இலங்கைக்கு பயங்கரவாத அச்சுறுத்தல் குறைவு என்று கூற முடியாது.- என்றார். (ச-10)

**சவுதி ராஜ்ஜியத்தில் சிட்டி கிளினராக பணிபுரிய அரியதோர் சந்தர்ப்பம்**

சாப்பாடு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து அனைத்தும் முற்றிலும் இலவசம்.
ஒரு மாதத்துக்குள் பயணம்
(35209) (10,16,14) தொடர்புகளுக்கு: LANKA VOICE, 077 792 9475

**மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு**

அதி உயர் சம்பளம், தங்குமிடம், மருத்துவம் இலவசம்.
பரமாளிகை (திபெட்ர்) கிளினர் - 04
வீட்டுப்பணிப் பெண் - 01 பாமசி பைக்கிங் வேலை - 02
Secretary Grad (நிறுவனம்) - 02
இரண்டே வாரத்தில் பயணம்
(35248) (10,16,14) தொடர்புகளுக்கு: LANKA VOICE, 075 065 0084

**இணையத்தள வடிவமைப்பு கற்கைநெறி**
Professional Web Designing
Professional Web Development php
**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
Call: 021 222 0261 | 077 9471 771
இல 214, யாழ்-மானிப்பாய் வீதி வைத்தீஸ்வரா கல்லூரி அருகில் webster networks

**AAT** ஆரம்பநிலை (Foundation) இடைநிலை (Intermediat)
புதிய பிரிவுகள் ஆரம்பம் 08 September 2013 ஞாயிற்றுக்கிழமை
G.C.E. A/L வர்த்தகப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு ஆரம்பநிலை விலக்களிப்பு (Exemptions) இக் கற்கை நெறியைத் திறமையான முறையில் பூர்த்தி செய்வோருக்கு வேலை வாய்ப்புகளும் காத்திருக்கிறது.
பதிவுகளுக்கு முந்துங்கள்
Spectra Skills, 19, Stanley Road, Jaffna. Tel: 021 222 1422, 021 222 1423 (31531) (10,16,14)

**NEW SCIENCE WORLD**
VICTORY MUST
Navalar road junction , Brown road , Jaffna.
Web : www.physicsocean.com Email : info@physicsocean.com
For 2013A/L...... Day Classes
Physics : R.Kugen & R.Kumaran
Chemistry : Dias, S.Sivakumar
Biology : S.Ponthivakaran & V.Umashankar
From 09-09-2013(MONDAY) at 09.30 am

**Day Class Physics**
By:M.KARUNA B.Sc (Spl)
(Multimedia மூலம்) மீட்டல் மாணவர்களுக்கு சிறப்பான தெரிவு 10-09-2013 செவ்-04.00pm APTECH மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 0776183064

**Sky Computers (Pvt) Ltd**
TP: 021-222-1417
IELTS (PET,FCE) வகுப்பு ஆரம்பம் 09-09-2013
கணினி, சிங்களம், Mobile Repairing வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
89, கண்டி றோட், யாழ்ப்பாணம். (கச்சேரிக்கு அருகாமையில்)

**APSS International**
இலவச பொறியியல் கருத்தரங்கு — City & Guilds Approved Centre
நாளை 8 / 9 / 2013 (ஞாயிற்றுக்கிழமை)
யாழ்ப்பாணம் — DMI COMPUTER EDUCATION, No. 113 கன்னாதிட்டி வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) நேரம் – காலை 9.30 மணி
நெல்லியடி — DMI COMPUTER EDUCATION, M.M.V வீதி, (மத்திய மகா வித்தியாலயம் அருகில்) நேரம் – மாலை 3.30 மணி
கொழும்பிலிருந்து வருகைதரும் உயர்கல்வி ஆலோசகர்களின் ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.
பதிவுகளுக்கு. உங்கள் பெயரை 0777240707 க்கு SMS செய்யுங்கள்
DMI COMPUTER EDUCATION

# மரண அறிவித்தல்

## சமூகமூர்த்தி சோதிடஞானி
## செல்லையா பாண்டித்துரை

(ஓய்வுபெற்ற இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் அமைப்பாளர், அகில இலங்கை சமாதான நீதிவான், சத்தியப்பிரமாண மொழிபெயர்ப்பாளர்)



மலேசியா காஜான் என்னும் இடத்தைப் பிறப்பிடமாகவும் நீலியம்பனை மல்லாகத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் இல.14A, முதலாம் ஒழுங்கை, பட்டாணிச்சூர் புளியங்குளத்தை வாழ்விடமாகவும் கொண்ட செல்லையா பாண்டித்துரை 06.09.2013 வெள்ளிக்கிழமை வவுனியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் யோகபாக்கியத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் வல்லிபுரம் செல்லையா-செல்லமுத்தம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான மாதகலைச் சேர்ந்த வன்னித்தம்பி உடையார்- செல்லம்மா தம்பதியரின் மருமகனும், கஜநதி (முன்னாள் உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர், ஆசிரியர், வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), நிகிந்தா, (முகாமைத்துவ உதவியாளர் உள்நாட்டு இறைவரித் திணைக்கள தலைமையகம், கொழும்பு), குகஸ்ரீசத்திய சாயிராஜ் (V4Greenz MicroIrrigation and Landscaping) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2013) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10 மணியளவில் தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

14A, முதலாம் ஒழுங்கை
மன்னார் வீதி,
பட்டாணிச்சூர் புளியங்குளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 024 492 0659
(35246) (3.6.11)

**SUBRA** சித்தன்கேணி கிளை வட்டுக்கோட்டை
2014 புலமைப்பரிசில்- புதிய பிரிவுகள் ஆரம்பம் 08.09.2013 ஞாயிறு மாலை 4 மணி
ஒரு பிரிவில் 50 மாணவர்கள் மட்டுமே
வாரத்தில் இரண்டு பரீட்சைகள்
புலமைச்சுடர், வெற்றிப்படி
சிங்களம் தனிப்பிரிவாக நடைபெறும்
மாதாந்தம் பரீட்சைப் புள்ளிகள் பெற்றோருக்கு அனுப்பிவைக்கப்படும்.
வழமையான ஆசிரியர் குழு
இன்று நேற்று அல்ல என்றென்றும் கல்வி உலகின் முன்னோடி SUBRA

**பொது, ஆங்கில ஆசிரியர் தேவை**
விண்ணப்பிக்க விரும்புவோர் நேரடியாக சமூகம் தரவும்
காலம்: 12.09.2013 (வியாழன்) 3.30P.M.
தொடர்பு: திருநெல்வேலி சிமாட் கிட்ஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு.
077 656 5258
077 386 7458
(31633) (10,16,14)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES** BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)
Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available..
Batch1 : 13.7.2013
Batch2 : 15.7.2013
Batch3 : 20.7.2013
Batch4 : 22.7.2013

**மாதாந்தம் 250000/- வருமானம், உணவு, இருப்பிடம், ரிக்கெற் இலவசம்**
முற்றிலும் புதிய வரவு...
6 மாதத்திற்கு ஒரு தடவை இலவசமாக ஊர்வந்து போகலாம்.
2 வருட விசா, நீடிக்கப்படக் கூடிய உத்தரவாதம்.
வாரத்தில் 4 பேர் மட்டுமே இணைக்கப்படுவர்
டென்மார்க்கில் படிக்க, உழைக்க அரிய வாய்ப்பு.
(காலை 08.30 - மாலை 06.30 வரை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.